கல்கி

KALKI 7-4-1974
50 காசு





CMLB.30.162 R TM

விற்பனை ஏஜெண்டுகள்: M/S. ஏ. ஜே. எஸ். படேல் அண்ட் கம்பெனி, 5, கிடங்குத் தெரு, சென்னை-1, 76, கிழக்கு மாரட் தெரு, மதுரை. அதிகாரம் பெற்ற சில்லறை விற்பனையாளர்கள்: M/S. வெங்கடேஷ் 234, 244, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-1. M/S. ஜுவலீஸ், 26-பி, மேல கோபுரத் தெரு, மதுரை. M/S. ஆனந்த் டெக்ஸ்டைல்ஸ், பெரிய கடை வீதி, திருச்சி-8.



பச்சிள மேனியைக் காப்பதற்கே
பாப்பா காட்டும் வழி உமக்கே

ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்—

மேனியிலே அதி நுட்பமான பகுதி- உங்கள் முகத்தின் சருமம்; பச்சிளம் தளிர் போன்ற அதனைப் பாதுகாக்கத் தக்க பவுடர் எது? பாப்பாவின் மேனியைக் காப்பாற்றும் பூப்போன்ற மென்மையான பவுடரே தேவை. மழமழ மென்மையோடு குளுமையாக வைத்திருப்பதற்கு — ஜான்ஸன்ஸ் பேபி பவுடர். எங்கெங்குமே, எழில்கொஞ்சும் இளம் செல்வியர் உபயோகிக்கும் பவுடர்.

பிறந்த நாளைப் பிஞ்சு மென்மையோடு
உங்கள் மேனி மிளிரப் பேருதவி

Johnson & Johnson*



லின்டாஸ்-J&J. 4-140 TM

ஆமாம், நம்முடையதேதான்—
பார்க்க அழகாயில்லே?



இன்று பாங்க் ஆ:ப் இந்தியா என்னே சொந்த வண்டியோட்டியாக ஆக்கிவிட்டது. இனி நான் வேறு ஒருவருக்காக உழைக்க வேண்டியதில்லே!

பாங்க் ஆ:ப் இந்தியா

கல்கி



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

பொருளடக்கம்

பிரமாதீச, பங்குனி 25, ■ ஏப்ரல் 7, 1974

கல்கி சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00



"ட்ரூ-டோன்" சமமாகவும் சீராகவும் பரவும்!"
திருமதி வின்னி சங்
"ட்ரூ-டோன்" பாதுகாப்பானது, எளிதாக உபயோகிக்கலாம்"
ஜென்னி லீ
"ட்ரூ-டோன்" வழங்கும் பளபளப்பான இயற்கை வண்ணம் பார்க்க பிரமிப்பூட்டுவது"
"ட்ரூ-டோன்" உங்கள் கேசத்திற்கு அதன் இயற்கையான வண்ணத்தை வழங்குகிறது"
மாண்டி
HELENE CURTIS
TRU - TONE
பெரிய மற்றும் நடுத்தரமான பாக்குகளில் கிடைக்கிறது
ARMS-HC-036-140 TAM
முன்னணியில் நிற்கும் கேச அலங்கரிப்பாளர்கள் ஒருமித்து சிபாரிசு செய்வது
ஹெலென் கர்ட்டிஸ்
ட்ரூ-டோன்
ஹேர் டை
ஹெலென் கர்ட்டிஸ் ஆண்களுக்கும் பெண்களுக்குமென, உலகிலேயே மிகப் பெருமளவு விற்பனையாகும் கூந்தல் சாயம்.
ட்ரூ-டோன் கறை நீக்கியும் கிடைக்கிறது.

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

மலர் 33 -- இதழ் 36

புதுவை நாடகம்

புதுவையில் அ. தி. மு. க. அமைச்சரவை சட்டசபை கூடிய மறுநாளே கவிழ்ந்துவிட்டது. அங்கு சட்டசபை கலைக்கப்பட்டு, ஜனாதிபதி ஆட்சி மீண்டும் புகுத்தப்பட்ட நிலையைக் கண்டு உண்மை ஜனநாயகத்தில் பற்றுள்ள எவரும் சந்தோஷப்பட மாட்டார்கள்.

ஜனநாயகத்தைக் குலைக்க அரசியல் கட்சிகள் நடந்துகொண்ட விதத்தைப் பாரபட்சமின்றி நிலைமையைக் கவனிக்கும் எவரும் பாராட்ட மாட்டார்கள். அ. தி. மு. க.வின் அரசியல் அவிவேகத்தை முதலில் சொல்ல வேண்டும். தனது கட்சிக்கு மெஜாரிட்டி பலம் இல்லை என்ற உண்மையை நன்றாகவே உணர்ந்திருந்த இக் கட்சி, எந்த விதத்திலாவது எதிர்க் கட்சியாகிய காங்கிரஸ் கட்சியின் ஆதரவை ஓரளவுக்காவது 'பெற முயற்சி செய்திருக்க வேண்டும். சபாநாயகர் பதவிக்கும் உப சபாநாயகர் பதவிக்கும் தனது கட்சி அங்கத்தினரைப் பிரேரணை செய்து தேர்ந்தெடுத்ததை விட, எதிர்க் கட்சியிலிருந்து ஒருவரை நியமித்திருந்தால் நிலைமை வேறு விதமாக மாறியிருக்கும். தனது வோட்டுப் பலத்தைக் குறைக்காமல், எதிர்க் கட்சியின் வோட்டுப் பலத்தைக் குறைக்க நடைமுறையில் இது உதவியிருக்கும் என்பதுடன் அ. தி. மு. க. வின் அரசியல் பண்பையும் வெளிக் காட்டியிருக்கும். அரசியல் அனுபவமின்மை மட்டும்தான் இதற்குக் காரணமா? அல்லது தனிமையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நம்பி மோசம் போனார்களா?

இரு காங்கிரஸ் கட்சிகள் நடந்து கொண்ட விதத்தைக் குறித்தும் விசனிக்கவே வேண்டியிருக்கிறது. மந்திரி சபை கவிழ்ந்த தினத்துக்கு இரண்டு நாட்கள் முன்னர்தான் ஸ்ரீமதி இந்திரா, மந்திரி சபையைக் கவிழ்ப்பது ஒன்றே நோக்கமாக எதிர்க் கட்சி பாண்டியில் இயங்காது என்று பட்டவர்த்தனமாகக் கூறி ஜனநாயகப் பற்றுள்ளவர்களை மகிழச் செய்தார். சொல்லி வாய் மூடுவதற்குள் அவர் கட்சியினர் பாண்டிச்சேரியில் நேர் விரோதமான முறையில் நடந்து கொண்டிருக்கின்றனர். அமைச்சரவை அமைக்க வேண்டும் என்று இரு காங்கிரஸும் — தேர்தலில் இணைந்திருந்தும் — ஆரம்பத்திலிருந்தே கோரவில்லை. பொறுப்புள்ள எதிர்க் கட்சியாகவே பணியாற்றப் போவதாகத்தான் அவர்கள் சொல்லி வந்தனர். இந்த நிலையிலிருந்து விலகி, அமைச்சரவையைக் கவிழ்க்க முற்பட்டது அவர்களுடைய ஜனநாயகப் பண்பையும் அவர்களுக்குள்ள அரசியல் முதிர்ச்சியையும் எடுத்துக் காட்டவில்லை. அவர்களுடைய கௌரவம் இந்த நடவடிக்கை மூலம் உயர்ந்துள்ளது என்று சொல்வதற்கில்லை.

தி. மு. க.வின் நடவடிக்கை அதிவிசித்திரம். காங்கிரஸ் கட்சிகளும், தி. மு. க. வும் பகிரங்க எதிரிகள். தேர்தல் பிரசாரங்களில் ஒருவர் மீது ஒருவர் அள்ளி வீசிக்கொண்ட வசைகள் அளவில்லாதன. இந்த நிலைமையில் அவர்களுடன் சேர்ந்து வோட்டுப் போட்டு, இரு தி. மு. க. வோட்டுகள் மூலமே அமைச்சரவை கவிழ்ந்தது என்ற நிலைமையை உண்டாக்கியுள்ளனர். இந்தக் கூடா நட்பை வெட்கக்கேடு என்றுதான் வர்ணிக்க வேண்டும்.

லெப்டினன்ட் கவர்னர் நடந்து கொண்ட விதத்தை முழு மனத்துடன் பாராட்ட வேண்டும். எந்தக் கட்சிக்கும் பெருவாரியான பலம் இல்லை என்ற நிலைமையிலும் ஜனநாயகம் இயங்க ஒரு சந்தர்ப்பம் அளித்தது அவரது நடுநிலைமையைக் காட்டுகிறது.

சிறுபான்மைக் கட்சி என்பதனால் அ. தி. மு. க. அரசு பயத்துடனும் கவலையுடனும் சிரத்தையுடனும் செயல்பட்டு நல்லாட்சியை வழங்கி யிருக்கக்கூடும். ஆகவே அ. தி. மு. க. அமைச்சரவையைச் செயல்படச் செய்து, அதனுடைய கொள்கை, கோட்பாடுகளைப் பரிசீலனை செய்து, குறைபாடுகளை எடுத்துக்காட்டி, எதிர்க் கட்சிகள் கண்ணியமாகவே நடந்து கொண்டிருக்கலாம். அரசியல் விவகாரத்தில் நமது நாட்டில் பெருந்தன்மையையும் அறிவு முதிர்ச்சியையும் காண முடியாதது நமது துரதிர்ஷ்டம்.

தமிழ் நாட்டிலே...

தீரன்

கம்பி நீட்டிய கம்பிகள்

அரிசி மூட்டை, நெல் மூட்டை, உர மூட்டைகள் இவை அரசாங்கக் கிடங்கிலிருந்து ஆயிரமாயிரமாகத் திருடு போன விவரங்கள் பற்றி இப்பகுதியில் பல முறை எழுதியிருக்கிறோம். இப்போது மின்சார வாரியத்தின் கம்பிகள் திருடு போனது பற்றி ஒரு செய்தி பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கிறது. தமிழ் நாடு மின்சார வாரியத்துக்குரிய மேட்டூர் — மின் திட்டத்தைச் சேர்ந்த 10 மி. மீ விட்டம் 24 அடி நீளமுள்ள 222 கம்பிகள் (சுமார் ஒரு டன்) காணமற் போய் விட்டன. கம்பிகள் கம்பி நீட்டிவிட்டன போலும்! அரசுத் துறையில் இது போன்ற அசிரத்தையைத்தான் எதிர்பார்க்க முடியும். திருட்டுக்குக் காரணமான ஆட்களைக் கம்பி எண்ண வைப்பதற்காக மின்சார வாரிய சூபர்வைஸர் போலீஸில் புகார் செய்திருக்கிறாராம்.

மறுபடியும் மின்வெட்டு

மழைக் காலம், கோடை காலம், குளிர் காலம் ஆகிய பருவ காலங்கள் எப்படி ஒவ்வோர் ஆண்டும் நிச்சயமாக வந்தே தீருமோ அப்படியே தி.மு.க. ஆட்சியில் மின்சார வெட்டும் ஆண்டு தவறாமல் வருவது நிச்சயம் என்று ஆகிவிட்டது. பொருளாதாரச் சிக்கல்களினாலும் மூலப் பொருள்களின் அருமை, விலை ஏற்றத்தாலும் ஒவ்வொரு தொழிலகமும் திணறுகையில் தமிழ் நாட்டில் மின்சார வெட்டு வேறு தன் பங்குக்குத் திணற அடிக்க வருகிறது. தொழில்களுக்கான மின்சாரக் கட்டணமும் உயர்ந்துவிட்டது. மின்சாரம் போதிய அளவில் கிடைப்பதும் இல்லை. தமிழ் நாட்டின் பல பகுதிகளில் விவசாயத்தையும் இந்த மின்சார வெட்டு பயங்கரமாகப் பாதிக்கும் என்று தெரிகிறது. 'வேளாண்மை — விவசாயக் காரியங்களுக்குப் பயன்படுத்தப் பெறும் மின்சாரத்துக்கு எவ்வித வெட்டும் கிடையாது' என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் தென் ஜில்லாக்களில் விவசாயிகளிடமிருந்து வேறுவிதமான குரலே ஒலிக்கிறது. அவர்களும் மின்வெட்டால் சிரமப்படுவதாகவே தெரிகிறது.


மின்சார வெட்டால் நேரிடையாகப் பாதிக்கப்படுகிறவர்களின் சிரமங்களைச் சொல்லி மாளாது. சமயநல்லூர் மின் நிலையம் அழித்து விற்கப்பட்டதும், என்னூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு சரி செய்யப்படாமல் இருப்பதும், நெய்வேலி மின் உற்பத்தியைப் பெருக்கச் செய்து பயன்படுத்த இயலாமல் இருப்பதும் தமிழக ஆட்சியின் நிர்வாகத் திறமையின்மைக்கு அடையாளங்கள். உயிர்ப் பிரச்னையான மின்சாரத்தைக் கோட்டை விட்டுவிட்டு வள்ளுவர் மாளிகை, கட்டபொம்மன் கோட்டை என்று நினைவு ஆலயங்கள் சமைக்கப் புறப்பட்டு விட்டது, தமிழகத் தி.மு.க. ஆட்சி.

கட்டாய அறுவை

குடும்பக் கட்டுப்பாடு அறுவை செய்து கொள்வோருக்கும், அவர்களைத் தேடிக் கொண்டு வந்து சேர்க்கும் தரகருக்கும் பணம் உண்டு என்பதனால் அவ்வப்போது சில அசம்பாவிதங்கள் நடைபெறுகின்றன. திருமணமே ஆகாத அப்பாவி இளைஞர்கள் விவரம் தெரியாமலே காசுக்காகப் பலியிடப்படுவது அதிகமாகிறது. சமீபத்தில் திருச்சியில் சித்த ஸ்வாதீனமற்ற ஓர் இளைஞனை வலுக் கட்டாயமாக அழைத்துச் சென்று குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்திருக்கிறார்கள். தந்தைக்குத் தெரியாமலே அந்த இளைஞனைக் கடத்திச் சென்று இதை நடத்தியிருக்கிறார்கள். தந்தை இதை அறிந்து மிகவும் மனவருத்தத்தோடு தமிழக

இரண்டு குணங்களை நீ பெற வேண்டும். ஒன்று: மக்கள் நன்மையைக் கருதி உன் அரசியல் அதிகாரத்தை எவ்வாறு செலுத்த வேண்டுமென்று உன் அறிவுக்குத் தோன்றுகிறதோ அவ்வாறே செய். மற்றொன்று: நீ எண்ணின எண்ணம் தவறென்று ஒருவன் எடுத்துக்காட்டி அது சரி என்று தோன்றினால் உன் எண்ணத்தை விட்டுவிடு. ஆனால் நியாயம், பொதுநலம், அல்லது வேறு தகுந்த காரணத்தைச் சரிவர மனத்தில் விசாரித்துத்தான் எண்ணத்தை மாற்ற வேண்டுமே யொழியச் சௌகரியம் என்றாவது ஜனங்கள் பாராட்டுவார்கள் என்றாவது மாற்றக் கூடாது.

—ராஜாஜியின் ஆத்ம சிந்தனையிலிருந்து



இனி இந்தப் புத்தகத்தைத்
தூக்கி எறிய வேண்டியதுதான்
இன்னமும்
ஜனாதிபதி!
சற்று எட்டியே
நில்லுங்கள்!
தீவிர
இடது
சாரி
பலிக்கவில்லையே?
இனி என்ன செய்யலாம்?

நல்வாழ்த்துக்கள்!



நடப்பு ஆண்டாகிய 1974 — 75க்குச் சென்னை வர்த்தகச் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு எம். எம். முத்தையா வயதில் சிறியவர்; திறமையில் முதியவர். தொழில் சூழ்நிலையிலேயே பிறந்து, வளர்ந்து, தென்னாட்டுத் தொழிலதிபர்களில் முக்கியஸ்தராக இன்று விளங்குகிறார். இவர் டைரக்டராகப் பணியாற்றும் நிறுவனங்கள் சிலவற்றைச் சொன்னாலே போதும் இவருடைய திறமையைச் சுட்டிக் காட்ட. கார்பரண்டம் யூனிவர்சல், சென்னை; லக்ஷ்மி மிஷின் ஒர்க்ஸ், கோவை; அலெம்பிக் கெமிகல் கம்பெனி, பரோடா; எண்ணூர் வார்ப்பட ஆலை, கோரமண்டல் என்ஜினீரிங் கம்பெனி, அம்பாடி நிறுவனங்கள், ரவி பெயிண்ட் முதலியன. தென்னிந்திய தொழில் வர்த்தக சங்கத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர். தோட்டத் தொழிலில் ஆழ்ந்த ஈடுபாடு இருப்பதுடன், 'உபாஸி'யின் நிர்வாகக் குழுவிலும் உள்ளார்.

புகழ்பெற்ற சென்னை வர்த்தக சங்கத்தின் தலைவராக முன்னாட்களில் திரு ஏ. எம். எம். முருகப்ப செட்டியார் பணியாற்றியிருக்கிறார். தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தனயன் திரு முத்தையாவும் அதே பதவியை வகிப்பது இரட்டிப்பு மகிழ்ச்சிக்குரியது.

முதல்வருக்கும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் புகார் செய்து கடிதங்களை எழுதியிருக்கிறார். கருத்தடையா? கருத்துத் தடையா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

விபரீத யோசனை

சிலைத் திருட்டுக்கள் வகைவகைக் களவுகள் போன்றவற்றைக் கண்டித்துத் தமிழ் நாடு சட்டசபையில் பேசிய கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் திருட்டுக்கள் நடக்காமல் இருக்கத் தமது அபாரமான அறிவைப் பயன்படுத்தி விபரீதமான யோசனை ஒன்றைக் கூறியிருக்கிறார்.

''தங்கம், வெள்ளி, ஐம்பொன் போன்ற விலை உயர்ந்த உலோகங்களில் சிலைகள் இருப்பதால்தான் அவற்றைத் திருடுகிறார்கள். அதனால் இப்போதுள்ள விலை உயர்ந்த உலோகச் சிலைகளை எல்லாம் உருக்கி அழித்து விற்று அந்த விற்பனையால் வரும் பல கோடி ரூபாய்களை வைத்து அரிஜனங்களுக்கு வீடு கட்டித் தந்துவிடலாம். சாதாரண மண் சிலைகளைச் செய்து அதற்குப் பதில் பழைய இடங்களில் வைத்துவிடலாம்'' என்பது இவரது அதிமேதாவித்தனமான யோசனை!

நல்ல வேளையாக இதற்குப் பதில் கூறிய முதலமைச்சர் பொறுப்போடு, ''விக்கிரகங்களின் மதிப்பு உலோகத்தை வைத்துக் கணக்கிடப்படுவதில்லை. அவற்றின் கைத் திறன் நுணுக்க வேலைப்பாட்டை வைத்தே கணிக்கப்படுகிறது'' என்று மறுத்திருக்கிறார். முஸ்லீம் லீக் உறுப்பினர் எம். ஏ. மொய்தீனும், ''தெய்வ நம்பிக்கை உள்ள ஒரு வகுப்பாரின் உணர்வைப் புண்படுத்திவிட்டு மற்றொரு வகுப்பாருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அவசியமற்றது. அரிஜனங்களின் வீட்டுத் திட்டத்துக்குத் தனி நிதி ஒதுக்கித்தான் செயற்பட வேண்டும்'' என்று கம்யூனிஸ்டு உறுப்பினரின் விபரீத யோசனையை மறுத்துள்ளார்.

இல்லத்தரசிகளின் உண்ணா நோன்பு

விரதம் நோன்பு ஆகியவற்றைப் பெண்கள் சிரத்தையோடும், சிறப்பாகவும் செய்வார்கள். விலைவாசிகள் உயர்வையும், மத்திய, மாநில வரி உயர்வையும் எதிர்த்துக் கண்டிக்கும் நோக்கத்துடன் சென்னை, செங்கல்பட்டு ஜனநாயக மாதர் சங்கத்தைச் சேர்ந்த சுமார் நூறு பெண்கள் மார்ச் மாத இறுதியில் சென்னை கலெக்டர் அலுவலகத்துக்கு முன் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

1. எல்லா விலைகளையும் 1971ல் விற்ற எல்லைக்குக் குறையச் செய்ய வேண்டும். 2. அரிசி, துவரம் பருப்பு, மைதா, பிற பருப்பு வகைகள். எண்ணெய் வகைகள், கிரோஸின், விறகு, குழந்தை உணவு, மிளகாய், புளி போன்ற அத்தியாவசியமான பண்டங்களை 500 குடும்பங்களுக்கு ஒரு நியாய விலைக் கடை விதமாகத் திறந்து எல்லாருக்கும் தாராளமாகக் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்பவை இவர்களுடைய கோரிக்கைகளாக வற்புறுத்தப் பட்டன. கோரிக்கைகள் நன்றாகத்தான் இருக்கின்றன. அரசு நன்றாகச் செயல்பட்டால்தானே?

குப்பை கொட்டும் போர்

பல இடங்களில் தொட்டிகளையும் மீறி நிரம்பி வழியும் குப்பைகள் அள்ளப்படாமலே தெருக்கள் நாறுவதால் சென்னை நகரில் 56வது வட்ட மக்கள் ஒரு புதிய விதமான போராட்டத்தை மாநகராட்சி அலுவலகத்தின் முன் நடத்துவதற்கு முடிவு செய்துள்ளனர். குப்பைகளை அள்ளிக் கொண்டு அப்பகுதி

மக்கள் ஊர்வலமாகச் சென்று அதைச் சென்னை மாநகராட்சிக் கட்டடத்துக்கு முன் கொட்டுவது என்று முடிவு செய்து செயற்படப் போகிறார்கள். இப்படிக் குப்பையைக் கொண்டுபோய்க் கொட்டியாவது மாநகராட்சிக்கு விழிப்பூட்ட அவர்கள் முயலுகிறார்கள். முயற்சி பலித்துத் தெருக்கள் சுத்தமாகட்டும்.

விதிகளும் விபத்துக்களும்

சென்னையில் சாலைகளில் குறுக்கே நடப்பவர்களுக்குக் குறைந்தபட்சம் பத்து ரூபாய் அபராதம்; பஸ்களில் ஃபுட்போர்டில் நின்று பயணம் செய்பவர்களுக்கு அபராதம் என்றெல்லாம் விபத்துக்களைத் தவிர்க்கும் விதிகளை அடுத்தடுத்துச் சென்னை நகரப் போலீஸார் அறிவிக்கின்றனர். இந்த விதிகளால் மட்டுமே ஒழுங்கைக் கொண்டுவந்துவிடமுடியாது. சாலைகளில் எல்லா முக்கிய இடங்களிலும் குறுக்கே கடந்து செல்ல 'கிராஸிங் பாயிண்ட்' ஒன்று அமைக்கப்படவேண்டும். ஃபுட்போர்டில் நிற்கிற அளவு பஸ்களில் கூட்டம் நிறையாமல் அதிக பஸ்களை எல்லா வழித் தடங்கல்களிலும் விடவேண்டும். அப்படி எல்லாம் முறையான பரிகாரங்களைச் செய்யாமல் வெறும் விதிகளை நியமித்துவிடுவதால் மட்டும் பயனில்லை. பரிகாரங்களே விபத்துக்களைத் தடுக்க முடியும். வெறும் விதிகளால் மட்டும் அதைச் சாதிக்க முடியாது.

கால் நூற்றாண்டுப் பிள்ளையார்

திருவல்லிக்கேணி பெரிய தெருவும் பண்டி வெங்கடேச நாயக்கர் தெருவும் சந்திக்கும் இடத்தில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகக் கோயில் கொண்டிருக்கும் சர்வசித்தி விநாயகர் கோயிலை மார்ச் மாத நடுவில் சென்னை மாநகராட்சி 'ஊழியர்கள் அகற்றி' அப்புறப்படுத்த வந்தபோது அப்பகுதி மக்களும், மாணவர்களும் வெகுண்டெழுந்து அதைத் தடுத்து விட்டார்கள்.

தெரு முனைக் கோவில்களைத் தகர்க்கவும் அப்புறப்படுத்தவும் இவ்வளவு அவசரமாக ஓடோடி வருகிற இதே மாநகராட்சி ஊழியர்கள் தெருமுனைகளில் இடையூறான இடத்தில் கட்டப்பட்டுள்ள ஆளும் கட்சியின் கொடிக் கம்ப மேடைகளையோ, திடீர் திடீரென முளைக்கும் மன்றங்களையோ நெருங்கவே பயப்படுவது ஏனோ?

ஜி. சுவாமிநாதன்


தமிழ் நாடு மேல்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட திரு ஜி. சுவாமிநாதன் தஞ்சாவூர் கிழக்கு மத்திய பட்டதாரித் தொகுதியில் அபேட்சகராக நிற்கிறார். மருந்து உற்பத்தியில் பட்டம் பெற்றுத் தொழில் நடத்துகிறார். ஏற்கெனவே இந்தத் தொகுதியின் பிரதிநிதி.

தஞ்சாவூர் மிராசுதார்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர் திரு சுவாமிநாதன். மிகவும் பாடுபட்டு உழைத்துப் பணியாற்றும் அங்கத்தினர். தமக்கென்று சில விஷயங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவற்றில் விசேஷ கவனம் செலுத்துவது அவருடைய சிறப்பு அம்சம். நியாய புத்தியுடனேதான் எதையும் விவாதிப்பார். தமது கருத்தைப் பதியச் செய்ய வீண் ஆர்ப்பாட்ட முறைகளைக் கையாள மாட்டார். மேல் சட்ட சபையில் சமீப காலத்தில் மிக அதிகமான கேள்விகளைக் கேட்டு உண்மையை வரவழைப்பதில் திரு சுவாமிநாதன் தமது அசாதாரணமான திறமையைக் காண்பித்தார். கேள்விகளைத் தொடர்ந்து அவசியமான உபகேள்விகளைக் கோவையாகக் கேட்கும் நுண்ணிய அறிவும் விஷய ஞானமும் உள்ளவர். சட்டசபை விதி முறைகளைக் கசடற உணர்ந்தவர். பரந்த விஷய ஞானம் உள்ளவர். எல்லாச் சட்டசபை அங்கத்தினர்களின் பெரு மதிப்பைப் பெற்றவர். ஆவேசமில்லாமல் அழுத்தமாகப் பேசக்கூடியவர். தம்முடைய தொகுதியின் உரிமைகளை மிகத் துடிப்புடன் பாதுகாப்பவர்.

விஷயம் அறிந்த பட்டதாரி வாக்காளர்களின் ஆதரவை மீண்டும் இத்தேர்தலில் கோருகிறார். தமது செயல்கள், நடவடிக்கைகள் மூலம் தமது தகுதியை ஏற்கெனவே நிரூபித்துக் காட்டியவராகையால் ஆதரவு நிச்சயம் கிடைக்கத்தான் வேண்டும்.

இத்தொகுதியில் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் போட்டியிடுவது உகந்ததாகத் தோன்றவில்லை. ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து பட்டதாரி ஆசிரியர் அபேட்சகராக நிற்பது அதிக பொருத்தமாக இருக்கும்.

சுதந்திரக் கட்சியின் முக்கியமான உறுப்பினர்களில் ஒருவரும் ராஜாஜியின் பரிபூரண ஆசிகளைப் பெற்றவருமான திரு ஜி. சுவாமிநாதனின் முன்னுள் அனுபவத்தையும் செயல்திறனையும் கவனத்தில் வைத்து ஏப்ரல் 13ந்தேதி நடைபெற விருக்கும் தேர்தலில் இத்தொகுதி வாக்காளர்கள் வோட்டுபோட்டு முழு ஆதரவை அளிப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.





CMGF-39-104 TM

ராஜ்ய சபை சோபிக்கும்!

முப்பத்தைந்து ஆண்டுகள் அரசாங்கத்துக்குப் பல துறைகளில் தன்னலமற்ற உயர் சேவை செய்து புகழும் நற்பெயரும் பெற்ற திரு எஸ். ரங்கநாதன், இந்திய நிர்வாகத்தின் அரண் எனக் கருதப்பட்ட ஐ. ஸி. எஸ் வர்க்கத்தின் சுடர் என மதிக்கத் தக்கவர். விளம்பரத்தையோ, பாராட்டுதல்களையோ விரும்பாதவர். ஆனால் சமீபத்தில் தமிழ் நாடு சட்டசபை, ராஜ்ய சபைக்குத் திரு ரங்கநாதனைப் பெருவாரியான ஓட்டுக்கள் அளித்துத் தேர்ந்தெடுத்ததன் மூலம் அவரை அரசியல் அரங்கில் பளிச்செனக் கொண்டு வந்து நிறுத்தி விட்டது. நான்கு சுவர்களுக்குள்ளே அடைபட்டுக் கிடந்தே பழகிப் போன ஒருவரைத் திடீரென்று வெளிக் கொணர்ந்து கண்ணைக் கூசும் ஒளி விளக்கின் மத்தியில் நிற்க வைத்தால் எப்படியோ, அத்தகைய கூச்சப்படும் நிலைமையில் திரு ரங்கநாதன் இருக்கிறார். இதுவே அவருடைய மேன்மைக்கு எடுத்துக்காட்டு!

அப்பழுக்கற்ற நேர்மை, அபார தன்னடக்கம், அசாதாரண பொறுமை, தகுதியுள்ளவர்களுக்கு உதவி யளிப்பதில் தளராத உறுதி — எல்லாவற்றுக்கும் மேலாகத் தற்பெருமை சிறிதும் இல்லாமை — இவை திரு ரங்கநாதனின் குணம்சங்கள். மனிதர்களைப் பற்றியும் நிலவரங்களைப் பற்றியும் அவர் செய்யும் மதிப்பீடுகளில் பெரும்பாலும் தவறே காணப்படாது. சிக்கல் மிகுந்த மத்திய அரசின் தொழில் வர்த்தக இலாகாவின் காரியதரிசியாகப் பணியாற்றியபோது தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்த அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் விவேகம் பளிச்சிட்டது. விரைவில் செயலாற்றவல்ல நம்பிக்கையான தொழிலதிபர்களைப் பற்றிய நுண்ணிய அறிவும் அவருக்கு உண்டு. இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு இத்தகைய அறிவும் நாட்டுப் பற்றுமே ஆதாரம். தாமதமின்றி முடிவெடுக்க வகை செய்ய வேண்டியதன் அவசியத்தையும், இதற்குத் தடையாக இருக்கும் குட்டி அதிகாரிகளின் விருப்பு வெறுப்புக்களை உதறித் தள்ள வேண்டியதன் அவசியத்தையும் நன்கு உணர்ந்திருந்தார் திரு ரங்கநாதன். எனவே தாம் சீர்ப்படுத்தி அமைத்த தொழில் லைசென்ஸ் முறையில் இவ்வம்சங்களில் மிகுந்த கவனம் செலுத்தினார். தொழில் வட்டாரங்கள் அவருடைய நடவடிக்கையைப் போற்றின. பண வீக்கமும் அதன் உடன் விளைவான துயரங்களும் இல்லாமலே தொழில் முன்னேற்றத்துக்கு வழி கோலியவர் திரு ரங்கநாதன்.

அரசாங்கத்தின் சிவப்பு நாடாக் கொடுமையை நன்றாக உணர்ந்தவர். அதன் கொடுமையைத் தளர்த்த முயன்றவர். தொழிலதிபர்களில் சாமர்த்திய முள்ளவர்கள், நேர்மையானவர்கள், உதவாக்கரைகள் யார் யார் என்று அவருக்குப் பெயர்வாரியாகத் தெரியும். எந்தத் தொழில் திட்டத்தையும் சரிவர மதிப்பீடு செய்யும் சாமர்த்தியம் உள்ளவர். இவை யெல்லாம் பொருளாதாரத் துறையில் அவரை ஒரு நடைமுறை ராஜதந்திரியாக உயர்த்தின. ஓய்வு பெற்ற பின்னர், அசோக் லேலண்டு, லாண்டாஸ் கம்பெனிகளின் தலைவராக அவர் பணியாற்ற முன் வந்தபோது, எல்லோருமே மகிழ்ந்தனர். அக்கம்பெனிகளின் கௌரவம் திரு ரங்கநாதனுடைய சாமர்த்தியத்தினால் உயர்ந்தது என்றே சொல்லலாம்.

படாடோபமாகச் செயல்படுவதை அவர் எப்படி விரும்பாதவரோ, அதே போல் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகள் வளவள வென்று பேசுவதைக் கடுமையாகக் கண்டிப்பவர். நிர்வாக அதிகாரி என்ற முறையில் அவர் கண்டிப்பாகவே செயல்படுவார். ஆனால் அவர் கண்டிப்பில் வெறுப்போ, கடுமையோ இராது. அவருடைய எல்லாச் செயல்களிலும் அவர் காட்டிய அறிவொளி அவருடைய கீழ் மட்ட அதிகாரிகளின் முழு ஒத்துழைப்பை அவருக்குப் பெற்றுத் தந்தது. அவர்களால் மிக உயர்வாகவே பாராட்டப்பட்டார்.

இவ்வளவு அனுபவமும் ஆற்றலுமுள்ள ஒருவரை இந்தியாவின் ஆடிட்டர்-ஜெனரல் என்ற உயர் கணக்காயர் பதவிக்கு நியமித்தபோது, அவருடைய நேர்மைக்குப் பாராட்டாக இந்த உயர் பதவியை அவருக்கு அரசாங்கம் கொடுத்துக் கௌரவித்ததாகப் பலர் எண்ணினர். என்றாலும் தொழில் உலகத்துடன் தொடர்பு இல்லாத இப்பதவியை அளிப்பது அவருடைய திறமைக்கு அவ்வளவாக நியாயம் செய்ததாகாது என்றும் பலர் நினைத்தனர்.

இப்போது திரு ரங்கநாதன் ஓய்வு பெற்ற மாஜி அதிகாரி. முதியவர்களின் சபை என்று சொல்லப்படும் ராஜ்ய சபைக்கு முதியவரான திரு ரங்கநாதனைத் தமிழ்நாடு சட்ட சபை தேர்ந்தெடுத்திருக்கிறது. இவரைக் காட்டிலும் வயதில் முதிர்ந்தவர்கள் இச்சபையில் இருக்கிறார்கள். எனினும் இவருடைய விரிவான அனுபவமும் அறிவும் மனிதப் பண்பும் ராஜ்ய சபையையே சோபிக்கச் செய்யும் என எதிர்பார்க்கலாம்.

திரு எஸ். ரங்கநாதன் அவர்களுடைய வண்ணப் படத்தை இவ்விதழ் அட்டையில் பெருமையுடன் வெளியிடுகிறோம்.

எருக்கன்சேரியில் எருக்குகந்த பெருமான்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்களுடைய ஆசியால் சென்னை, எருக்கஞ்சேரி ஆசிரியர் காலனியில் ஸ்ரீ வினைதீர்த்த விநாயகர் ஆலயத் திருப்பணி நடந்து கொண்டிருக்கிறது. சிவநேசச் செல்வர்கள் தங்களால் இயன்ற பொருளுதவியைப் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைத்து விநாயகப் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராக வேணும். கே. செல்லப்பெருமாள், போஸ்ட் மாஸ்டர், எருக்கமா நகர், சென்னை-51.

அம்மா

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

தாயன்பைப் போலக் கலப்படமே இல்லாத பூரணமான அன்பை இந்த லோகத்தில் வேறெங்குமே காண முடியவில்லை. பிள்ளை எப்படி இருந்தாலும், தன் அன்பைப் பிரதிபலிக்காவிட்டாலுங்கூட, அம்மாவாகப்பட்டவள் அதைப் பொருட்படுத்தாமல் பூரணமான அன்பைத் தன்பாட்டுக்குச் செலுத்திக்கொண்டேயிருக்கிறாள். 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்று இதைத்தான் சொல்லுகிறோம். 'தேவி அபராதக்ஷமாபன ஸ்தோத்திரம்' என்று அம்பாளிடம் நம் குறைகளைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொள்கிற துதி ஒன்று இருக்கிறது. அதிலும் 'துஷ்டப் பிள்ளை இருப்பதுண்டு; ஆனால் துஷ்ட அம்மா என்று ஒருத்தி கிடையவே கிடையாது' என்று வருகிறது. பரிபூரணமான அன்பையும், தன்னலமே இல்லாத உழைப்பையும் அம்மா ஒருத்தியிடம்தான் பார்க்க முடிகிறது.

குழந்தையாகப் பிறக்கிற போதே அம்மாவிடம்தான் ஒட்டிக் கொள்கிறோம். ஆகாரம் தருவதிலிருந்து சகலத்துக்கும் அவள்தான் குழந்தைக்குக் கதியாக இருக்கிறாள். வயது ஏறுகிற சமயத்தைவிடப் பால்யத்தில்தான் தாயார், குழந்தை இருவருக்கும் பரஸ்பர அன்பு மிக அதிகமாக இருக்கிறது. அதிலும் மனித இனத்தைவிடப் பசுக் குலத்திடம்தான் இந்த அன்பு நிரம்பத் ததும்புகிறது. கன்று, ''அம்மா!'' என்று கத்துவதில் உள்ள ஆவல் மாதிரி வேறெங்கும் அன்பைப் பார்க்க முடியவில்லை. இதைப் பார்த்துத்தான் மநுஷ்ய ஜாதியே, ''அம்மா!'' என்று கூப்பிட ஆரம்பித்ததோ என்று தோன்றுகிறது. தமிழில் மட்டுமில்லாமல், தெலுங்கு, மகாராஷ்டிரம், கன்னடம் முதலிய பாஷைகளிலும் ''அம்மா'' என்றே தாயாரைச் சொல்கிறார்கள். மலையாளத்தில் ''அம்மை'' என்பார்கள். ஸம்ஸ்கிருதத்தில் ''மா'' என்றும் 'அம்பா'' என்றும் சொல்வதும் இதேதான். ஹிந்தியில் ''மாயி'' என்கிறார்கள். இங்கிலீஷ் ''மம்மி'' ''மம்மா'' எல்லாமும் கன்றுக்குட்டியின் 'அம்மா'விலிருந்து வந்தவைதான்.

இந்த அம்மாவின் அன்பு ஒரு பக்கம் இருக்கட்டும். இவள் இந்தச் சரீரத்துக்கு மட்டும்தான் அம்மா. அவளுடைய, அல்லது நம்முடைய சரீரம் போன பிற்பாடு இந்த அம்மாவுக்கும் நமக்கும் சம்பந்தமே இல்லை. அப்புறம் வேறு கர்ப்பவாஸம்; வேறே அம்மா வருவாள். இப்படிச் சரீரத்துக்கு மட்டும் அம்மாவாக இல்லாமல், உயிருக்கு அம்மாவாக இருக்கிற ஒருத்தி இருக்கிறாள். சரீரம் அழிகிற மாதிரி உயிர் அழிவதில்லை. இந்தச் சரீரம் போன பிற்பாடு அந்த உயிர் இன்னொரு சரீரத்துக்குப் போகிறது. இந்த உயிரின் அம்மாதான் நமக்கு சாசுவதமாக, நிரந்தரமாக, எந்நாளும் தாயாராக இருந்துகொண்டிருக்கிறாள். கன்றுக்குப் பசுவைப் போல எந்த ஜன்மத்திலும் எந்தக் காலத்திலும் எல்லாப் பிராணிகளுக்கும் தாயாராக இருக்கும் பரதேவதையின் பாதாரவிந்தத்தில் நிறைந்த அன்பு வைப்பதே ஜன்மா எடுத்ததன் பிரயோஜனம். ஜன்ம நிவிருத்திக்கும் அதுவே வழி. அதாவது உயிர் சரீரத்தை விட்டபின் இன்னொரு சரீரத்தில் புகாமல் பேரானந்தத்தில் கரைவதற்கும் அவள்தான் கதி.

நமக்கு இருக்கிற சக்தி எல்லாம் அவளுடையதுதான். ஒரே அகண்ட பராசக்திதான், கண்டம், கண்டமாக, துண்டு துண்டாக ஆகி இத்தனை ஜீவராசிகளிடமும் துளித் துளி சக்தியை வெளிப்படுத்துகிறது. நாம் 'சொந்த' முறையில் எதையும் சாதித்ததாகப் பெருமைப்பட்டுக் கொள்ளவும், அகம்பாவம் கொள்ளவும் கொஞ்சம்கூட நியாயமே இல்லை. நாம் எதைச் செய்திருந்தாலும் எல்லாம் அவள் கொடுத்த சக்தியால்தான் நடக்கிறது. இதை உணர்ந்து அகம்பாவம் சிறிதும் இல்லாமல் அவளிடம் சரணாகதி செய்தால் ஒரே அம்மாவான அவள் இகத்திலும் பரத்திலும் பரமானுக்கிரகம் செய்வாள். எப்படி எதுவும் கேட்கத் தெரியாத குழந்தைக்கு வேண்டியதைத் தாய் தானே கவனித்துத் தருவாளோ, அப்படியே ஜகன்மாதாவாகவும் கருணாமூர்த்தியாகவும் உள்ள அம்மா உண்மையான பக்தி வைத்தவர்களுக்கு இக லோகத்தில் வித்தை, செல்வம், தேக காந்தி முதலியவற்றைத் தந்து பின்பு தானாகப் பழுத்துப் பரமானந்தத்தைப் பெறும்படி அருள் புரிவாள்.





ஒரு கல்யாண வீட்டில்...

சரோஜா ராமமூர்த்தி

திருமண அழைப்பிதழைப் பிரித்து மறுபடியும் விலாசத்தைக் கவனித்தான் வரதன். தியாகராயநகரில் ஒரு பிரபலமான தெருவில் இருக்கும் கல்யாண மண்டபம்தான் அது. மாப்பிள்ளை அழைப்பு ஆறு மணிக்கு என்று போட்டிருந்தார்கள். அடுத்த நாள் காலை ஆறிலிருந்து ஏழுக்குள்ளாக முகூர்த்தம் இருந்தது. வரதன் தொழிற்சாலையில் வேலை பார்ப்பவன். ஏழு மணிக்கு அங்கே இருந்தாக வேண்டும். நண்பனின் கல்யாணமென்றாலும் அந்த ஒன்றரை மணி நேரச் சடங்குக்காக ஒரு நாள் செய்ய வேண்டிய தொழிலை உதற அவனுக்கு மனம் வரவில்லை. ஆகவே, மாலை ஐந்து மணிக்கு மனைவியிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

''கொஞ்சம் நல்ல சட்டையாகப் போட்டுண்டு போகப்படாதா?'' என்று மனைவி கேட்டாள்.

'' சட்டையா ? இதற்கென்ன தீபாவளிக்கு வாங்கினதுதானே? கதர்ச் சட்டை கொஞ்சம் நீர்க்காவி ஏறிப் போச்சு..''

''ஆமாம்... அவா அவா பாம்பே டையிங் அது இதுன்னு சட்டை தைச்சுக்கிறா. நீங்க கதர் கதர்னு ஒரு சந்நியாசிக் கலரிலே தைச்சுண்டு—''

அவன் அவளைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சிரித்தான். ஒரு கணம் தன்னையே பாம்பே டையிங் துணியில் தைத்த சட்டைக்குள் நுழைத்துக் கொண்டு, சிலும்பிய கிராப்பும் இருதாவுமாகக் கற்பனை பண்ணிக் கொண்டான். ஓ! அவன் தான் இப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறாள் போலும்! அவள் அவனுடைய சாதுத் தனத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும்போதே அவன் வீட்டிலிருந்து கிளம்பி விட்டான். மாம்பலம் ரயில் நிலையத்திலிருந்து கல்யாண மண்டபம் அரை மைலுக்குள்ளாக இருந்தது. அவனுக்குத் தெரிந்த சிலர் மனைவிகளோடு வந்திருந்தனர். அவரவர் தத்தம் கல்யாண சூட்டுகளையும், புடவைகளையும் உடுத்தியிருந்ததும் வரதனுக்கு வேடிக்கையாக இருந்தது.

''என்னப்பா வரதா! மிஸஸ் வரலையா?'' என்று ஒரு நண்பன் கேட்டான்.

அவன் ஏன் அவளுக்கு அறிமுகமில்லாத, தெரியாத ஒருவனுடைய கல்யாணத்துக்கு வரவேண்டும் என்பது வரதனுக்குப் புரியவில்லை. இவர்கள் மனைவிமார்களுக்கும் அந்தக் குடும்பத்தினரைத் தெரிய நியாயமில்லை, இருந்தாலும் வருகிறார்கள்.

''டாக்சியிலே இடம் இருக்கு. நீயும் வாயேன்—'' என்று இன்னொரு நண்பன் கூப்பிட்டான்.

நடந்து போக வேண்டிய தூரத்தில் இருக்கும் இடத்துக்கு இவர்கள் ஏன் டாக்சியைத் தேடுகிறார்கள் என்பது வரதனுக்குப் புரிந்தது. மதிப்பு என்று ஒன்று இத்தச் செய்கையினால் உயருகிறது என்பதை அவனும் தெரிந்து வைத்திருந்தான்.

''அட வாப்பா நீ ஒண்ணும் காசு தர வேண்டாம்!''

''இல்லையப்பா! நான் இப்படிக் காலாற நடந்து வர்றேன்—''

கிளம்பும் டாக்சியில் நண்பன் மனைவியிடம் சொன்னது வரதனின் காதுகளில் நன்றாக விழுந்தது.

''அவன் ஒரு பைத்தியம்... கொள்கை அது இதுன்னு...'' அந்தப் பெண் அழகாகச் சிரித்தாள். அவள் உதடுகள் வெற்றிலைச் சிவப்பால் சிவந்திராமல் சாயச் சிவப்பால் சிவந்திருந்தன. தன் மனைவி ஏன் 'லிப்ஸ்டிக்' உபயோகிப்பதில்லை என்று வரதன் யோசித்துக்கொண்டே நடந்தான். அது ஒன்றும் அப்படி விலை உயர்ந்தது அல்ல. தன்னால் வாங்கிக் கொடுக்க முடியாததும் இல்லை.

ஏனோ அவள் விரும்பவில்லை; இவனும் வாங்கவில்லை.

இவன் அந்தக் கல்யாண மண்டபத்துத் தெருவை அடையும்போது நண்பனின் டாக்சி இவனைத் தாண்டிச் சென்றது. டாக்சியில் கிளம்பியவர்கள் ஏன் இவ்வளவு நேரம் கழித்து வருகிறார்கள் என்பது நண்பனின் மனைவியின் தலையைப் பார்த்ததும் புரிந்தது. ரயிலடியில் பார்த்த சிகை அலங்காரமில்லாமல் இப்போது வேறு கொண்டையாக மாறியிருந்தது. அஜந்தாச் சித்திரம் போல் இருந்தாள். அடிக்கடி சிரித்தாள்.

''ஓ! ப்யூட்டி பார்லருக்குப் போய்விட்டு வருகிறாப்போல இருக்கு—''

கல்யாண வீட்டில் இரட்டை நாயனம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. டாக்சி கார்களில் வந்து இறங்கியவர்களைச் சிரித்தும் கைகுலுக்கியும் வரவேற்றார்கள். வரதனும் உள்ளே போனான். வாசலில் நின்றிருந்த பெண் ஒருத்தி உதட்டைச் சுழித்து, புருவங்களை நெரித்துக் கொண்டாள். அவள் இவனைப் போல் வருபவர்களைப் பார்க்கும்போது அவ்விதம்தான் நடந்துகொண்டாள். நவநாகரிகமாக வருகிறவர்களைப் பார்க்கும்போது தோள்களைக் குலுக்கியும், மணிகள் கொட்டியது போல் சிரித்தும் வரவேற்பதைக் கவனித்தான்.

அவனுக்குத் தெரிந்தவர்களாக அங்கு யாரும் இல்லை. போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். எதிரே மணமேடையில் வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மண்டபம் கண்ணைப் பறித்தது. கூட்டம் கூட்டமாக ஆண்களும், பெண்களும் வந்து கொண்டிருந்தார்கள். தான் வகுத்துக் கொண்டிருக்கும் சில பல கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டவர்களாகவும், பாரதம் சுதந்திரம் அடைந்த இருபத்தியாறு வருஷங்களுக்கு அப்புறம் நாட்டில் வளர்ந்து போயிருக்கும் போலித்தனமான, தன்னம்பிக்கையற்ற ஒரு கூட்டமாகவும் அவர்கள் இருந்தார்கள். தோற்றத்தில் எப்படி இருந்தாலும், மனிதனை மனிதன் மதிக்க வேண்டும் என்கிற மனிதாபிமானத்திலிருந்து அவர்கள் விலகி வெகு தூரம் நிற்பதுபோல் வரதனுக்குத் தோன்றியது. பல பெண்கள் அடிக்கடி வாய் விட்டுக் காரணமில்லாமல் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் உடம்பிலே போட்டிருந்த நகைகளின் மதிப்பும் கட்டியிருந்த ஆடைகளின் தோற்றமும் இந்தியா ஒரு பின்தங்கிய நாடல்ல என்று ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. ஆனால் அவர்களின் மனத்தின் ஆழத்தில் புரையோடிக்கொண்டிருந்த நம்பிக்கையற்ற தன்மைகள், போலித்தனமான கவர்ச்சிகள் ஆகியவற்றின் எதிரொலி போல் அவர்களின் சிரிப்பு இருந்தது.

ஒரு வயதான அம்மாள் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தாள். தலை 'போல்'லென்று நரைத்திருந்தது. பழுக்க மஞ்சள் பூசிய முகம். பெரிய குங்குமப் பொட்டு. வாழை நாரால் தலை முடியைக் கட்டிக் கொண்டை மாதிரி சுற்றிக் கொண்டிருந்தாள். வாழை நார் வெளியே நீட்டிக்கொண்டிருந்தது. கழுத்தில் இரட்டை வடம் சங்கிலிகள், கைகளில் வளையல்கள். காதுகளில் தொளதொளவென்று ஆடும் கம்மல்கள். அந்த அம்மாள் சிரிக்கும்போது வெற்றிலையால் மட்டும் சிவப்பேறாத, கத்தைக் காம்பு மென்ற சிவந்த பற்கள் பளீரென்று இருந்தன.

வரதன் அந்த அம்மாளைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். மணவறையில் ஏற்றி வைக்கப்பட்ட குத்து விளக்குகள் போல் அவள் குளிர்ச்சியாக ஒளி வீசிக் கொண்டிருந்தாள். இத்தனை நாகரிகங்களுக்கிடையே தனியாகவும், ஓர் அரசி போலவும் அவள் திகழ்வதைக் கவனித்தான் வரதன்.

தொலைவில் பாண்டு வாத்தியத்தின் ஒலியோடு நாதஸ்வரத்தின் சத்தமும் கேட்டது. பெண்கள் எல்லோரும் வேடிக்கை பார்க்க வாசலுக்குப் போய் விட்டார்கள். அந்த அம்மாள் மட்டும் பரக்கப் பரக்க ஆரத்தி கரைத்து எடுத்து வந்து வைத்து விட்டு உள்ளே திரும்பி, ''அடியே, மஞ்சு! மாப்பிள்ளை அழைப்பு வரது. நீ பார்க்க வேண்டாமோ... வாடி....'' என்று கல்யாணப் பெண்ணாகிய தன் பேத்தியை அழைத்தாள்.



கல்யாணப் பெண் பாட்டியின் அழைப்புக் கிணங்க வெளியே வந்தாள்.

நல்ல காலம்! கல்யாணப் பெண்ணுக்கு யாரும் 'ரவிக்' போட்டு விடுவதில்லை. அஜந்தாக் கொண்டை போடுவதில்லை. தாலி கட்டுகிற வரைக்குமாவது ஜரிகைக் கரை வைத்த ரவிக்கையும், பூத்தைத்த ஜாடையும் தான் என்று வைத்திருக்கிறார்கள்.

அந்தப் பெண் அழகாகவே இருந்தாள். அடிக்கடி வெட்கப் பட்டுக் கொண்டாள். பாட்டி ஆசை தீரப் பேத்தியை விளக்கு வெளிச்சத்தின் நடுவில் நிறுத்திப் பார்த்தாள்.

''தலைச் சாமான்கள் கட்டினதுக்குப் புல் லாக்குப் போட்டுக்கணும்... இரு...'' கிழவி வேகமாக உள்ளே போய்விட்டு வந்து பேத்தி யிடம் புல்லாக்கைக் கொடுத்தாள்.

''ஒன்னுதுதான். போட்டுக்கோ...''

பேத்தி மறுபடியும் அலங்காரம் பண்ணிக் கொள்ள உள்ளே போய்விட்டாள். கிழவியின் கணவர் தள்ளாடிக் கொண்டே வந்து அவள் பக்கத்தில் நின்றார்.

''அதுக்கிட்டே என்ன கொடுத்தே?''

''ஒன்னுமில்லே. என் புல்லாக்கு பெட்டி யிலே கிடந்தது. அவள் அகலமூசத்துக்கு நன்னா யிருக்கும்னு போட்டுக்கச் சொன்னேன்.''

''அவ உன்னைப் போலத்தான் இருக்கா... இப்ப அதைக் கல்யாணக் கோலத்துலே பார்க்கறச்சே உன் ஞாபகம் – அந்த நாள் – வந்துடுத்து...''

'' நீங்க பலகாரம் சாப்பிட்டேளா? பொழுதோட ஒரு வாய் சாப்பிடுங்கோ. ராத்திரி சாப்பிட்டா உங்க உடம்புக்கு ஆகாது.'' கிழவி பேச்சை மாற்றினாள்.

கல்யாணச் சத்திரத்தில் அவசர வேகத்தில் பறந்து கொண்டிருந்த அத்தனை பேர்களுக்கும் நடுவே இந்தத் தம்பதியின் நிதானமான போக்கு அவனுக்குப் பிடித்திருந்தது.

'எதற்கெடுத்தாலும் இப்போதெல்லாம் ஒரே அவசரம்தான். முதல் நாள் பரக்கப் பரக்க வந்து சம்பந்தி ஜாகையில் இறங்கி, அவசரம் அவசரமா மாப்பிள்ளை அழைப்பு நடத்திண்டு, ஏனோ தானோன்னு மந்திரம் சொல்லித் தாலி கட்டிட்டு, ரிசப்ஷன் போது விச்ராந்தியா சளசளன்னு வருகிறவாளோடு பொழுதைக் கழிக்கிற காலமல்லவா இது?' என்று வரதன் நினைத்தான்.

அவன் திருமணத்தில் ரிசப்ஷனை நடத்த வில்லை. அதற்குப் பதில் சாயங்காலம் நிதான மாக ஔபாசனம்பண்ணிக்கொண்டிருந்தான்.

ஒன்றிரண்டு நண்பர்கள் கேட்டதற்கு, 'ரிசப்ஷன் வைக்கணும்னு எந்த சாஸ்திரத்

சோவியத் ஹாஸ்யங்கள்

□ஆசிரியர்: இந்த வீட்டில் ஐந்து மாடிகள் உள்ளன. ஒவ்வொரு மாடிக்கும் இருபது படிகள் உள்ளன. ஒருவன் ஐந்தாவது மாடிக்குப் போக எத்தனை படிகள் ஏறவேண்டும்?

பையன் (தயங்கிவிட்டு): அத்தனை படிகளும்!

□வகுப்புக்கு வந்த ஆசிரியர் கூடவே இன்ஸ்பெக்டரையும் அழைத்து வந்திருந்தார்.

இன்ஸ்பெக்டர் வகுப்பின் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டு பாடத்துக்கு இடையூறு விளைவிக்காமல் அந்த இளம் ஆசிரியர் எப்படிச் சொல்லித் தருகிறார் என்பதைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்.

''சாப்ரோவ்!'' என்று ஆசிரியர் உரக்க அழைத்தார். ''சென்ற வகுப்பில் நாம் என்ன பாடம் படித்தோம்?''

சாப்ரோவ் கேள்விக்குப் பதில் கூறினான். அடுத்து ''கான்ஸோவ்! கரும்பலகைக்கு அருகில் வா! உனக்குக் கொடுத்த வீட்டுப் பாடம் என்ன?'' என்றார் ஆசிரியர். மீண்டும் அதே பையன் படு சுட்டியாகப் பதில் அளித்தான். அடுத்த கணம் இன்ஸ்பெக்டர் வேகமாக எழுந்திருந்து இளம் ஆசிரியரின் அருகில் வந்து முணுமுணுத்தார்: ''ஒரே பையன்தான். முதலில் அவன் சாப்ரோவ்.... இப்பொழுது அவன் கான்ஸோவ் !''

''கான்ஸோவுக்குப் பதிலாக நீ ஏன் வந்தாய்?'' என்று இளம் ஆசிரியர் கோபமாகக் கேட்டார்.

''மன்னிக்கணும் ஸார்! கான்ஸோவ் ஒரு கால் பந்தாட்ட விசிறி! அவன் மாட்சுக்குப் போய், அவனுக்குப் பதிலாக என்னைப் பதிலளிக்கச் சொல்லி யிருக்கிறான்! நீங்கள் இப்படி எங்கள் இருவரையுமே அழைத்துத் தர்மசங்கடத்தில் ஆழ்த்துவீர்கள் என்று நான் நினைக்கவில்லை!''

''நீ இடத்துக்குப் போ!'' என்ற இளம் ஆசிரியர், ''நீ அதிர்ஷ்டக்காரன். உன் ஆசிரியர் மாட்சுக்குப் போயிருக்கிறார்! அவர் தமக்குப் பதிலாக என்னை நிறுத்திவிட்டுப் போயிருக்கிறார்! இல்லாவிட்டால் உன்பாடு கஷ்டம்தான்!'' என்றார்.

இன்ஸ்பெக்டர் மொழிந்தார்: ''நல்லது! நல்லது நீங்களும் அதிர்ஷ்டசாலிதான். உண்மையான இன்ஸ்பெக்டரும் மாட்சுக்குப் போய் என்னை அவருக்குப் பதிலாக அனுப்பி வைத்திருக்கிறார்! இல்லாவிட்டால் உங்கள் அனைவரது பாடுமே அதோகதிதான்!''

□கிண்டர் கார்ட்டன் வகுப்பில் காட்யா தன் ஆசிரியை கையில் பணம் வைத்திருப்பதைக் கண்டு, ''அடே! நீங்கள் பணம் வாங்கினீர்களா?'' என்றான் அதிசயத்துடன்.

''இல்லை! நான் செய்த வேலைக்காகக் கிடைத்த ஊதியம் இது!''

''நீங்கள் வேலை செய்கிறீர்களா என்ன? நீங்கள் எங்களுடன் விளையாடுவதாக அல்லவா நினைத்தேன்!'' என்றான் காட்யா.

- தொகுப்பு: பி. எஸ். எம்.







தலையாய கூந்தல் அலங்கார நிபுணர்கள் சிபாரிசு செய்வது க்ளீம் ஷாம்பு— கேசத்தைப் பட்டுப்போல் சுத்தமாகவும், படியும்படியும் வைப்பதற்கு.



க்ளீம் ஷாம்பு கார நீரிலும் மென்னீரிலும் நுரை கொழிக்கச் செய்கிறது. கேசத்தைத் துப்புரவாக சுத்தம் செய்கிறது. பட்டுப் போலவும் பளபளப்பாகவும் ஆக்குகிறது.



புது டில்லியைச் சேர்ந்த கூந்தல் அலங்கார நிபுணர் மேடம் பி. ராய் க்ளீம் ஷாம்புவைப் பாராட்டுகிறார். "கேசத்தை மிருதுவாகவும் படியும் படியும் வைக்கிறது. கேசம் நீளமானாலும் குட்டையானாலும் விரும்பும் வகையில் படியவைக்க உதவுகிறது க்ளீம்" என்கிறார் அவர்.

க்ளீம் ஷாம்பு கேசம் படிவதற்கும் நவீன கூந்தல் அலங்காரத்துக்கும் துணை புரிகிறது.



அதன் பிரெஞ்ச் நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள். அதிகபட்ச சிக்கனம் பெற 400 மி.லி. பாட்டில் வாங்குங்கள்.





க்ளீம் ஷாம்பு

கார நீரிலும் மென்னீரிலும் நுரை கொழிக்கிறது

3 சைஸ்கள் : 100 மி.லி., 200 மி.லி., 400 மி.லி.

Geoffrey Manners & Co. Ltd.

G.32

ஐந்து ஐம்பதானது!



''நான் மெட்ராஸுக்கு வந்தபோது என்னிடம் ஐந்து ரூபாய்தான் இருந்தது. அதைக் கொண்டு நான் இரண்டே நாட்களில் ஐம்பது ரூபாய் சம்பாதித்தேன்.''

''எப்படி?''

''அந்தப் பணத்தில், 'உடனே ஐம்பது ரூபாய் அனுப்பவும்' என்று ஊருக்கு ஒரு தந்தி அடித்தேன்!''

-பாலி

திலே சொல்லியிருக்கு' என்று கேட்டுவிட்டுப் பைத்தியக்காரப் பட்டத்தை வாங்கிக் கட்டிக் கொண்டவன்.

மாப்பிள்ளை அழைப்பு தெரு திரும்பி வரும் ஓசை கேட்டது. அதை வேடிக்கை பார்க்கச் சென்ற கூட்டம் மறுபடியும் சிரிப்பும் கொம்மாளமுமாய்ச் சத்திரத்துக்குள் நுழைந்தது. மஞ்சுவின் புல்லாக்கைப் பார்த்து விட்டு ஒருத்தி, ''ஏண்டியம்மா! இதென்ன புதுசா அலங்காரம்?'' என்று கேட்டு வைத்தாள்.

''பாட்டிதான் போட்டுக்கச் சொன்னா—''

''மொதல்லே அதைக் கழற்றி வை.. 'ஃபாரின் ரிட்டர்ண்ட்' மாப்பிள்ளை, பார்த்துட்டு மூர்ச்சை போட்டு விழப் போறார்!''

தாத்தா வந்து பேத்தியின் அருகில் நின்றார். ''ரொம்ப நன்னா யிருக்கு மஞ்சு. உன் பாட்டி மாதிரியே இருக்கே—''

சுற்றியிருந்த பெண்கள் கலகலவென்று சிரித்தார்கள்.

''ஏம்மா குழந்தைகளா சிரிக்கிறீங்க? பாட்டி மாதிரி பேத்தி இருக்க மாட்டாளா?''

மறுபடியும் சிரிப்பு. ஓ! இந்தச் சிரிப்பு தேவையுள்ளதாகவும் தேவையற்றதாகவும், தேவைக்கு மீறியதாகவும் இப்போது எப்படித்தான் ஒரு தொத்து வியாதி மாதிரி எல்லோரையும் பிடிக்கிறதோ?

வரதனுக்குக் கோபம் வந்தது. 'ஏன் இப்படிக் காரணமில்லாமல் சிரிக்கணும்?' என்று இரைந்து கத்த வேண்டும் போலிருந்தது.

மாப்பிள்ளை அழைப்பு வாசலுக்கு வந்து விட்டது. அந்த ஒரு நாளுக்காக ஒரு தடவைக்காக பல நூறுகள் (மாமனார் கொடுத்த பணத்திலிருந்து) போட்டு வாங்கிய சூட், கோட்டுடன் மாப்பிள்ளை ஜம்மென்று காரிலிருந்து கீழே இறங்கினார்.

கூட்டத்தில் சில அந்நிய நாட்டவரும் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் வரதனை அணுகிக் கேட்டான்:

''உங்கள் நாட்டு மணமகனும் ஏன் சூட் போட்டுக் கொண்டிருக்கிறார்? இது இந்திய உடை அல்லவே?''

வரதன் பதில் கூறத் தெரியாமல் விழித்தான். பிறகு நடந்த நிச்சயதார்த்தம் முதலியவையும் ஏதோ சம்பிரதாயச் சடங்குகளாகவே வரதனுக்குத் தோன்றின. சாஸ்திரிகள் ஏதோ மந்திரங்களை ஓதிக் கொண்டிருந்தார். மணமகன் வருகிற நண்பர்களுடன் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தான். இடை விடையே மந்திரம் சொல்வதாகப் பாவனை செய்தான்.

வரதனுக்குப் பசிக்க ஆரம்பித்தது. நண்பன் இவனை அநேகமாக மறந்து விட்டவன் போல் இருந்தான். அவனிடம் பல விஷயங்களை — இவர்கள் நட்புபற்றி — ஞாபகப்படுத்த வேண்டியிருந்தது. அயல்நாடு போய்த் திரும்பியதால் நட்பும் அந்நியமாகி விட்டது போலும் என்று நினைத்துக் கொண்டே சாப்பாட்டு ஹாலுக்குள் நுழைந்தான்.

அங்கே பல விஷயங்கள் இவன் கண்களில் பட்டன. அரைகுறையாகச் சாப்பிட்டு வைப்பவர்கள், இன்னும் கொஞ்சம் போட மாட்டார்களா என்று ஏங்குகிறவர்கள், சாப்பாட்டைத் தொட்டே பார்க்காமல் இலையோடு ஒதுக்கிவிட்டு எழுந்து போகிறவர்கள்!

வரதனுக்கு நன்றாகப் பசித்தது. ஆனால் பந்தி விசாரிப்பவர்களின் கவனக் குறைவால் அரைவயிற்றுக்குத்தான்சாப்பாடுகிடைத்தது.

அன்றிரவு அவன் வீட்டை அடையும் போது குழந்தைகள் தூங்கி விட்டார்கள். மனைவி மட்டும் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள்.

''சாப்பாடு பலமா? என்ன ஸ்வீட் போட்டார்கள்?''

''இந்தச் சர்க்கரைப்பஞ்ச காலத்தில் ஸ்வீட் போடுகிறார்கள்! வெறும் பாயசம் தான்—''

''ஐயே! பொய்யைப் பார்! சிநேகிதன் அப்படி இப்படின்னு சொல்லிண்டு போய் இவ்வளவுதானா?''

''சிநேகிதனா?'' என்று சிரித்த வரதன், ''நீ சாப்பிட்டியோ?'' என்று கேட்டான்.

''ஓ! உங்களுக்குத்தான் கல்யாண வீட்டில் சாப்பாடாச்சேன்னு நான் வெறும் மோருஞ் சாதமும் வடு மாங்காயும் போதும்னு இருந்துட்டேன்!''

வரதன் மனைவியிடம் மேலும் நெருங்கி நின்று, ''எனக்குக் கொஞ்சம் மோருஞ் சாதம், வடுமாங்காய் கொண்டு வா பார்க்கலாம்'' என்றான்.

அவள் சிரித்துக்கொண்டே உள்ளே போய்ச் சாதம் கொண்டு வந்தாள்.

''நாளைக்கு எத்தனை மணிக்கு முகூர்த்தம்?'' என்று கேட்டு வைத்தாள்.

''அதைப் பற்றி என்ன? நான் நாளைக்குப் போகப் போவதில்லை. அப்படிப் போகிறதானால் நானும் ஜம்முன்னு கோட்டு, சூட்டுன்னு ஆள் பாதி, ஆடை பாதின்னு போகணும்... தெரிஞ்சுதா?''

''அதான் நானும் சொல்லிண்டிருக்கேன். நல்லதா பாம்பே டையிங் அது இதுன்னு தைச்சுக்கோங்கோ — இப்படி....'' என்று அவள் ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

''உஷ்...மணி பதினொண்ணு... போய்ப் படுத்துக்கோ'' என்றபடி வரதன் விளக்கை அணைத்தான்.

இருபத்துநான்காம் அத்தியாயம்

புள்ளலூர்ச் சண்டை

கண்ணபிரான் ரதத்தை விட்டுக் குதித்துக் குதிரைகளின் தலைக் கயிறு களைப் பிடித்துக் கொண்டே, சிவ காமியை நெருங்கி வந்து, "தங்கச்சி! இதென்ன? இங்கே எப்போது வந் தீர்கள்? இது என்ன ஊர்?" என்று துரிதமாய்க் கேட்டான்.

"சிதம்பரம் போகலாம் என்று கிளம்பி வந்தோம், அண்ணா! வழி யிலே இங்கே தங்கினோம். இந்த ஊருக்கு அசோகபுரம் என்று பெயராம். அதோ அசோக மகாராஜாவின் ஸ்தம்பம் தெரி கிறதே; நீங்கள் பார்க்க வில்லையா?" என்றாள் சிவகாமி.

"அதையெல்லாம் பார்க்க எனக்கு இப்போது சாவகாசமில்லை. ஆமாம், நீங்கள் என்னத்திற்காக இவ்வளவு அவ சரப்பட்டுக் கொண்டு யாத்திரை கிளம்பினீர்கள்?....."

"அந்தக் காட்டு வீட்டிலே இந்த யுத்த காலத்திலே தனியாக இருப்பா



னேன் என்றுதான் கிளம்பினோம். குமாரச் சக்கரவர்த்தியுந்தான் எங்களை அடியோடு மறந்து விட்டாரே!...."

"என்ன வார்த்தை, அம்மா, சொல்கிறாய்? மாமல்லராவது, உங்களை மறப்பதாவது ? போர்க்களத்துக்குப் போகும்படி சக்கரவர்த்தியிடமிருந்து அநுமதி வந்ததும், முதலில் உங்கள் வீட்டைத் தேடிக் கொண்டுதானே வந் தோம்! வீடு பூட்டிக் கிடந்ததைக்

கண்டதும் மாமல்லருக்கு என்ன கோபம் வந்தது தெரியுமா?''

''எட்டு மாதங்கள் எங்களை எட்டிப் பாராமலே இருந்தவருக்குக் கோபம் வேறேயா ? போகட்டும், எங்கே இப்படி எல்லோரும் தலைதெறிக்க ஓடுகிறீர்கள் ?''

''புள்ளலூர்ச் சண்டையைப் பற்றிக் கேள்விப்படவில்லையா?'' என்று சொல்லிக் கொண்டே கண்ணன் ரதத்தில் ஏறினான்.

''ஓகோ ! சண்டைக்குப் பயந்து கொண்டா இப்படி ஓடுகிறீர்கள் ?'' என்று சிவகாமி பரிகாசச் சிரிப்புடன் கேட்டாள்.

''இல்லை, அம்மா, இல்லை. சண்டைக்குப் பயந்து ஓடுகிறவர்களை நாங்கள் துரத்திக் கொண்டு ஓடுகிறோம். தங்கச்சி! நீ மட்டும் இங்கேயே இருந்தால், நாங்கள் திரும்பி வரும்போது இந்த ரதத்தின் சக்கரத்திலே கங்கபாடி அரசன் துர்விநீதனைக் கட்டிக் கொண்டு வருவதைப் பார்ப்பாய்!'' என்றான்.

''அண்ணா ! நான் கட்டாயம் இங்கேயே இருக்கிறேன். மாமல்லரிடமும் சொல்லுங்கள்!'' என்று சிவகாமி கூறி, மறுபடியும் தயக்கத்துடன், ''நான் ஏதாவது தவறு செய்திருந்தாலும் மன்னித்துக் கொள்ளும்படி சொல்லுங்கள்!'' என்றாள்.

அதே சமயத்தில் கண்ணன் சாட்டையைச் 'சுளீர்' என்று சொடுக்கவே, குதிரைகள் பிய்த்துக் கொண்டு கிளம்பின. கண்ணன் தலையை மட்டும் திருப்பி, 'ஆகட்டும்' என்பதற்கு அறிகுறியாகக் குனிந்து சமிக்ஞை செய்தான்.

மறுகணம் ரதம் மாயமாய்ப் பறந்து சென்றுவிட்டது.

அப்போது உள்ளேயிருந்து வந்த ஆயனர், ''சிவகாமி ! யாருடன் பேசிக் கொண்டிருந்தாய் ? ரதத்திலே போனது யார் ?'' என்று கேட்டார்.

''கண்ணபிரான், அப்பா ! ரதத்துக்கு முன்னால் குதிரை மேல் மாமல்லரும் பரஞ்சோதியும் போனார்கள்!''

''அப்படியா? நாம் அவர்களை விட்டு விட்டு வந்தாலும் அவர்கள் நம்மை விடமாட்டார்கள் போலிருக்கிறதே?''

''அவர்கள் நமக்காக வரவில்லை, அப்பா !''


''நமக்காக அவர்கள் ஏன் வரப் போகிறார்கள் ? சிற்பியின் வீட்டைத் தேடிச் சக்கரவர்த்திகள் வந்த காலம் எல்லாம் மலை ஏறிப் போய்விட்டது, சிவகாமி !''

''அப்படிச் சொல்லாதீர்கள், அப்பா! கோட்டையைவிட்டுக் கிளம்ப அனுமதி கிடைத்தவுடனே மாமல்லர் நம்முடைய வீட்டைத் தேடிக் கொண்டு தான் வந்தாராம்.''

''அப்படியானால் குண்டோதரன் சொன்னது உண்மைதானா ?'' என்று கேட்டார் ஆயனர்.

''ஆமாம், நாம் வீட்டில் இல்லாமற் போனதில் மாமல்லருக்குக் கோபம் வந்ததும் உண்மைதான்.''

''அதனால்தான் நான் சொன்னேன், இருக்கும் இடத்திலேயே இருப்போம்





என்று. நீ பிடிவாதம் பிடித்து, தேச யாத்திரை கிளம்ப வேண்டும் என்று ஒற்றைக் காலால் நின்றாய்! அதன் பலனைப் பார்!''

ஆயனருக்கு மனம் கசந்துபோயிருந்த படியால் இப்படியெல்லாம் பிறர் மேல் குறை சொல்வது கொஞ்ச நாட்களாக வழக்கமாய்ப் போயிருந்தது. எனினும், இப்போது அவர் கூறியது உண்மையானபடியால், சிவகாமிக்குப் பெரிதும் வேதனை உண்டாயிற்று.

''போனதைப் பற்றிச் சொல்லி என்ன பயன், அப்பா?''

''ஒன்றுமில்லைதான்; இருந்தாலும், இந்த வழியாய்ப் போனவர்கள் சற்று நின்று நம்மைப் பார்த்துவிட்டுப் போகக் கூடாதா? ஒரு காலத்தில் மாமல்லர் நம்மிடம் எவ்வளவு பிரியமாயிருந்தார்?''

''பிரியத்துக்கு இப்போதுதான் என்ன குறைவு வந்தது? இது யுத்த



காலமல்லவா? அதனால் எல்லாருக்கும் அவசரமாயிருக்கிறது. திரும்பி வரும் போது மாமல்லர் இங்கே வந்து நம்மைப் பார்ப்பார் என்று கண்ணபிரான் சொன்னான், அப்பா!''

'' அந்தமட்டில் சந்தோஷம். ஆனால் எதற்காக இப்படி எல்லாரும் ஓடுகிறார்களாம்?''

''புள்ளலூர் என்னுமிடத்தில் பெரிய யுத்தம் நடந்ததாம்!....''

''ஓகோ! யுத்தகளத்திலிருந்து இப்படி ஓடுகிறார்களாக்கும்! ஆஹா! காலம் எப்படி மாறிவிட்டது! முன் காலத்தில் போருக்குப் புறப்படுகிறவர்கள் வெற்றி அல்லது வீர சொர்க்கம் என்று உறுதியுடன் கிளம்புவார்கள். போர்க்களத்தில் முதுகுகாட்டி ஓடுவதைப் போல் கேவலம் வேறொன்றும் இல்லை என்று நினைப்பார்கள்....''

''அப்பா! இந்த யுத்தத்தில் போர்க்களத்திலிருந்து ஓடியவர்கள் எதிரிகள் தான்; அது உங்களுக்குத் திருப்தி தானே?''

''அதிலே என்ன திருப்தி? சுத்த வீரர்களை வென்று ஜயக்கொடி நாட்டினால் புகழும் பெருமையும் உண்டு. புறமுதுகிட்டு ஓடுகிறவர்களை ஜயிப்பதில் என்ன கௌரவம் இருக்கிறது?''

எந்த வழியிலும் ஆயனரைத் திருப்தி செய்ய முடியாது என்பதைக் கண்ட சிவகாமி அவருடன் பேசுவதில் பயனில்லை என்று தீர்மானித்து மௌனம் பூண்டாள். இருவருடைய உள்ளங்களும் வெவ்வேறு சிந்தனையில் ஆழ்ந்தன.

* * *

அன்று சூரியன் அஸ்தமிக்க ஒரு நாழிகை இருக்கும்போது குண்டோதரன் திடும்பிரவேசமாக வந்து சேர்ந்தான். அவன் எங்கே போயிருந்தான், புத்த பிக்ஷுவைக் கண்டுபிடித்தானா, குதிரை திரும்பக் கிடைத்ததா என்னும் விஷயங்களைப் பற்றி ஆயனரும் சிவகாமியும் ஆவலுடன் அவனை விசாரித்தார்கள்.

'' அதை ஏன் கேட்கிறீர்கள், போங்கள். உங்களுடைய சொல்லைத் தட்டிவிட்டு, புத்த பிக்ஷுவைப் பிடிப்பதற்காக ஓடினாலும் ஓடினேன்; நேரே யுத்த களத்திலேயே போய் மாட்டிக் கொண்டேன். அப்பப்பா! இந்த மாதிரி பயங்கர யுத்தத்தை நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை!'' என்றான் குண்டோதரன்.

சிவகாமி, ''என்ன சண்டை? எங்கே நடந்தது? சண்டை முடிவு என்ன ஆயிற்று?'' என்று கேட்டாள்.

அதன்பேரில் குண்டோதரன் புள்ளலூர்ச் சண்டையைப் பற்றி விவரமாகக் கூறினான். பழந்தமிழ் நாட்டின் சரித்திரத்தில் பிரசித்திபெற்ற அந்தப் புள்ளலூர்ச் சண்டையைப் பற்றி இப்போது வாசகர்களும் தெரிந்து கொள்வது அவசியமாகும்:

வாதாபிப் புலிகேசியின் சைனியம் பல்லவ ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்த சில நாளைக்கெல்லாம் கங்க நாட்டு அரசன் துர்விநீதனுடைய சைனியம் திரண்டு பல்லவ ராஜ்யத்தின் மேற்கு எல்லையில் வந்து நின்றது. வாதாபி சைனியத்தினால் பல்லவர்படை முறியடிக்கப்பட்டது என்ற செய்தி வந்ததும் பல்லவ இராஜ்யத்துக்குள் பிரவேசிக்க ஆயத்தமாக அந்தச் சைனியம் காத்துக் கொண்டிருந்தது. ஆனால், திடீரென்று துர்விநீதனுக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ, தெரிய


மிகமென்மையான பிளேடு-களையும், விண்வெளி பிளேடு-களையும் உபயோகித்துப் பார்த்தேன்.
சுத்திமுனைபோல கூரான பிளேடுகளையும் விதவித-மான விநோத உலோகங் கலவையுடைய பிளேடுகளையும் உபயோகித்துப் பார்த்தேன்.
வெட்டுக்காயங்களும், கீறல்களும், எரிச்சலும்தான் மிச்சம்.
கடைசியாக சில்வர் ப்ரின்ஸ் உபயோகித்துப் பார்த்தேன். முகக்ஷவரம் மழமழப்பாகவும், சுத்தமாகவும் இருந்தது... நிறைவேற்றமுடியாத உறுதி மொழிகளல்ல
சில்வர் ப்ரின்ஸ்
சுத்தமான, மழமழப்பான க்ஷவரத்தைத் தரும்...
உறுதிமொழியை நிறைவேற்றிடும் பிளேடு.
SILVER PRINCE
STAINLESS
சில்வர் ப்ரின்ஸ்–சுகமான க்ஷவரம்...சொகுசான க்ஷவரம்
நீங்கள் சில்வர் ப்ரின்ஸ் கொண்டு மழமழப்-பாகவும், சுத்தமாகவும் க்ஷவரம் செய்து கொள்ளலாம். ஏனெனில் இறக்குமதி-யான மிகச் சிறந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீலில், இந்தியாவில் அதி முன்னேற்ற-
SILVER
PRINCE
STAINLESS
மான தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப் படுகிறது சில்வர் ப்ரின்ஸ். நீங்களும் சுகமான க்ஷவரத்தைப் பெறுகிறீர்கள். எனவேதான் சில்வர் ப்ரின்ஸ் முகக்ஷவரத்தை சுகக்ஷவரம் என்கிறோம்.
Grant.S.TM


கோடையில்—
சாதாரணமான சருமம்...
வாடிவிடும் வியர்க்குருவினால்..
Glaxo
nycil
PRICKLY HEAT
POWDER
SOOTHES AND PROTECTS THE SKIN
நைஸில்*
க்ளாக்ஸோ தயாரிப்பு
டிரேடு மார்க்
காலையிலே குளித்தபின்...
மேனிமீது தூவித் தெளிப்பீர்
நைஸில் பவுடரை
வேர்க்குரு என்றால்
வீசை என்ன விலை
என்று கேட்பீர்கள்!
அபரிமிதமான வியர்வையினால் சருமத் துவாரங்கள் அடைபடும் போது, யாரும் வியர்க்குருவினால் அவதிப் படுவார்கள் என மருத்துவ ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. எரிச்சலும் அரிப்பும் ஏற்படுகின்றன; சருமம் பாதிக்கப் படுகிறது. இதனை எதிர்த்துப் போராடும் குளோர் பெனிஸின் மற்றும் போரிக் பவுடர் அடங்கியது நைஸிலில் 'ப்ளூ' ஒன்றுதான்-அதோடு உங்கள் சருமத்திற்குப் பாதுகாப்புத் தரும் ஸிங்க் ஆக்ஸைடும் அதில் அடங்கியுள்ளது.

வில்லை. ஒரு நாள் கங்கநாட்டுச் சைனியம் பல்லவ இராஜ்யத்துக்குள் நுழைந்து விட்டதென்றும் காஞ்சியை நோக்கி முன்னேறி வருகிறதென்றும் தெரிந்தது. இதையறிந்த மகேந்திரர் வடக்குப் போர் முனையிலிருந்து குமார சக்கரவர்த்திக்குக் கட்டளை அனுப்பினார். திருக்கழுக்குன்றத்திலுள்ள பாதுகாப்புப் படையுடன் சென்று கங்க நாட்டுச் சைனியம் காஞ்சியை அணுகுவதற்கு முன் அதை எதிர்க்கும்படியாகச் சொல்லி அனுப்பினார். இத்தகைய கட்டளைக்காக எட்டு மாத காலமாகத் துடிதுடித்துக் கொண்டிருந்த மாமல்ல நரசிம்மர் தளபதி பரஞ்சோதியுடன் உடனே கிளம்பிச் சென்று திருக்கழுக்குன்றத்திலிருந்த படைக்குத் தலைமை வகித்து நடத்திச் சென்றார். காஞ்சி நகருக்குத் தென் மேற்கே இரண்டு காத தூரத்தில் புள்ளலூர்க் கிராமத்து எல்லையிலே இரண்டு சைனியங்களும் சந்தித்தன.

மாமல்லர் தலைமை வகித்த பல்லவ சைனியத்தைக் காட்டிலும் கங்க நாட்டுச் சைனியம் மூன்று மடங்கு பெரியது. ஆனாலும், மாமல்லரின் வீரப் படை கங்க நாட்டுச் சைனியத்தின் மேல் எதிர்பாராத சமயத்தில் இடி விழுவதுபோல் விழுந்தது. மாமல்லரும் பரஞ்சோதியும் கையாண்ட யுத்த தந்திரங்களும் போர்க்களத்தில் முன்னணியில் நின்று நிகழ்த்திய வீரச் செயல்களும், பல்லவ வீரர்களுக்கு இணையில்லாத உற்சாகத்தையும் துணிச்சலையும் அளித்தன.

போர் உச்சநிலை அடைந்தபோது கங்க சைனியத்தை மற்றொரு பக்கத்தில் இன்னொரு புதிய படை தாக்குவதாக வதந்தி உண்டாயிற்று. அவ்வளவுதான்! அத்தனை நேரமும் ஒருவாறு தைரியமாகப் போரிட்டு வந்த கங்க சைனியத்தின் வீரர்களைப் பீதி பிடித்தது. உயிர் பிழைத்தால் போதும் என்று கங்க வீரர்கள் சிதறி ஓட ஆரம்பித்தார்கள்.


கங்க நாட்டரசன் துர்விநீதன் பட்டத்து யானை மேல் ஏறிக் கொண்டு தெற்குத் திக்கை நோக்கி ஓடிக் கொண்டிருந்ததாகச் செய்தி வந்தது. அவனை எப்படியாவது சிறைப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்து மாமல்லரும் பரஞ்சோதியும் பல்லவ சைனியத்தைச் சிறு சிறு படைகளாகப் பிரித்துத் தெற்கு நோக்கிப் பல வழிகளிலும் போகச் சொல்லி விட்டுத் தாங்களும் அதே திசையில் அதிவேகமாகச் சென்றார்கள்.

போர்க்களத்தில் தெறி கெட்டு ஓடிய ஒரு குதிரையைக் கைப்பற்றி அதன் மேல் ஏறிக் கொண்டு குண்டோதரனும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தான். துரதிருஷ்டவசமாக வழியில் அவன் ஏறி வந்த குதிரை காலை ஒடித்துக் கொண்டது. அதனால் அவன் பின்னால் தங்கிவிடும்படி நேர்ந்தது. குதிரையை அப்படியே விட்டுவிட்டுக் கால்நடையாக நடந்து அசோகபுரம் வந்து சேர்ந்ததாகக் குண்டோதரன் அவனுடைய வரலாற்றைக் கூறி முடித்தான்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

“திருப்பாற்கடல்”

புள்ளலூர்ச் சண்டையைப் பற்றிக் குண்டோதரன் கூறிய விவரங்களைக் கேட்கக் கேட்க, மேலும்மேலும் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேணும் என்னும் ஆவல் ஆயனருக்கும் சிவகாமிக்கும் பொங்கிப் பெருகியது. முக்கியமாகப் போர்க்களத்தில் மாமல்லர் நிகழ்த்திய அதி அற்புத தீரச் செயல்களைப் பற்றிக் கேட்பதில் சிவகாமி அடங்காத தாகம் கொண்டிருந்தாள். குண்டோதரனும் குதூகலத்துடன் அந்த வீரச் செயல்களை வர்ணித்தான்:



''ஆகா! போர்க்களத்தில் எதிரிகளுக்கிடையில் புகுந்து மாமல்லர் வீர வாளைச் சுழற்றியபோது எப்படி இருந்தது தெரியுமா? அது கேவலம் வாளாகத் தோன்றவில்லை. திருமாலின் சக்ராயுதத்தைப் போலவே சுழன்று ஜொலித்தது! அந்த வாளிலிருந்து கணந்தோறும் நூறு நூறு மின்னல்கள் மின்னின. ஒவ்வொரு மின்னலும் ஓர் எதிரியின் தலையைத் துண்டித்து எறிந்தது.......''

இப்படி வருணித்துக் கொண்டேயிருந்த குண்டோதரன் திடீரென்று நிறுத்தி, ''குருவே! இந்த விஹாரத்திலிருந்த வயோதிக புத்தபிக்ஷு எங்கே?'' என்று கேட்டான்.

''அப்பனே! நாங்கள் வந்ததிலிருந்து பெரும்பாலும் அவர் இங்கே

இருப்பதில்லை. அநேகமாக சைத்யத்திலேயே * இருக்கிறார். தினம் இரண்டு தடவை இங்கே வந்து எங்களுக்கு என்ன வேண்டும் என்று விசாரித்து விட்டுப் போய் விடுகிறார்!'' என்றார் ஆயனர்.

''குருவே! அவரை அவசரமாகப் பார்க்க வேண்டும். பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று சொல்லி விட்டுப் போனான்.

குண்டோதரன் விஹாரத்திலிருந்து கிளம்பி வாசலில் வந்தபோது சூரியன் அஸ்தமித்து அந்தி மயங்கிக் கொண்டிருந்த நேரம். ஆனால், அன்று சாதாரண அந்தி நேரமாகக் காணப்படவில்லை. இரவானது திடீரென்று இருண்டு திரண்டு நாற்புறமும் சூழ்ந்து வந்ததாகத் தோன்றியது. இதற்குக் காரணம் என்னவென்று குண்டோதரன் வானத்தை நோக்கியபோது, வடக்குத் திக்கில் மைபோல் கறுத்த கொண்டல்கள் திரள் திரளாக மேலே எழுந்து வருவதைக் கண்டான். ''ஆஹா! இன்றிரவு பெருங் காற்றும் மழையும் திருவிளையாடல் புரியப் போகின்றன. பகலெல்லாம் அவ்வளவு புழுக்கமாயிருந்த காரணம் இதுதான் போலும்!'' என்று குண்டோதரன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவர்கள் தங்கியிருந்த விஹாரத்திலிருந்து சற்றுத் தூரத்தில் தனித்திருந்த பாழடைந்த புத்த சைத்யத்தைக் குண்டோதரன் நெருங்கியபோது உள்ளேயிருந்து பேச்சுக் குரல் வந்தது.

வெளியிலேயே இருள் கவிந்து சூழ்ந்திருந்த நிலையில், சைத்யத்துக்குள் குடிகொண்டிருந்த அந்தகாரம் எப்படியிருந்திருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டியதில்லை. அந்தக் கன்னங்கரிய இருளின் உதவியால் குண்டோதரன் பேச்சுக் குரல் வந்த இடத்துக்கு வெகு சமீபத்தில் போய் மூச்சுக்கூடக் கெட்டியாக விடாமல் தூண் மறைவில் நின்றான். பின்வரும் சம்பாஷணை அவன் காதில் விழுந்தது:

''உடனே, இந்தக் கணமே, அவர்களை அழைத்துக்கொண்டு கிளம்புங்கள். பொழுது விடிவதற்குள்ளாக வராக நதியைத் தாண்டிவிட வேண்டும். வழியில் உள்ள கிராமங்களில் வண்டி கிடைத்தால் ஏறிக்கொண்டு போங்கள். எப்படியும் நாளைச் சூரியோதயத்துக்குள் வராக நதியைத் தாண்டி விடுங்கள்.''

''அவர்கள் கிளம்ப மறுத்தால்...?''

''தொல்லைதான். ஏதோ ஒரு பிசகினால் நான் போட்ட திட்டமெல்லாம் வீணாகப் போய்விட்டது. ஆனாலும், புத்த பகவான் அருளால் எல்லாம் ஒழுங்காகிவிடும். அவர்களிடம் எதையாவது சொல்லிப் புறப்படச் செய்யுங்கள்.... இங்கே பெரிய சண்டை நடக்கப் போவதாகச் சொல்லுங்கள். இதெல்லாம் ஒன்றும் பலிக்காவிட்டால், திருப்பாற்கடல் உடைப்பு எடுத்துக் கொண்டு விட்டதாகச் சொல்லுங்கள்!''

''சுவாமி! இது என்ன சொல்கிறீர்கள்?''

''ஆம்; திருப்பாற் கடல் ஏற்கனவே அலை மோதிக் கொண்டிருக்கிறது. புத்த பகவான் கருணையினால் இன்று மழை பெய்தால் கட்டாயம் கரை உடைத்துக் கொள்ளும்......'' என்று கூறி, நாகநந்தி தமது ஆழ்ந்த பயங்கரக் குரலில் சிரித்தார்.

புத்த பிக்ஷு மேலும் கூறிய மொழிகள் முன்னைக் காட்டிலும் மெதுவான குரலில் வெளிவந்தன:

''அப்படியும் அவர்கள் கிளம்பாமல் உடைப்பு எடுத்து வெள்ளமும் வந்து விட்டால், என்ன செய்ய வேண்டும் தெரியுமா? விஹாரத்தில் இன்னும் ஒரு தெப்பம் மீதி இருக்கிறதல்லவா? அதில் ஏறிக் கொண்டு, போன மாதம் நாம் பார்த்த பாறை மேட்டுக்குப் போய்ச் சேருங்கள். மற்றவர்கள் எப்படியானாலும் சிவகாமியைக் கட்டாயம் காப்பாற்றியாக வேண்டும், தெரியுமா, சுவாமி!''

மேற்படி சம்பாஷணையில் கடைசிப் பகுதியைக் கேட்டுக் கொண்டிருந்த போது, குண்டோதரனுக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. நாகநந்தியின் சிரிப்பு அவனுடைய தேகத்தைச் சிலிர்க்கச் செய்தது. அன்று ராத்திரி ஏதோ பெரிய விபரீதம் ஏற்படப் போகிறது என்பதையும், அதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு தன்னுடைய தலையில் சார்ந்திருக்கிறதென்பதையும் அவன் உணர்ந்தான். அந்தக் காரியத்தில் தனக்கு உதவி புரியும்படி தான் வழிபடும் தெய்வமாகிய பழனி மலையில் வீற்றிருக்கும் முருகக் கடவுளை வேண்டிக் கொண்டான்.

சம்பாஷணை முடிந்ததும் பிக்ஷுக்கள் இருவரும் சைத்யத்திலிருந்து வெளியில் வந்தார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து குண்டோதரனும் வந்தான். இதற்குள்ளாக மாலை போய், இரவு வந்து, நன்றாக இருட்டிவிட்

---

* 'விஹாரம்' என்பது புத்த பெருமானின் கோயிலும் பௌத்த பிக்ஷுக்கள் தங்கும் மடமும் சேர்ந்து அமைந்தது. 'சைத்யம்' என்பது புத்த பகவானின் தனிப்பட்ட ஆலயமாகும்.

டது. வட கிழக்கிலிருந்து திரண்டு வந்த மேகங்கள் வானத்தைப் பெரும்பாலும் மூடியிருந்தாலும், தெற்கிலும் மேற்கிலும் இன்னும் சில நட்சத்திரங்கள் தெரிந்தன.

சைத்யத்திலிருந்து வெளியேறிய பிக்ஷுக்களில் ஒருவர் அருகிலிருந்த விஹாரத்தை நோக்கிச் சென்றார். மற்றொருவர் சைத்யத்தைச் சுற்றிக் கொண்டு தென்மேற்குத் திசையை நோக்கிச் சென்றார்.

ஒரு கணம் குண்டோதரனுடைய மனத்தில் ஒரு போராட்டம் நிகழ்ந்தது. விஹாரத்துக்குப் போய் ஆயனருக்கு எச்சரிக்கை செய்ய வேண்டாமா என்று எண்ணினான். ஆனால், என்ன விதமாக எச்சரிக்கை செய்வது? எப்படியும் அவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்று மேற்படி பிக்ஷுக்களின் சம்பாஷணையிலிருந்தே நன்கு தெரிந்தது. எனவே, அந்தச் சந்தர்ப்பத்தில் தன்னுடைய வேலை நாகநந்தியைப் பின் தொடர்வதுதான் என்று குண்டோதரன் தீர்மானித்தான்.

அவ்விதமே அவரைப் பின்தொடர்ந்து குண்டோதரன் சற்றுத் தூரத்திலேயே நடந்து சென்றான்.

கொஞ்ச தூரம் போனதும் ஒரு மரத்தின் பின்னால் கட்டியிருந்த குதிரையை அவிழ்த்து அதில் நாகநந்தி ஏறிக் கொண்டார்.

'ஆஹா! திருட்டுப் போன குதிரை மறுபடியும் கிடைக்கப் போகிறது!' என்று குண்டோதரன் எண்ணிக் கொண்டான்.

கணத்துக்குக் கணம் வேகமாகிக் கொண்டிருந்த காற்றினாலும் இருட்டினாலும் நாகநந்தி குதிரை மேல் ஏறிய போதிலும் மெதுவாகவே போக வேண்டியிருந்தது. எனவே, அவரைத் தொடர்ந்து போவது கஷ்டமாயில்லை. சில சமயம் குதிரை அடிச் சத்தம் முன்னால் கேட்கிறதா, பின்னால் கேட்கிறதா என்பது சந்தேகமாயிருந்தது. இரண்டு பக்கத்திலும் கேட்பது போலவும் இருந்தது. இது வீண் பிரமை என்று எண்ணிக் கொண்டு மேலே சென்றான்.

ஏறக்குறைய மூன்று நாழிகை வழி வந்த பிறகு, எதிரே நீண்ட மலைத் தொடர் போன்ற ஓர் இருண்ட கரை நெடுந் தூரத்துக்கு நெடுந் தூரம் தென்பட்டது.

அதே சமயத்தில் கண்ணைப் பறிக்கும் மின்னல்களுடனும், அண்டம் அதிரும் இடி முழக்கங்களுடனும் மழை பெய்யத் தொடங்கியது.

மின்னல் வெளிச்சத்தில், நாகநந்தி மேட்டின் ஓரமாக இருந்த ஒரு மரத்தில் குதிரையைக் கட்டிவிட்டு அந்தக் கரையின் மேல் ஏறுவது குண்டோதரனுக்குத் தெரிந்தது. அதே இடத்தில் மேட்டின் மீது அவனும் ஏறினான். மழையில் நனைந்த காரணத்தினால் கரையின் மண் சேறாகி வழுக்கத் தொடங்கி விட்டபடியால் மேட்டில் ஏறுவது சுலபமாயில்லை. கடைசியில், கரையின் அடியிலிருந்து வளர்ந்திருந்த மரத்தின் உதவியால் கஷ்டப்பட்டு ஏறிக் குண்டோதரன் கரை உச்சியை அடைந்தபோது, பளீரென்று வீசிய மின்னல் வெளிச்சத்தில் ஓர் அபூர்வ பயங்கரக் காட்சி தென்பட்டது.

கரைக்கு அப்பால் திருப்பாற்கடல் என்னும் ஏரி புயற் காற்றினால் கொந்தளித்து, ஒரு மகாசமுத்திரத்தைப்போல் அலை மோதிக் கொண்டு காட்சியளித்தது. கொந்தளித்து எழுந்த அலைகள்



மின்னல் வெளிச்சத்தில் வெள்ளை வெளேரென்று ஜொலித்தபடியால், உண்மையிலேயே திருப்பாற் கடல் என்னும் பெயர் அந்த ஏரிக்கு அச்சமயம் மிகவும் பொருத்தமாயிருந்தது.

அதே நேரத்தில் குண்டோதரன் நின்ற இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் அவனுடைய உடம்பின் இரத்தத்தையெல்லாம் கண்டச் செய்யும்படியான இன்னொரு பயங்கரத் தோற்றமும் தென்பட்டது.

அலைமோதிய ஏரிக் கரையில் கையை உயரத் தூக்கிக் கொண்டு நின்ற நாகநந்தி, 'ஹா ஹா ஹா!' என்று பேய்க் குரலில் சிரித்த சத்தமானது, புயல் முழக்கத்தின் ஓசையையும் அலைகளின் ஆரவார ஒலியையும் அடக்கிக் கொண்டு மேலெழுந்தது.

நாகநந்திக்குப் பக்கத்தில் ஏரிக் கரையைப் பிளந்து கொண்டு ஒரு சிறு கால்வாய் வழியாகத் தண்ணீர் ஓட ஆரம்பித்திருந்தது.

நாகநந்தி அடிகளின் காலடியில் ஒரு மண்வெட்டி கிடந்தது! **(தொடரும்)**

சிவகாமு அடுப்படியில் வேலையாக இருந்தாள். ராகவனும் பிருந்தாவும் புறப்பட்டுச் சென்றுவிட்டது அவளுக்குத் தெரியாது. 'போய்விட்டு வருகிறோம்' என்று காரில் ஏறுமுன் நிச்சயமாகக் குரல் கொடுத்திருப்பார்கள். அவள் கவனித்திருக்க மாட்டாள்.

புவனேசுவரன் சோபாவில் அமர்ந்து சஞ்சிகை ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டார். ஆனால் அவர் மனம் அதில் லயிக்கவில்லை. சமையலறையிலிருந்த சிவகாமு காதில் விழுமாறு கத்தினார்:

''பிள்ளை மாட்டுப்பெண் மேலே தப்பு சொல்றதுன்னு உனக்குப் பிடிக்காது. அது எனக்குத் தெரியும். இதோ, இப்ப ரெண்டு பேரும் காரில் ஏறிண்டு போயாச்சு....''

''எங்கே போயிருக்கான்னு தெரியுமே. இரகசியம் இல்லையே!'' என்றாள் சிவகாமு அடுப்படியை விட்டு மீண்டு வந்து.

''இரகசியம் ஒன்னுதான் பாக்கி. இவன் ஆபீஸ் மேலதிகாரி வீட்டுக் கல்யாணம். பிருந்தாவை மட்டும் அழைச்சிண்டு போறவன் உன்னையோ என்னையோ அதற்குக் கூப்பிட்டானா?''

புயலுக்குப் பின்..

எஸ். ரங்கநாயகி

சிவகாமு சிரித்தபடியே கூறினாள்: ''நீங்கள் இன்னும் குழந்தை.''

டெலிபோன் மணி அடித்தது. விவாதத்தை நிறுத்திவிட்டுச் சிவகாமுதான் போனைக் கையில் எடுத்தாள்.

'' யார்.... ஜெயமா?.... சௌக்கியம் தாண்டிம்மா.... வீட்டிலே தியாகராஜ பஞ்சமி நடக்கிறதா.... இங்கு வந்து எங்களை அழைச்சிண்டு போகும்படி ராகவனா உங்கிட்டே சொன்னான். நீ வரவேண்டாம். நானே மாமாவோடு புறப்பட்டு வரேன்.... கண்டிப்பா வரேன்.....''

புவனேசுவரன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்.

''கிளம்பறேளா? ஜெயம்தான் பேசினாள். போற வழியிலே ராகவன் அவர்கள் வீட்டிலே இறங்கி நம்பளை வந்து அழைச்சிண்டு போகச் சொல்லியிருக்கான். அவ ஏதுக்கு வரணும், நம்பளே போகலாம்.''

'' சிவகாமு! இதெல்லாம் உனக்குச் சரியாகப் படறதா?''

'' சரியாகப் படறதுனாலேதானே கிளம்பச் சொல்றேன். உங்களைக் கல்யாணத்துக்கு அழைச்சிண்டு போகலேன்னு ராகவன் மேலே கோபம். ஆனால் அதுக்கு மாறுதலா மற்றொரு ஏற்பாடு செய்திருக்கான். அதுலே ஏதாவது பொருள் இருக்கத்தான் இருக்கும். கிளம்புங்கோ சொல்றேன். ஜெயம் பாடறதை மெய்ம்மறந்து கேட்கலாம்.''


'' உனக்கு எல்லாத்திலேயும் பொருள் இருக்கும். எல்லாம் நல்லதுக்குதான்னு ஜபம் பண்ணிண்டு உன்னையே நீ ஏமாத்திக்கப் பார்க்கறே. பிள்ளை போற வழியிலே கண் மூடிண்டு போனாத்தான் சண்டையில்லாம ஒத்து வாழமுடியும்னு உன்னோட கொள்கை.''

சிவகாமு பதில் கூறவில்லை. சிரித்துவிட்டுப் புறப்பட ஆயத்தமானாள்.

ஜெயத்தின் பாட்டில் தன்னை மறந்து சிவகாமு ஈடுபட்டு ராம ஸ்மரணையில் இருந்தபோது புவனேசுவரனோ தங்களுக்கும் மகன் மருமகளுக்கும் இடையே எதிர் நின்ற உறவு முறைகளைப் பரிசீலனை செய்வதில்தான் ஈடுபட்டிருந்தார்.

'சொந்த அப்பனைத் தன்னோடு ஓர் இடத்துக்கும் அழைத்துச் செல்ல விரும்பாதவன், உலகத்தாருக்கோ நல்ல பிள்ளை. பெற்றோர்களைக் கட்டிக் காக்கிறான் என்ற பூச்சு. உள்ளே நடப்பது யாருக்குத் தெரியும்?'

மகன் ராகவன் தன்னையும் சிவகாமுவையும் உல்லாசமாக எங்கும் அழைத்துப் போவதில்லை என்ற ஆதங்கம் புவனேசுவரனுக்கு.




பாட்டு முடிந்து வாசற்புறம் வந்தபோது ராகவனும் பிருந்தாவும் அவர்களுக்காகக் கார் கொண்டு வந்திருந்தது தெரிந்தது.

புவனேசுவரன் மகனுக்கு எதிரில் ஒன்றும் பேச முடியவில்லை. 'இவன் வேஷம் சிவகாமு வுக்குப் புரியவில்லையே?' என்று மனத்தோடு சொல்லிக் கொண்டார்.

அன்றைய தினம் சிவகாமு கண் விழித்த போது சமையல் அறையில் சத்தம் கேட்டு வியப்புற்றாள். பிருந்தா ஏன் இவ்வளவு அதிகாலையில் எழுந்து சமைக்கிறாள்?

''என்னம்மா, பிருந்தா ! இவ்வளவு விடியற்காலையில் சமையல் ?''

''உங்களுக்கு ஒரு ஸர்பிரைஸ். நீங்களே யோசித்துச் சொல்லுங்கள், பார்க்கலாம்.'' பிருந்தா அடுப்பு வேலையில் கவனமும் செலுத் திக் கொண்டு சிரித்தபடி கூறினாள்.



சிவகாமு நோக்கினாள். புலவு, பொங்கல், புளியஞ்சாதம், தேங்காய் சாதம், தயிர் அன் னம், பரமான்னங்கள்.

''என்னென்னமோ செய்திருக்கிறாய்.... எனக்குப் புரியவில்லை. 'பிக்னிக்' ஏற்பாடு போலிருக்கிறதே !''

''தெரியலையே, சரியாகச் சொல்லிவிட் டீர்கள். இன்னிக்கு எங்கள் திருமணம் நடந்த அதே தேதி. மறந்துவிட்டேளா? நாம் எல்லோரும் மஹாபலிபுரம் போறோம். ஸ்தல சயனப் பெருமாளை நமஸ்கரித்து விட்டு அங்கேயே குஷியா சாப்பிட்டுவிட்டு வரப் போறோம். புரியறதா ?''

''ஆமாமடி குழந்தை, எனக்கு மறந்தே போயிட்டது. ஒரு முழம் பூவாவது வாங்கி வைச்சிருப்பேன். என்னைச் சீக்கிரம் எழுப்பக் கூடாதா? தனியாகச் செய்திருக்கிறாயே !''

''சும்மா இருங்கோம்மா. அப்புறம் சமையல் நன்னா அமைந்திருந்தால் புகழெல் லாம் உங்களுக்குப் போயிருக்கும்! பங்கு போடக் கூடாது !''

''அட கடவுளே! எல்லாப் பண்டங்களையும் நீயா செய்திருக்கே?'' கதவுக்குப் பக்கத்தி லிருந்து ராகவனின் குரல் கேட்கிறது. ''உருப் பட்டாப்லேதான். பிக்னிக்கை ருசிக்க முடியப் போறதில்லை. எல்லாம் காரசாரமா இருக்கப் போறது. கண்ணிலிருந்து தண்ணி தண்ணியா கொட்டப் போகிறது.''

'' அதை ஆனந்தக் கண்ணீர்னு வெச் சுக்கோயேன். மாமியாருக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாதுன்னு தனியா பண்ணி யிருக்காளே குழந்தை, அதை நினைச்சுச் சந் தோஷப்படணும்.'' சிவகாமு கொள்ளைக்

குதூகலத்துடன் பேசினாள். ''எவ்வளவு தங்கமான பெண்.''

புவனேசுவரன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். 'மாட்டுப் பெண்ணை முகஸ்துதி செய்து கொண்டு எதற்கு இவள் இப்படிப் பேச வேண்டும்? தனக்கென ஒரு கௌரவம் வேண்டாமா? தலைவிலெழுத்து. ஊரிலேயே இருந்துகொண்டு நாலு டியூஷன் சம்பாத்தியத்தில் வயிற்றை நிரப்பிக் கொண்டிருக்கலாம்.'

சுவாமி தரிசனம் நன்றாக நடந்தது. இரு நண்பர்களுக்கு அழைப்பு விடுத்திருந்ததால் அவர்களும் குடும்பத்தாருடன் வந்திருந்தனர்.

பொழுது நன்றாகக் கழிந்தது. சிரிப்பும் வேடிக்கைப் பேச்சுமாக நேரம் போனதே தெரியவில்லை.

ராகவன் மீண்டும் வீட்டுக்குக் கிளம்பிய போது புவனேசுவரன் கூறினார். ''ராகவா! இன்று பௌர்ணமி. சமுத்திரத்தில் சந்திரோதயம் பார்த்துவிட்டுக் கிளம்பலாமே! நன்றாக இருக்கும்.''

''இல்லை அப்பா, சீக்கிரமே திரும்ப வேண்டும். மாலையில் ஒரு நாடகத்துக்கு நானும் பிருந்தாவும் போயாகணும்.''

புவனேசுவரனுக்கு மகனின் வார்த்தைகள் கருக்கென உரைத்தன. இத்தனை நேரம் அனுபவித்த குதூகலம் அனைத்தும் மறந்துவிட்டது.

வீடு திரும்பும்போதே கொஞ்ச நேரமாகி விட்டது. ராகவனும் பிருந்தாவும் அவசரமாக வேறு உடை மாற்றிக் கொண்டனர். சிவகாமு இருவரையும் வழி அனுப்பினாள்..

''எனக்கு அப்பவே சோழியன் குடுமி சும்மா ஆடாதுன்னு தெரியும். ஏதுடா இது, மகாபலிபுரம் அழைச்சிண்டு போறானேன்னு நெனைச்சேன். இத்தனை நாளா நான் ஆசைப் பட்டுக் கேட்டிண்டிருந்த 'சிறப்பு ஒளி' நாடகத்துக்கு அவா ரெண்டு பேருக்கு மட்டும் டிக்கெட் வாங்கி யிருக்கான். அதுக்கெல்லாம் இந்தக் கிழம் எதுக்குன்னு எண்ணம். நாம் ஊரோடு இருந்திருக்கலாம்.'' சரமாரியாகப் பொழிந்து தள்ளினார் புவனேசுவரன்.

சிவகாமு வழக்கம்போல் அடக்கமாகச் சிரித்தாள்.

புவனேசுவரனின் சகோதரியின் மகளுக்குக் கல்யாணம். தாயையும் தந்தையையும் ரயிலேற்றி அனுப்பினான் மகன். ரயிலில் மீண்டும் புவனேசுவரன் மனைவியிடம் பொழிந்து தள்ளினார்: ''காஷ்மீருக்குப் பிருந்தாவை மட்டும் கூட்டிண்டு போனான். அதுக்கு ஈடாக இந்த மாசம் என்னைக் கல்யாணத்துக்கு ரயிலேற்றி அனுப்பிவிட்டான். முதல் வகுப்பு டிக்கெட் வேறே! ஏமாற்று வித்தை!''

கல்யாணம் கழிந்ததும் ராகவனின் ஏற்பாட்டில் புவனேசுவரனும் சிவகாமுவும் அருகில் உள்ள பல க்ஷேத்திரங்களுக்குச் சென்றுவிட்டு மகனிடம் திரும்பியபோது ஒரு மாதம் ஆகிவிட்டது.

வீடு அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. பந்தல் ஜோடனைகள், மரங்களில் கலர் மின்சார விளக்குகள். சாமான்களின் சேகரிப்பு. என்னவாக இருக்கும்?

'' என்டாப்பா, ராகவா, இதெல்லாம் என்ன?'' சிவகாமு கேட்டாள்.

நீங்களே ரிப்பேர் செய்யத் தேவையில்லை



உங்களுக்குப் பணிபுரியக் காத்திருக்கிறோம்

Prestige PREETT

உங்களுடைய சௌகரியத்துக்காக 250க்கும் மேற்பட்ட பராமரிப்புப் பணி நிலையங்களை நாடு முழுதும் அமைத்திருக்கிறோம்.

உங்களுடைய பிரஸ்டீஜ் குக்கரைப் பரிசோதிக்க வேண்டியிருந்தால், உங்கள் அருகாமையில் உள்ள இந்தப் பணி நிலையங்களுள் ஒன்றிற்கு எடுத்துச் செல்லுங்கள். பயிற்சிபெற்ற மெக்கானிக் சரியான கருவிகளை கொண்டு அதைப் புதியதைப் போன்று செய்து தருவார்.

எங்கள் பராமரிப்புப் பணி நிலையங்கள் பற்றிய இலவசப் பட்டியலுக்கு எழுதுங்கள். மகிழ்ச்சியோடு அனுப்பிவைக்கிறோம்.
பிரஸ்டீஜ்-பிரீத் உங்கள் தேவைகளை பிரத்தியேகமாக செயலாற்றுகிறது.

எச்சரிக்கை

எப்போதும் அசல் மாற்றுப் பகுதிகளையே வாங்குங்கள். அவை கம்பெனியின் சின்னம் பொறிக்கப்பட்டு, பிரஸ்டீஜ்/பிரீத் டிரேட் மார்க்குடன் பாலிதீன் பைகளில் சீல் வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

போலியான மாற்றுப் பகுதிகளை வாங்காதீர்கள். அவை சரிவர இயங்காது.

டிடி. (பிரைவேட்) லிமிடெட்,
தூரவாணி நகர், பெங்களூர் 560016

Prestige PREETT

TTP:1100



பண்டைய
நாகரீகத்தின்
மறுமலர்ச்சி
அன்றைய குஜராத்தி மரபினைப் பின்பற்றி சேலை அணியும் பாணி இன்று மீண்டும் மங்கையரிடையே உலவத் தொடங்கி உள்ளது. அதுவும் அணிகதிடும் சேலை மபத்லாலின் 'மெஃப்ரின்' 100% பாலியெஸ்டர் சேலையாக இருக்குமே எனில், அழகு முழுமை பெற்று முறுவலிக்கிறது!
'மெஃப்ரின்' பாலியெஸ்டர் சேலைகள் பண்டைய கற்பனைகளுக்கு, நவீன ஒயிலோடு கூடிய வண்ணம், வடிவம் மற்றும் நெசவின் நேர்த்தியை கலந்திழைத்து, கிளர்ச்சியூட்டும் மறுமலர்ச்சியை அளிக்கின்றன!
மபத்லால் க்ரூப் அளிக்கும்
நேர்த்தியான துணிமணிகள்
மெஃப்ரின்
பாலியெஸ்டர் சேலைகள் மற்றும்
உடுப்புத் துணிகள்

''சரியாப் போச்சு. அம்மாவுக்கு ரொம்ப மறதி....... ஓ, அம்மா! நீங்கள் மணப் பெண், அப்பா மணமகன். இன்னும் ஒரு வாரம்தான் கல்யாணத் தேதிக்கு.''

சிவகாமுவுக்கும் புவனேசுவரனுக்கும் அப்போதுதான் நினைவுக்கு வந்தது. அவர்களுடைய ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் நெருங்கிவிட்டது என்று.

கொடி திருமாங்கல்யம், உடல் எல்லாம் ஜரிகையோடு கூறைப் புடவை, விரல் அகலத்துக்கு ஜரிகை போட்ட வேஷ்டி, நூற்றுக் கணக்கில் அழைப்பிதழ்கள்.

ஹோமங்கள் நடந்தன. வெகு விமரிசையாகச் சிவகாமுவின் கழுத்தில் புவனேசுவரன் மங்கல நூலை முடிந்தார்.

ராகவனுக்கு முகமெல்லாம் மகிழ்ச்சி. ஆனந்தக் குரலில் அனைவரிடமும், '' நான் இந்த நிலையில் இருப்பதற்கு அப்பாதான் காரணம். அவரை நமஸ்கரியுங்கள். என் தந்தை என் வாழ்க்கைக்கு வழிகாட்டும் தெய்வம். என் தாய் அன்பின் உருவம்!'' என்றான்.

புவனேசுவரன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்.

ஷஷ்டி அப்த பூர்த்தி முடிந்து வீடு முன் போல் ஆயிற்று. புவனேசுவரனுக்கே ஓர் ஆறுதல் கிடைத்த நிலை. அப்போதுதான் ராகவன் சொன்ன செய்தி அவர் மனக் கசப்பைத் தூண்டிவிட்ட கோலாக அமைந்தது.

''அமெரிக்காவில் நாங்கள் ஏற்படுத்தும் கிளை தொழிற்சாலை நம் இந்தியாவுக்கும் மகிமை, எங்கள் கம்பெனிக்கும் கீர்த்தி. அதை நிறுவுவதற்காக என்னை முக்கியப் பொறுப்பேற்றுப் போகச் சொல்கிறார்கள். பிருந்தாவும் நானும் அவசியம் போக வேண்டியிருக்கிறது. இரு வருடங்களுக்கு ஒரு முறை இந்தியாவுக்கு வந்து உங்களையும் தாய்நாட்டையும் பார்க்கும் சலுகை உண்டு. கணவன் மனைவியான எங்களுக்கு விமானச் செலவும் தருகிறார்கள். நம் தாய்நாட்டுக்கும் எங்கள் கம்பெனிக்கும் புகழைத் தேடித் தரும் வாய்ப்பை என்னால் தட்டிக் கழிக்க முடியவில்லை. இங்கு சென்னையில் ஒரு வீடு வாங்கிவிட்டேன். நமது சொந்த வீட்டில் இருந்து கொண்டு அப்பா பொழுதுபோக்காகச் சில பிள்ளைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்துக்கொண்டு இருக்கலாம். நாட்டுக்கு நல்ல எதிர்காலப் பிரஜைகளை உருவாக்கும் பணியில் ஈடுபடலாம்.''

ராகவன் கூறிக் கொண்டிருக்கும்போதே வாசலில் அவன் ஆபீஸ் மேலதிகாரியும் அவர் மனைவியும் வந்துவிட்டனர். சிறிது நேரம் உள்ளே வந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு ராகவனையும் பிருந்தாவையும் ஒரு விருந்துக்கு அழைத்துச் சென்றனர்.

''ஏதுடா, அறுபதாம் கல்யாணம் அமர்க்களப்படுதேன்னு பார்த்தேன். நம்மைத் தள்ளிவிட்டு அமெரிக்கா போகிற குஷி. மனைவியை அழைச்சுண்டு போறவன் நம்மையும் அழைச்சுண்டு போகக் கூடாதாக்கும்? சொந்த வீடாம், டியூஷனும்.....'' புவனேசுவரன் பழைய புராணத்தை ஆரம்பித்தார்.

சிவகாமு இடையில் பாய்ந்தாள். ''இதோ பாருங்கள். ராகவன் சொல்றாப்பலே நல்ல பிள்ளைகளை நீங்கள் உருவாக்கினேள். ஆனால் தன் சரீரத்துக்கு உரமிடாத தோட்டக்காரன் போல்தான் இருக்கு, உங்க பேச்சும் போக்கும்.''

'' உன் பேச்சு உனக்குத்தான் புரியும்.''

''நீங்க புரிஞ்சுக்க விரும்பவில்லை. அது தான் புரியலை. இப்ப வெளிநாட்டுக்குப் போகும்படி வந்திருக்கிற ஆபீஸ் ஆர்டரைப் பார்த்தேளா, அதுலே கணவன் மனைவிக்குத் தான் எல்லாச் சலுகையும், விமானச் செலவும். அம்மா அப்பாவுக்குக் கிடையாது. சின்ன வயசிலேயிருந்து பாடுபட்டு வளர்த்து முன்னுக்குக் கொண்டு வரும் பொறுப்பை ஏற்கிறவா அம்மா அப்பா. ஆனால் எல்லா ஆபீஸ்களிலும் மனைவிக்கும் குழந்தைகளுக்கும்தான் பிரயாணச் சலுகை, வைத்தியப் பணம், விருந்துபசார அலவன்ஸ் எல்லாம்.''

''சிவகாமு.....''


''கொஞ்சம் இருங்கள். என் மகன் தன்னால் இயன்ற அளவு பெற்றோர்களுக்குக் கௌரவத்தைக் கொடுப்பவன். ஆபீஸில் விருந்து, நாடகம், கல்யாணம் என்றெல்லாம் போகும்போது, அந்த இடங்களுக்கு அழைத்துப் போவதான அனுமதியை அம்மா அப்பாவுக்கென யாசிக்க மாட்டான். அது நமது கௌரவத்துக்கு இழுக்கு என்று நினைக்கிறான். ஆனால் தன் வட்டத்துக்குள் அடங்குவதாக ராம பஜனை, மகாபலிபுரம் பிக்னிக் எனப் பெற்றோர்களின் மகிழ்ச்சிக்கு வழி காட்டுகிறான். நம்முடைய கௌரவத்தையே பெரிதாக மதிக்கிறான் நம் மகன்!'' சிவகாமு உணர்ச்சி வசப்பட்டவளாகப் பேசினாள்.

புவனேசுவரன் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டார். ''சிவகாமு! இனி நான் குழந்தை இல்லை. நம் குழந்தையை எனக்கு நீ உணர்த்திவிட்டாய்'' என்றார்.

ஓரியண்ட்



வலிமை மிக்கது
ஓசையற்றது
நம்பிக்கை வாய்ந்தது




டெஸ்க் மின்விசிறி

ஓரியண்ட் மின்விசிறிகள் நவீன மோஸ்தரில் கட்டப்பட்டுள்ள வீடுகள், ஆபீஸ்கள் மற்றும் அலுவலகங்களின் எழிலுக்கு ஏற்றவாறு இணைந்து பரிமளிக்கும் வகையில் அற்புதமாக உருவாக்கப்பட்டுள்ளன. உங்களுடைய குறிப்பிட்ட தேவைகளுக்கு தகுந்தவாறு பற்பல விதங்களில் கிடைக்கின்றன—ஸீலிங், டேபிள், டெஸ்க், ஸ்டாண்ட், ஆல் பர்ப்பஸ் மற்றும் எக்ஸ்ஹாஸ்ட் மாடல்கள்.


இந்தியாவின் மிகச் சிறந்த அனுபவமிக்க மின் விசிறி தயாரிப்பாளர்களால் தேர்ந்து அளிக்கப்படும் எல்லாவிதமான ஓரியண்ட் மின் விசிறிகளும் அவற்றின் ஈடிணையற்ற சிறப்புத் தன்மைகளுக்கு இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் பெயர் பெற்றவை.

எல்லா மின்விசிறிகளும் இரண்டு வருட உத்தரவாதம் உள்ளவை.


மிக அதிக அளவில் விற்பனையாகும் பெருமை மிக்க தினுசுகள்.




சூப்பர் டீலக்ஸ் டேபிள் மின்விசிறி



ஸ்டாண்ட் மின்விசிறி



டீலக்ஸ் டேபிள் மின்விசிறி



ஆல் பர்ப்பஸ் மின்விசிறி

ஓரியண்ட் விசிறி

உலக முழுவதும் தேர்ந்தெடுக்கப்படுபவை

ஓரியண்ட் விசிறி

ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், 6, கோர் பிப் லேன், கல்கத்தா-54

தொழிற்சாலைகள் : கல்கத்தா, பரிதாபாத்

CC-O-4/73



விண்ணும் மண்ணும்



24. அசுர சக்திகள் அடங்கின

அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் மீதாக விமானம் பறந்த பாதையில் கரிய மேகங்கள் கனமான மழை பொழியத் திரண்டு கொண்டிருந்தன. பெரும்பாலும் வானிலையால் பாதிக்கப்படாத அளவு உயரத்துக்கு விமானம் சென்று விடும். ஆனால் சில தருணங்களில் மேகங்களின் அடர்த்தியும் கனமும் அந்த உயரத்திலும் மிகுதியாக இருந்து தொல்லை கொடுக்கும். இதனால் விமானத்துக்கு ஆபத்து ஏதும் இல்லை. இதைவிடக் கடுமையான புயல் சூழலைக்கூட எதிர்த்துச் சமாளித்து ஆகாயத்தில் தன் பயணத்தைத் தொடரக்கூடிய வகையில் உறுதியாக உருவாக்கப்பட்டதுதான் அந்த போயிங் விமானம். ஆனால் இத்தகைய கனமான கரிய மேகங்களைத் தாக்கிக் கிழித்து வழி ஏற்படுத்திக் கொண்டு செல்கையில் விமானம் சிறிது ஆட்டம் காணும். விமானத்தில் அடிக்கடி பயணம் செய்பவர்கள் இப்படிக் குலுக்கிப் போடுவதை 'டர்புலன்ஸ்' என்ற ஆங்கில வார்த்தையைப் பயன்படுத்தி அலட்சியப்படுத்தி விடுவார்கள். என்றாலும் புதிதாக விமானம் ஏறுபவர்களும் சிலர் இருக்கலாம், அவர்கள் பயந்துவிடக் கூடாது என்பதற்காக விமான ஓட்டி புயல் சூழலை நெருங்குகையில் பயணிகளுடன் ஒலிபெருக்கி மூலம் பேசுவது வழக்கம். விமானம் அண்மையில் இலேசாக ஆட்டம் காணலாம் என்றும் ஆனால் அச்சமுறத் தேவையில்லை, அவரவரும் தத்தமது ஆசனத்தில் பொருத்தப்பட்டுள்ள பெல்ட்டை இடையைச் சுற்றி அணிந்தால் போதுமென்றும் சொல்லுவார்கள்.

கி.ராஜேந்திரன்

இவ்வாறு கூறத்தான் ஃப்ளைட் 909ன் காப்டனும் 'மைக்'கைக் கையிலெடுத்தார். பயணிகளுடன் பேசுவதற்கான பித்தானை ஒரு விரலால் அழுத்த முற்பட்ட அதே தருணத்தில் பால் ஸ்மித் 'காக்பிட்'டுக்குள் மிஷின் கன் சகிதம் நுழைந்தான். காப்டனின் தொண்டையிலிருந்து வார்த்தைகள் ஏதும் வெளிவரவில்லை. 'மைக்'கை எதிரே வைத்துவிட்டு அவர் பால் ஸ்மித்தைப் பார்த்து மிரள மிரள விழித்தார்.

விமானம் நேராக ராவல்பிண்டிக்குச் செல்ல வேண்டும் என்றும் எரிபொருள் போதாதென்றால் பாரிஸ் விமான தளத்தில் டாங்குகளை நிரப்பிக் கொள்ளலா

மென்றும் ஆனால் விமானமோட்டிகளோ பயணிகளோ யாரும் கீழே இறங்கக் கூடாதென்றும் பால் ஸ்மித் தான் திட்டமிட்டிருந்தபடியே காப்டனிடம் அதிகார தோரணையில் சுருக்கமாகப் பேசினான்.

காப்டன் ஒரு பெருமூச்சு விட்டார். ஹைஜாக் நிகழ்ச்சிகள் பற்றிக் கேள்விப்பட்டு அலுத்துப் போனவர் அவர். ஆனால் கூடவே, 'எத்தனை அலுப்பு ஏற்பட்டாலும் பாதகமில்லை; கேள்விப்படுவதோடு நிற்கட்டும். நேரடி அனுபவம் ஏற்பட வேண்டாம்' என்றும் பிரார்த்தித்து வந்தார். பிரார்த்தனை பலிக்காது போகவே இப்போது தலையசைத்து மௌனமாகப் பால் ஸ்மித்துக்குத் தமது ஒத்துழைப்பை உறுதிப்படுத்தினார்.

அந்த வினாடியில்தான் விமானம் மேகக் குவியல்களைத் தாக்கியது.

காற்றழுத்தம் மிகக் குறைவாக இருந்த ஓரிடத்தில் திடுமென்று தன் நிலை இழந்து பல அடி தூரம் கீழ் நோக்கி விழுந்தது. இப்படியும் அப்படியுமாகச் சிறிது நேரம் அலைப்புண்டது. இந்தத் திடீர் அசைவுகளினால் அமர்ந்திருந்த பயணிகள் அதிகம் பாதிக்கப்படவில்லையாயினும் அதன் தொடக்கக் கட்டத்திலேயே 'காக்பிட்'டின் கதவு பலமாகச் சாத்திக்கொள்ள, ஸ்பிரிங் பூட்டு அது மீண்டும் திறந்து கொள்ளாமல் தாளிட்டுக் கொண்டது. முதல் வகுப்புப் பயணிகளுக்கும் டூரிஸ்ட் வகுப்பினருக்கும் இடைப்பட்ட பகுதியில் காவலாக நின்று கொண்டிருந்த ஜிம் கார்ட்டரும் அதே சமயத்தில் நிலைதடுமாறினான். அவனது கண்களும் கவனமும் திசை திரும்புவதுடன், விமான ஓட்டிகளின் அறைக் கதவைத் திறந்து வைத்த பால் ஸ்மித்தின் நோக்கத்துக்கும் இடையூறு ஏற்படுகிற தெய்வாதீனமான இந்த அரிய வாய்ப்பைத் தனஞ்செயன் நழுவ விடவில்லை. அவன் விமானத்தின் இடது புறத்தில் நடை பாதை ஓரத்தில் அமர்ந்திருந்ததால் அவன் வலக்கரம் செயல்பட வசதியாக இருந்தது.

இமைக்கும் நேரத்தையும் வீணாக்காமல் அவன் வீசிய ஓரடி நீளமுள்ள எஃகுக் குழாய், ஜிம் கார்ட்டரின் முக வாயைத் தாக்கிப் பற்களை உதிர்ப்பதற்குப் பதில் இலேசாகக் குறி தவறி நெற்றியில் கண்ணுக்கு மேலே பலமாகப் பட்டு ரத்தம் பீறிடச் செய்தது. கார்ட்டர் வீறிட்டு அலறியபடியே இயல்பாக வலக் கரத்தால் காயத்தை மூடிக் கொண்டபோது துப்பாக்கி கீழே விழுந்தது.

விமானம் ஆட்டம் காணப் போவதையோ ஜிம் கார்ட்டரைத் தாக்குமளவுக்குத் தங்களில் ஒருவனுக்குத் துணிவு இருக்கும் என்பதையோ சற்றும் எதிர்பாராத பயணிகள் இரு அம்சங்களாலும் பீதியடைந்து, வீறிட்டு அலறத் தொடங்கினார்கள்.

வெளியே கரு மேகங்கள் ஒன்றோடொன்று உரசியதன் பயனாக எழுந்த மின்னல் வேகத்தில் விமானத்தினுள் தனஞ்செயன் குனிந்து பாய்ந்தான். இடி விழுந்தாற் போலவே ஜிம்கார்ட்டரின் வயிற்றில் தனஞ்செயனின் தலை சென்று மோதியது. கறுப்பு ரத்தக்காரனின் கரம் இப்போது நெற்றியை விட்டு விட்டுப் புதிய வேதனையை அணைக்க வயிற்றுக்குத் தாவியது. உடல் முன்னுக்கு மடிந்து கொண்டது. அவ்வளவுதான், அவன் பின் கழுத்தில் கோடாலி விழுவதுபோல் தனஞ்செயனின் வலக் கரம் ஒரு கராத்தே அடி கொடுத்தது! அவன் 'சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணியதுபோல் தரையில் குப்புற விழுவதற்கு முன்பாகவே கீழே கிடந்த துப்பாக்கி தனஞ்செயனின் கரத்தில் ஏறி விட்டது!

விமானம் ஆட்டம் காண்பதை உணர்ந்ததுமே காக்பிட்டில் இருந்த பால் ஸ்மித்தின் கவனம் இப்பால் பயணிகள் பக்கம் திரும்பியது. அதே சமயம் இந்த உலுக்கல் குலுக்கலால் அசைவு கண்ட காக்பிட் கதவு மூடிக் கொண்டு அவன் பார்வைக்குத் திரை போட்டு விட்டது. ஆனால் பயணிகள் போடுகிற சத்தம் சாத்திக் கொண்ட கதவையும் மீறி உள்ளே கேட்டது.

விமானம் ஆட்டம் காண்பதால் ஏற்படுகிற குழப்பத்தை ஜிம் கார்ட்டர் வெற்றிகரமாகச் சமாளிக்க வேண்டுமே என்ற கவலை





உண்டானதுதான் தாமதம், பால் ஸ்மித் சரேலென்று திரும்பிக் கதவைத் திறந்து கொண்டு முதல் வகுப்புப் பயணிகளைக் கடந்து ஓடி வந்தான். ஆனால் அதற்கு முன்பாகவே தனஞ்செயன் செயலிழந்து தொய்ந்து போயிருந்த ஜிம் கார்ட்டரைத் தனக்கு முன்னால் பாதுகாப்புக் கவசமாக்கிப் பிடித்திருந்தான். கழுத்தை இறுகப் பற்றியது போலிருந்த அவன் உடையைப் பின் பக்கம் இடக் கரத்தால் முறுக்கிப் பிடித்துக் கொண்டு வலக் கரத்தால் துப்பாக்கி ஏந்தியிருந்தான் தனஞ்செயன். ஜிம் கார்ட்டருக்குத் திமிர என்ன, அசைவதற்குக்கூடத் தெம்பு இல்லை; தைரியமும் இல்லை. அவன் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றால் தனஞ்செயனிட மிருக்கும் துப்பாக்கி தூங்காது. தனஞ்செயனை வீழ்த்த பால் ஸ்மித்தின் துப்பாக்கி, தோட்டாக்களைக் கக்க ஆரம்பித்தால் அவை ஜிம்மின் உடலை ஊடுருவிவிட்டுத்தான் தனஞ்செயனை நெருங்க முடியும்!

''சுடாதே பால்! சுடாதே! தயவு செய்து சுடாதே!'' என்று கதறினான் ஜிம் கார்ட்டர்.

'' துப்பாக்கியைக் கீழே போடு!'' என்று அதட்டினான் தனஞ்செயன், பால் ஸ்மித்தைப் பார்த்து. எதிரியின் கரம் மெல்ல மெல்லத் தொய்வதையும் கண்டான். ஆனால் அது முழுமையாகக் கீழிறங்கித் துப்பாக்கியை நழுவ விடுமுன்னர் அவனுக்கு ஆசை காட்டிப் பார்க்க வேண்டும் என்ற விபரீத எண்ணம் தனஞ்செயன் உள்ளத்தில் எழுந்தது! ஜிம் கார்ட்டரின் கால்களுக்கிடையே தன் இடக் காலைக் கொடுத்து அவனை இடறி விழச் செய்தான். தனஞ்செயனின் பரந்த மார்பு இப்போது பாதுகாப்பின்றித் திறந்து கிடந்தது. அது பால் ஸ்மித்துக்கு அழைப்பு விடுப்பது போலிருந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் துப்பாக்கி உயர்ந்தது. ஆனால் அது ஓர் அங்குலம் மேலே எழும்பு முன்னரே தனஞ்செயனின் துப்பாக்கி இயங்கி விட்டது. அடுத்தடுத்து நாலைந்து தோட்டாக்கள் பால் ஸ்மித்தின் மீது பல்வேறு இடங்களில் பாய அவன், தேகத்தின் பல நரம்புகள் திடீர் திடீரென்று இழுத்துக் கொண்டு வேதனை தருவது போல் இப்படியும் அப்படியுமாக உடலை 'விசுக் விசுக்' கென்று ஒடித்து வளைத்துக் கொண்டே ஒரு சுற்றுச் சுற்றி வந்தான். அதன் பின்னர் அவனுக்கு வலியை உணரும் சக்தி இருக்கவில்லை. ரொம்ப ரொம்ப நிதானமாக அவன் சடலம் சாய்ந்தது.

இதற்குள் கீழே விழுந்திருந்த ஜிம் கார்ட்டர் தட்டுத் தடுமாறி எழுந்து நின்றான். நெற்றியிலிருந்து ரத்தம் வழிந்துகொண்டிருக்க அவன் முகத்தைக் காணவே பயங்கரமாக இருந்தது. ஆனால் அதில் பீதியும் தெரிந்தது. கண்களும் வாயும் பயத்தால் அகன்று விரியத் தனஞ்செயனைப் பார்த்தவாறே ஓரிரு அடிகள் பின்னோக்கி எடுத்து வைத்தான். துப்பாக்கியின் நுனியைப் பிடித்துக் கொண்டு அடிவாரத்தை, அவனை நோக்கி வீசினான் தனஞ்செயன். அவனுடைய ஆரம்ப ஆசை நிறைவேறியது. ஜிம் கார்ட்டரின் நாலு பற்கள் தெறித்து விழுந்தன!

ஜிம் மண்டியிட்டு விழுந்து விசும்பினான். உதடுகள் துடித்தனவே ஒழிய வார்த்தைகள் வெளிவரவில்லை. என்றாலும் அவன் கண்களைப் படிப்பது யாருக்குமே சிரமமாயிராது. உயிர்ப் பிச்சை கேட்டன அவை.

தனஞ்செயனின் கரத்திலிருந்த துப்பாக்கி மீண்டும் இயங்கியது. புழு ஒன்று தரையில் நெளிந்தது; அடங்கியது.

25. உயிர் காத்தவனா? பறித்தவனா?

சாலையோர உணவு விடுதிகள் ஏராளமாக உள்ள நகரம் பாரிஸ். தூசி தும்பு என்பது பெயருக்குக் கூடக் கிடையாதாகையால் அந்நகருக்கு வரும் ஆயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் சுற்றி அலைந்து களைத்துப்போகும் போது மாபெரும் வண்ணக் குடைகள் விரிக்கும் நிழலில் போடப்பட்டுள்ள மேஜை நாற்காலிகளில் காலாற அமர்வார்கள். பீரோ அல்லது காப்பியோ அருந்துவார்கள். 'சாம்ப்ஸ் எலிஸீஸ்' என அழைக்கப்படும் நகரின் மையமான, அகன்ற, நீண்ட, இருபுறமும் மரங்களைக் கொண்ட அழகிய சாலையில் 'ஆர்க் டி ட்ரயம்ப்' எனப்படும் நெப்போலியனின் வெற்றிச் சின்னத்தைப் பார்த்தவாறு இருந்த ஒரு சாலையோர உணவு விடுதியில், அனுபமா, மைக்கேல், தனஞ்செயன் ஆகிய மூவரும் உட்கார்ந்திருந்தனர். 'க்ராய்ஸாண்ட்' என்று பெயர் கொண்ட அர்த்த சந்திர வடிவமுடைய ரொட்டியும் காப்பியும் சாப்பிட்டவாறே பேசிக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்குச் சற்றுத் தொலைவில் பெரிய மீசை போதாதென்று காதுகளிலிருந்தும் ஓரங்குல நீளத்துக்கு ரோமங்கள் நீட்டிக் கொண்டிருக்கக்



ஸ்ரீ கே. எஸ். வெங்குஸ்வாமி (of Hindustan Lever, Bombay) அவர்கள் புதல்வி சௌபாக்யவதி ஜானகி என்கிற சித்ரா B.Sc.,க்கும், டாக்டர் பத்மநாபன் அவர்கள் குமாரர் டாக்டர் **பி. பாபு** Ph D.,க்கும் (of Tata Institute of Fundamental Research) பம்பாயில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்


விசாலாட்சி கம்பைன்ஸ் அளிக்கும்
தீர்க்கசுமங்கலி
தயாரிப்பு:
N.S.ராஜேந்திரன்
திரைக்கதை வசனம்:
A.C.திருலோகசந்தர் M.A.
ஏப்ரல்
12உ
முதல்!
சென்னை மற்றும்
தமிழகமெங்கும்
aries

காட்சி தந்த பிரெஞ்சு ஆசாமி அமர்ந்து பீர் அருந்திக் கொண்டிருந்தான். அவன் இவர்களைப் பின் தொடர்ந்து கண்காணிக்கவென்று அனுப்பப்பட்ட சீருடை அணியாத போலீஸ் ஆசாமி என்பதைத் தனஞ்செயன் அனுபவப் பட்டவனாதலால் தட்சணமே உணர்ந்தான்.

''ஜிம் கார்ட்டரின் துப்பாக்கியைப் பறித்து நீ இயக்கியபோது ஒரு தோட்டாக்கூட வீணாகவில்லை. ஒரு குண்டு கூட விமானத்தைத் தாக்கி அதைச் சேதப்படுத்தவில்லை'' என்றான் மைக்கேல் ஆச்சரியத்துடன்.

''ஆமாம். அத்தனை தோட்டாக்களும் அவர்களுடைய உடல்களுக்குள்ளேயே நன்றாகப் புதையுண்டு உயிர்களை உறிஞ்சின'' என்றாள் அனுபமா கடுகடுப்புத் தொனிக்க.

அதைக் கவனிக்காதவன் போல் மைக்கேல் தொடர்ந்து மன நிறைவுடன் பேசினான்: ''விமானத்தில் குண்டுகள் பாயக் கூடாத இடத்தில் பாய்ந்தால் விமானத்தின் இயக்கமே கூடச் சில சமயம் பாதிக்கப்படலாம் தெரியுமல்லவா?''

''அது பற்றிப் படித்திருக்கிறேன்'' என்றான் தனஞ்செயன். ''வெளியே வான் வெளியில் உள்ள காற்றின் அழுத்தத்தை விட விமானத்தினுள்ளே கட்டுப் படுத்தப்பட்டுள்ள காற்றின் அழுத்தம் அதிகம். அதனால் விமானத்தின் சுவரில் அல்லது ஜன்னலில் ஓட்டை விழுந்தால் கூட ஆபத்துக்கு இடமுண்டு.''

''உனக்குச் சரீர பலம் மட்டுமில்லை. மூளையும் பலமாகத்தான் இருக்கிறது'' என்றான் மைக்கேல், விளையாட்டாக அவன் தலையைச் சுண்டி.

''சென்னையில் நான் கல்லூரியில் படிக்கும்போதே பொழுதுபோக்காக கராத்தே, ஜூடோ முதலிய பயிற்சிகளை மேற்கொண்டேன். கராத்தே கந்தசாமி என்பவர் எனக்குக் குரு. அவர் ஜப்பானில் சில காலம் தங்கியிருந்து இந்தக் கலைகளைப் பயின்றவர்!''

''என்னதான் பயிற்சி பெற்றிருந்தாலும் சமயோசிதமாக இயங்கத் தெரிய வேண்டுமே'' என்றான் மைக்கேல். ''அதனால்தான் சொல்கிறேன், மூளையும் பலம் என்று. விமானத்தின் காப்டன் உன்னைக் கட்டி அணைத்துக் கொண்டதையும், ஹோஸ்டஸ்கள் அடுத்தடுத்து வந்து உன் இரு கன்னங்களிலும் முத்தமிட்டதையும் பார்க்க எனக்குப் பொறாமையாகக் கூட இருந்தது!''

விமான உபசரணைப் பெண்கள் மட்டுமின்றிப் பயணிகளும் வந்து கரத்தை இறுகப் பற்றிக் குலுக்கினார்கள். இளம் பெண்கள் மேனாட்டு முறைப்படி தங்களது அளப்பரிய நன்றியைத் தெரிவிக்க அவனை முத்தமிட்டுக் கௌரவிக்கவும் செய்தார்கள். அவர்களின் அதரங்கள் பதிந்த கன்னங்களில் அவர்களுடைய ஆனந்தக் கண்ணீரும் சிந்தியது.

''அனு! இத்தனை பேர் நன்றி சொன்னார்கள் ஒரு வார்த்தை நீ பேசவில்லையே!'' என்றான் தனஞ்செயன் அவளை ஏமாற்றத்துடன் அணுகி.

அவள் கைப் பையிலிருந்து டிஷ்யூ காகிதம் எடுத்துத் தந்தாள். ''லிப்ஸ்டிக் ஏகமாக ஒட்டிக் கொண்டிருக்

ஒவ்வொரு சிகரெட்டும் 12 நிமிஷ ஆயுளைக் குறைக்கிறது!

சிகரெட் பிடிப்பது மிகக் கெடுதல், பல வியாதிகள் ஏற்படும் என்று புகை பிடிக்கும் ஒவ்வொருவருக்கும் தெரியும். ஆனால் யாரும் சிகரெட் புகைப்பதை நிறுத்துவதில்லை. மேற்கு ஜெர்மானிய நகர் மூனிக்கில் நடைபெற்ற சிகரெட் எதிர்ப்பு மகாநாட்டில் சிகரெட் பிடிக்காதே என்ற இயக்கத்தை நடத்தாமல் சிகரெட் பிடிப்பவர்களிடம் மன மாறுதல் ஏற்படும்படியான பிரசார முறையைக் கையாள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

சிகரெட் பிடிப்பவர்களில் பெரும்பாலோர் புற்று நோய் ஏற்பட்டு அவதிப்படுகிறார்கள்; மூச்சு விடும் உறுப்புக்கள் புகை பிடிப்பதால் பாதிக்கப்படுகின்றன; ஒரு சிகரெட் பிடித்தால் ஆயுள் காலத்தில் 12 நிமிஷம் குறைந்து விடுகிறது என்பதெல்லாம் எடுத்துக் காட்டப்பட்டன.

மியூனிக் நகர மனத் தத்துவ நிபுணர் ஒருவர் கூறுவதாவது:

''புகை பிடிப்பது குண விசேஷத்தினாலன்று. பிறரைப் பார்த்துத் தானும் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். விளம்பரங்களால் சிகரெட் பிடிப்பது ஓர் அந்தஸ்து, கௌரவம் என்ற மனப்பான்மை ஏற்பட்டுள்ளது.

''காரியாலயங்களிலும் வேறு பல பொது இடங்களிலும் புகை பிடிக்கக் கூடாது என்று தடுக்கப்படவேண்டும். கான்டீன்களிலிருந்து சிகரெட் விற்கும் இயந்திரங்களை நீக்க வேண்டும். புகை பிடிப்பவர்கள் சூழ்நிலையில் உள்ள காற்றை அசுத்தப் படுத்துகிறார்கள் என்று விளம்பரங்கள் செய்யப்பட வேண்டும்.''

இவ்வளவு செய்த பின்பும் சிகரெட் பிடிப்பவர்கள் எண்ணிக்கை ஒரு சிறு அளவுதான் குறையும் என்று இம்மகாநாடு கருதியது. சிறு வயதிலேயே இப்பழக்கம் ஏற்படா வண்ணம் தடுக்க வேண்டும் என்று மகாநாடு வற்புறுத்தியது. -யூ.பி.எஸ்.

கிறது, துடைத்துக் கொள்ளுங்கள்'' என்றாள் வெறுப்பை மறைக்காமல்.

அதை இப்போது எண்ணிப் பார்த்த தனஞ்செயன் கூறினான்: ''அத்தனை பேர் பாராட்டியும் என்ன? அனுபமா வுக்கு மட்டும் நான் நடந்து கொண்டது பிடிக்கவில்லை.''

''ஆமாம்; எனக்குப் பிடிக்கத்தான் இல்லை'' என்றாள் அனுபமா அழுத்தம் திருத்தமாக. ''நீங்கள்...''

அவள் மேலே பேசத் தொடங்குமுன் னர் தனஞ்செயன் குறுக்கிட்டான்: ''என்னுடைய நடத்தை பற்றி விவரிப் பதாய் இருந்தால் அதைப் பின்னால் வைத்துக் கொள்ளலாம். இப்போ தைக்கு நமது உரையாடல் சுமுகமாக அமைந்திருப்பதே நல்லது. அதில் சூடு பிடித்தால் நம்மைத் தொடர்ந்து வந் துள்ள அந்த மீசைக்காரனுக்கு ஏதா வது வேண்டாத சந்தேகங்கள் எழலாம். அதனால் நமது பயணம் மேலும் தாமத மடையக் கூடும்.''

ஏற்கெனவே அவர்கள் பயணம் ஒரு நாள் தாமதமாகி யிருந்தது. ஹைஜாக் கர்களை வெற்றி கண்ட பின்னர் விமா னம் பத்திரமாகப் பாரிஸில் இறங் கியது. அதற்கு முன்பே விமானத்தில் நடந்தவை பற்றி விமான காப்டன், ரேடியோவில் செய்தி அனுப்பி யிருந்த தால் பிரெஞ்சுப் போலீஸார் விமானக் கூடத்தில் தயாராக இருந்தார்கள். சட லங்கள் இரண்டும் அவர்களிடம் ஒப் படைக்கப்பட்டன. விமானம் சுத்தப் படுத்தப்பட்டது.

வழக்கமான முக்கால் மணி நேரத் துக்கு அதிகமாக விமானம் பாரிஸில் தாமதிக்கவில்லை. விமான ஓட்டிகள், உப சரணைப் பெண்கள் பயணிகள் ஆகியோர் சில பத்திரிகை நிருபர்களால் சூழப்பட் டுக் கேள்விக் கணைகளுக்கு ஆளாயினரே தவிர போலீஸாரால் அவர்களுக்கு எவ் வித இடைஞ்சலும் இல்லை. பயணத் தைத் தொடர அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் தனஞ்செயனை மட்டும் போலீஸார் காரில் ஏற்றிக் கொண்டு செல்ல முற்பட்டனர். அப்போது மைக் கேலும் அனுபமாவும் தாங்கள் மூவ ரும் சேர்ந்தே வந்ததாகவும் அவனை விட்டு விட்டுச் செல்ல விரும்பவில்லை என்பதாகவும் தெரியப்படுத்தினர்.

''சரி, அதுவும் ஒருவிதத்துக்கு நல்லது தான். எங்கள் அனுமதி கிடைத்ததும் மூவரும் ஒன்றாகவே பம்பாய்க்குப் புறப் படலாம்'' என்றனர் போலீஸார்.

கவலைப்பட ஒன்றும் இல்லை என்பது அம் மூவருக்குமே தெரிந்ததுதான். நடந்த விஷயங்களைப் போலீஸார் முழு மையாகக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். அதை எழுதச் செய்து தனஞ்செயனிடம் கையெழுத்துப் பெறு வதுடன் மற்ற இருவரிடமும் சாட்சிக் கையெழுத்துப் பெறலாம். விலாசங் களையும் குறித்துக் கொள்ளலாம். மடிந் தவர்கள் பற்றி அமெரிக்க அரசுக்குத் தகவல் தெரிவிக்கப் பிரெஞ்சுப் போலீஸ் கடமைப் பட்டிருக்கிறது. இறந்த இரு வரும் தங்கள் பெயர்களை மாற்றிக் கொண்டிருந்தார்களே யானால் இன்னார் என்று இனம் கண்டுபிடிப்பது சற்றுச் சிரமமாயிருக்கலாம். என்றாலும் எஃப். பி. ஐ.யிடம் இந்தப் போக்கிரிகளின் புகைப் படங்களும் விரல் ரேகைகளும் ஃபைலில் இல்லாது போகாது. இவர்கள் பாஸ்போர்ட்டில் உள்ள புகைப்படங் களையும் உயிர் பிரிந்த பின்னர் இப் போது எடுக்கப்பட்ட விரல் ரேகை அடையாளங்களையும் ஒப்பு நோக்க நியூயார்க்குக்கு அனுப்பி வைக்கலாம். அரக்கர்களானாலும் அமெரிக்கப் பிர ஜைகளாதலால் அமெரிக்க அரசின் அனு மதி பெற்றே தனஞ்செயனுக்கு நன்றி தெரிவித்து அனுப்பி வைப்பார்கள் பிரெஞ்சுப் போலீஸார். இந்தச் சம்பிர தாயங்களை முடிக்க இரண்டு நாட்கள் ஆகலாம். அதுவரை அவனை லாக் அப்பில் வைக்க மாட்டார்கள்; ராஜோ பசாரம்தான் செய்வார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தபடியே முதல் தரமான ஹோட்டல் ஒன்றில் மூவருக் கும் அறைகள் ஒதுக்கப்பட்டன. அவர்கள் எங்கு வேண்டுமானாலும் சென்று வரத் தடையில்லை. நிழல் போல் சாமானிய உடையில் ஒரு போலீஸ்காரர் சற்றுத் தூரத்தில் பின் தொடர்வார் என்பது தவிர வேறு ஒரு சங்கடமும் இல்லை. ஒரு மரியா தைக்குத்தான் என்றாலும் அமெரிக்க அனுமதி கிடைக்கக் காத்திருக்கும் போது அது வந்து சேரு முன்னரே தனஞ்செயன் பாரிஸை விட்டுச் சென்று விட்டானானால் அது பிரெஞ்சுப் போலீ ஸுக்கு அவமானம். அதனால்தான் இந்தக் கட்டுப்பாடற்ற காவல்.

பிரெஞ்சு அரசின் செலவில் பாரிஸில் தங்கியிருந்து அந்நகரைச் சுற்றிப் பார்த் தது போலாயிற்று அவர்களுக்கு. இந்த விடுமுறை அதிக நாட்கள் நீடிக்கக் கூடாதே என்ற கவலை ஒருபுறமிருந்தா லும் அனுபமாவுடன் பாரிஸில் பொழு தைக் கழிப்பதில் உள்ள ஆனந்தங்களைப் பற்றியும் எண்ணினான் தனஞ்செயன். ஆனால் அனுபமா அவனை இருநூறு உயிர் களைக் காத்தவனாகக் கருதாமல் இரண்டு உயிர்களைப் பறித்தவனாக நினைக்கத் தொடங்கியதில் அவன் உற்சாகமெல் லாம் தகர்ந்து விட்டது! (தொடரும்)



ஸ்ரீநிவாச கல்யாணம்

ஏதாவது கதாகாலக்ஷேபமோ என்று கேட்கத் தோன்றும். இல்லை. இது ஒரு நாடகம். அதுவும் அமெச்சூர் குழுவினர் நடிக்கும் நாடகம். தொழில் நடிகர்களே திணறிப் போகும்படியான சிரமசாத்தியமான நாடகத்தை நடிக்க முடிவெடுத்ததே அதிசயம்தான். இதில் இன்னொர் அதிசயம் என்னவென்றால் இது ஒரு சங்கீத நாடகம்.

புண்ணிய ஸ்தலமான திருப்பதியில் நடந்த பாலாஜியின் திருக் கல்யாணத்தை மிகவும் பக்தி சிரத்தையுடன் நாடகமாக்கியிருப்பவர் நந்தகுமார். சுமார் இருபது பாத்திரங்களைக் கொண்ட நாடகம், சுவையான உரையாடல்களுடன் விறுவிறுப்பா யிருக்கிறது. க்ஷீராப்தி சயனம், கைலயங்கிரியில் சிவன் — பார்வதி நடனம்; சத்தியலோகத்தில் பிரமதேவன் ஆகிய காட்சிகள் மிகவும் சிறப்பாகக் காட்டப்பட்டன.

தொழில் நடிகர்களே அயர்ந்து போகும் அளவுக்குக் காட்சி ஜோடனைகள் அற்புதமா யிருந்தன. காட்சிகளை வேகமாக இயக்கியது மிகவும் பாராட்டுக்குரியது. கொட்டகை நிறைந்திருந்த ரஸிகப் பெருமக்களின் ஆரவாரக் கையொலியே இதற்குச் சான்று பகர்ந்தது.

பத்மாவதியாக வருபவர், தாரா. பார்வதியாகவும், பத்மாவதியின் தோழியாகவும் வருபவர் மாலா. வகுளமாலிகை என்ற கிருஷ்ண பக்தையாக வருபவர் தனலட்சுமி. மகாலட்சுமியாக வந்த ஹேம மாலினியே கவர்ச்சி மிகுந்த குறத்தியாகவும் வந்து கவர்ச்சி நடனமும் ஆடி அனைவரையும் கவர்ந்து விட்டார். ஒரு நாடகத்தில், (அதுவும் ஓர் அமெச்சூர் நாடகத்தில்!) இத்தனை பெண்களை மேடையில் பார்ப்பது மிகவும் அதிசயமான விஷயம்தான். புராணக் கதையைக் குளறுபடி எதுவும் செய்யாமல் நாடகமாக்கியிருப்பது நாடகத்தின் தனிச் சிறப்பு.


திருமாலாகவும், ஏழுமலையானை ஸ்ரீநிவாசனாகவும் வந்த எஸ். ஆர். பார்த்தசாரதிக்கு வேஷப் பொருத்தம் மிகவும் பொருத்தமாயிருந்தது. பாத்திரத்துக்கு ஏற்ற நடிப்பு. (மேடையில் பாட்டுக்கு ஏற்ப வாயசைக்கும் நாரதரைத்தான் நாம் பார்த்திருக்கிறோம். நிஜமாகவே பாடும் நாரதர் இவர்!) எஸ். சந்தானம் நாரதராக வந்து தம் இனிய கானத்தினால் அனைவரையும் பரவசப்படுத்தி விட்டார். பாடல்களின் கவர்ச்சியான வர்ண மெட்டுக்களும், அவரது இனிய சாரீரமும் நாரதருக்கே ஒரு முழுமையைத் தந்து விட்டன. சபாஷ், சந்தானம்! குழந்தைக் கண்ணனின் பல்வேறு தோற்றங்களில் வந்த சித்திரா, ராதிகா, உஷா ஆகிய சிறுமிகள் நடனமாடி அனைவரையும் மகிழ்வித்தனர்.

பத்மாவதியின் பாத்திரத்தை ஏற்ற தாரா ஏழுமலையானை நேரில் சந்தித்தபோது அடைந்த பரவச உணர்ச்சியை அற்புதமாக வெளிப்படுத்தினார். தனலக்ஷ்மி (வகுளமாலிகை) பக்திபரவச நடிப்பில் அனைவரையும் மிஞ்சிவிட்டார்.

சங்கீதாஞ்சலியின் நவரஸம் ததும்பும் நல்லதொரு நாடகம் ''ஸ்ரீநிவாச கல்யாணம்''. அமெச்சூர் குழுவினரின் மகத்தான சாதனை!

— **காந்தன்**




கதை:
கௌசிகன்
ஆசைகள் மடிவதில்லை
சித்திரம்:
சூர்யா..
13
பயங்கரமான எதிர் விளைவுகளை எதிர் பார்த்து இருளிலே தவிப்புடன் காத்திருந்தான் சதீஷ்...
முனிசாமி என்ன ஆனான்? என் உதை அவனை இப்படியா செயலற்றவனாக்கி விட்டது? அல்லது இந்த அமைதியே ஆபத்தின் அறிகுறியோ?
நீண்ட நேரமாக விடுபட முயன்றதாலும் கட்டிலிலிருந்து கீழே விழுந்து உருண்டதாலும் தளர்ந்திருந்த கைக் கட்டுக்கள் தானாக இற்று விழுந்தன.....
அட..! கைக்கட்டுக்கள் விடுபட்டன. ஆனால் கைகள் மரத்துப் போய்... அதோ தரையில் ஏதோ.. என்னவாக இருக்கும்?
துப்பாக்கியா... அல்லது டார்ச்சா? ம்... அவர்கள் என்ன ஆனார்கள்?... பளபளக்கும் அதை மெள்ள அணுகிப் பார்ப்போம்...
...டார்ச் விளக்குத்தான்! இது உடைய வில்லை. நல்ல நிலையில் தானிருக்கிறது... இதோ ஒளி...
என்ன கோரம்? செத்துப்போய்க் கிடக்கிறானே இந்தச் சோமு. அதனால் தான் நான் எதிர்பார்த்தது ஏதும் நடக்க வில்லை... அது சரி.. சோமு எப்படி இறந்தான்...?


என் உதையினால் நிலை தடுமாறிச் சரிந்து சுழன்று முனிசாமி விழுந்த போது அவன் கையிலிருந்த விரிந்த கத்தி பின்னால் நின்றிருந்த சோமுவின் குரல் வளையில் பாய்ந்து இந்தப் பயங்கரத்தை ஏற்படுத்தி இருக்கிறது...
... இதோ முனிசாமி. நடந்த கோரத்தை உணராதவனாக நினைவிழந்து கிடக்கிறான்.
முனிசாமி... ஏய்!.. இங்கே பார் நன்றாகக் கண்களைத் திறந்து பார். உன்னுடைய எஜமானனின் நிலையைப்பார்..
உன் எஜமானனை நீதான் கொன்றிருக்கிறாய். அவன் குரல்வளையில் பதிந்துள்ள கத்தி உன்னுடையதுதான். அதில் உன் கை ரேகைகள் இருக்கும். சோமுவைக் கொலை செய்து விட்டாய் நீ...
உங்கள் கொடிய செயல்களுக்குத் தீர்ப்புக் கிடைக்கும் வேளை நெருங்கி விட்டது முனிசாமி. உங்கள் ஆட்டமெல்லாம் முடிவுக்கு வந்தாயிற்று.. இனி மேலாவது உண்மைகளை என்னிடம் ஒளிக்காமல் சொல்...
உங்களுக்கு வெற்றி சதீஷ் சார். நீங்க ஜெயிச்சுட்டீங்க. உங்களிடம் உண்மைகளைச் சொல்வதைத் தவிர எனக்கு இனி வேறு வழியில்லை.
தொடரும்



பயமுறுத்தும் அஜீரணமா?
உடன் நிறுத்த ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர்
அருந்துங்கள். மீண்டும் முன்போல்
சாப்பிடத் தொடங்குங்கள்!

அஜீரணத்தை அசட்டை செய்தால் பசியை மட்டுமின்றி பொறுமையையும் இழந்து விடுகிறீர்கள். சிடுசிடுப்பும், எரிச்சலூட்டும் வலியும் ஏற்படுகின்றன.

ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் அருந்துங்கள். வெகுவிரைவில் அது அமிலங்களைச் சமனப்படுத்தி உங்கள் வயிற்றுக்குப் பாதுகாப்பளிக்கிறது. வலியைப் போக்கி எல்லாவித அஜீரணங்களிலிருந்தும் முழு நிவாரணம் அளிக்கிறது.

வயிற்றுக் கடுப்புக்கு ஓபியம் கலந்த ஹ்யூலட்ஸ் மிக்ஸ்சர் கேட்டு வாங்குங்கள்.



C. J. ஹ்யூலட் அண்ட் சன் (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்
சென்னை 600002, கல்கத்தா 700001

SAA/CJH/1197

சென்னை வாசிகளுக்குப் பாரிமுனையும் அங்குள்ள பாரி கம்பெனிக் கட்டடமும் தெரியாமலிருக்க முடியாது. இந்த ஐந்து மாடிக் கட்டடத்தில் பணியாற்றும் லிஃப்ட் ஆபரேட்டர், திரு அந்தோனி. முழங் கால்களுக்குக் கீழ் இரு கால்களையும் இழந்தவர்; மரக் கால்களை இணைத்துக் கொண்டிருப்பவர்.

''நீங்கள் கால்களை எப்போது இழந்தீர்கள்?'' என்று கேட்டதற்கு, ''விதி சிரித்துக் கொண்டிருந்த நேரத்தில்!'' என்று நயமுடனும் மென்னகையுடனும் பதில் அளித்தார் அந்தோனி!

தொடர்ந்து அவர் தம் கதையைக் கூறினார்:

''நான் மூணாறு எஸ்டேட்டில் கண்ணன் தேவன் தேயிலைக் கம்பெனியில் 'சேங்' மேஸ்திரியாக நடமாடிக் கொண்டிருந்தேன்!

''என் கீழ் வேலை பார்த்த சிலர் கடன்களை அடைக்க வேண்டிய பொறுப்பை என் மீது சுமத்திவிட்டு, ஊரை விட்டே ஓடிவிட்டார்கள். அவர்களுக்கு ஜாமீன் ஆக இருந்த நான், என் உடைமைகளை யெல்லாம் விற்றேன். நானும் ஊரை விட்டு வெளியேறி நடந்தேன். அப்போது என் பெயர் ராமன்.....''

''மதம் மாறினீர்களா?''



உடலில் ஊனம்
உள்ளத்தில் ஊக்கம்

விதி சிரித்தாலும் வீரத்தை விடாதவர்!

''ஆமாம். அடைக்கலாபுரத்தில் அனாதை விடுதியில் சேர்ந்தேன். பிள்ளைக இருந்தபடியே நான் எட்டாவது வரையில் படித்து முடித்தேன். ராமன், அந்தோனியானது அப்போதுதான்!''

அந்தோனி இரண்டாம் உலகப் போரின்போது ராணுவத்தில் சேர்ந்தார். போர் முனை அனுபவம் பற்றி மீசையைத் தடவிக் கொடுத்தபடியே பேசினார்:

''பர்மாப் போர் முனை சென்றேன். அங்கே 'தனுஸ்' என்ற இடத்தில் ராணுவ முகாம். ஜப்பானியர் பிரிட்டிஷ் படைகளை உக்கிரமாகத் தாக்க ஆரம்பித்தனர். மேலே போர் விமானங்கள் வட்டமிட்டன. எங்கள் முகாம் குண்டுவீச்சுக்கு இரையாகியது. சுற்றிலும் புகை மூட்டத்தினூடே அழுகை புலம்பல்.. பிணக் குவியல்.... குற்றுயிராகப் பலர் தவித்தார்கள். சிறைப் பிடிக்கப்பட்டனர் சிலர். காயமுற்ற நான், மண்ணில் புதையுண்டு கிடந்தேன். அதிகாலையில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் என்னை மீட்டு விமானத்தில் தில்லிக்குக் கொண்டு சென்று இர்வின் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். டாக்டர்கள் சிகிச்சை செய்தார்கள். ஆனால் இரண்டு கால்களும் இனிப் பயன்படாதென்று முழங்கால் பகுதியிலிருந்து கீழே துண்டித்து விட்டனர்.''

மீண்டும் பெற்றோர்களின் ஊருக்கு வந்த அந்தோனி, அங்கு கடை வைத்து உட்கார்ந்தார். நஷ்டம். கடன். வேலை தேட, கால்களை இழந்த நிலையிலும் முயற்சி மேற்கொண்டார்.

நேருஜியைக் கண்டால் நல்ல காலம் பிறக்கும் என்னும் நம்பிக்கையுடன் ஒரு வெள்ளைத் துரை வாங்கித் தந்த சக்கர நாற்காலியுடன் தில்லிக்குச் சென்றார் அந்தோனி! ''நேருஜியின் கார் வரும்போது உள்ளம் துடிதுடிக்கச் சக்கர நாற்காலியுடன் அவர் கார் அருகே விரைந்து சென்று கும்பிட்டேன்! நேருஜியின் கார் நின்றது. வாழ்வளிக்க வேண்டினேன்.

பூனா அனுப்பப்பட்டார் அந்தோனி. அங்கு 'ஆர்டிபிஷியல் லிம்ப் சென்டரில்' மரக் கால்கள் பொருத்தப்பட்டன.

சென்னை திரும்பிப் பல வேலைகளைப் பார்த்து விட்டு முடிவில் பாரியில் லிப்ட் ஆபரேட்டராகச் சேர்ந்தார்.

''வாழ்வில் வசந்தம் வந்தது! நிரந்தர வேலை கிடைத்தவுடன் திருமணம் செய்து கொண்டேன். இரண்டு பெண்களும், ஒரு பையனும் இருக்கிறார்கள்'' என்றார் அந்தோனி.

கையால் இயக்கக் கூடியதும் கூரை உடையதுமான மூன்று சக்கர ஸ்பெஷல் சைக்கிளில் தினமும் கீழ்ப்பாக்கத்திலிருந்து பாரி கம்பெனிக்கு வருகிறார்.

''எல்லோரும் என்மீது அன்பு காட்டுகிறார்கள். எங்கள் கம்பெனியின் சேர்மன் திரு எச். வி. ஆர். ஐயங்கார் கூட லிப்ட் ஏற வரும்போது 'அந்தோனி நலமா?' என விசாரிப்பார். அதற்கு இப்படிப் பதிலளிப்பேன்'' என்று கூறி, ஒரு மிலிடரி சல்யூட் அடித்துக் காண்பித்தார் அந்தோனி!

பேட்டி: **ஏ. சுவாமிநாதன்**



மஹாராஷ்ட்ரா, தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா
மற்றும் கேரளா மாநிலங்களில் கிடைக்கும்.

இதோ ஒரு கூட்டணி!

உடல் இயக்கம் அனைத்துக்கும் பொறுப்பானவை தசைகள். காலையில் விழிப்பதிலிருந்து இரவு படுக்கும் வரை எல்லா உடல் அசைவுகளுக்கும் காரணமானவை தசைகளே. தூக்கத்திலும் உடல் அசைய, தசைகள் இயங்குகின்றன. நடப்பது முதல் நடனமாடுவது வரை, கண் சிமிட்டுவதிலிருந்து நவரச முக பாவங்கள் வரையில் எல்லாம் தசை இயக்கங்களே.

உடலிலுள்ள சுமார் 650 தசைகளுமாக உடல் எடையில் கிட்டத்தட்ட பாதிக்கு உள்ளன. பெண்களுக்கு இந்த விகிதம் சற்றே குறைவு. தசைகளில் மூன்று வகைகள். உடல் உறுப்புக்கள் பலவும் தசைகளால் ஆனவையே; இதயத் தசையின் அமைப்பு மற்றொரு வகை. இவை தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் தனித் திறமை வாய்ந்தவை. உடல் விரும்பும் அசைவுக்கு உதவும் எலும்புகளை ஒட்டிய தசைகள் மூன்றாவது வகை. இவையே உடல் அசைவுக்கும் எல்லா ஆக்கப் பணிகளுக்கும் ஆதாரம். இந்தத் தசையின் நார்களில் காணும் பட்டைத் தோற்றத்தால் இவற்றுக்குப் பட்டைத் தசை என்று பெயர். (உள்ளுறுப்புக்களின் தசை மிருதுவாக இருக்கும்.) தசை நார்கள் பல இழைகளால் ஆனவை. அவை ஒவ்வொன்றும் பல தசை நுண் இழைகள் கொண்டது. உடல் இயக்கத்துக்கு உதவும் வகையில் தசையின் அமைப்பும் குணங்களும் உள்ளன. உணர்ச்சிகளை ஏற்கவும் அதை இயக்கமாக மாற்றவும், விரியவும், சுருங்கவும், நீட்டவும் வர்காக உள்ளன தசைகள். தசை இயக்கங்களெல்லாம் நரம்புகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை; இந்த இயக்கங்களுக்குச் சக்தி அளிக்கவும் இயக்கத்தால் நேரும் ரசாயன விரயத்தை வெளியேற்றவும் இரத்த ஓட்டத்துடன் தொடர்பு தேவை; எலும்புகளுடனே தசைகள் பலவும் பிணைந்துள்ளன. இவ்வாறு தசை இயக்கம், ஒரு 'கூட்டணி' இயக்கமேயாகும் !

அசைவு என்னும்போது சாதாரணமாகத் தசைகள் ஜோடி ஜோடியாகவே இயங்குகின்றன. கையையோ காலையோ மடக்க வேண்டுமானால், ஒரு வகைத் தசை இறுகி இழுத்துப் பிடிக்கும்; அதன் ஜோடித் தசை தளர்ந்து கொடுக்கும். பிறகு மடக்கிய கையை நிமிர்த்த வேண்டுமானால் முன்பு தளர்ந்த தசை இழுக்கும்; இழுத்திருந்த தசை தளர்ந்து கொடுக்கும். எனவே எலும்பை ஒட்டிய தசை எதுவுமே முற்றிலும் தளர்ந்த நிலையில் எப்போதும் இருக்க முடியாது.

தசைகளின் இயக்கமே உடலின் உஷ்ணத்துக்கு ஒரு முக்கிய காரணம். இயக்கம் நிகழச் சக்தி தேவை. சக்தியை எழுப்ப உடலுள்ளே, தசை அணுக்களிலே நிகழும் ரசாயன மாற்றம் உஷ்ணத்துக்குக் காரணம். குளிர் நாளிலும் சுறுசுறுப்பாக ஏதாவது செயல் புரிந்து கொண்டிருந்தால் குளிர் தெரியாதிருப்பது இதனால் தான் !

உடல் 'சதை' போடு கிறது என்றால் என்ன? உணவு வழங்கும் சக்தி முற்றிலும் பயன்படுத்தப் படாமல் கொழுப்புச் சதையாக மாறுவதே இந்த நிலை. இப்படி நேராதிருக்க உடற் பயிற்சியும் விளையாட்டுக்களும் உழைப்பும் தசைகளுக்கு நல்லது—மிகையாகாமல் மிதமாக இருந்தால். வாழ்க்கைப் பணியும் பொழுதுபோக்கும் வேறு வேறு தசைகளுக்கு ஏற்றதாயிருத்தல் நன்று. ஆபீசில் நாள் முழுதும் அமர்ந்திருப்பவரின்பொழுது போக்கு, நீச்சலோ தோட்ட வேலையோ என்றால் நல்லது. படிப்பது மட்டும் என்றால் நல்லதல்ல, தசைக்கு.

சாதாரணச் சுளுக்கு முதல் வேறு பெரிய நோய்கள் வரை எத்தனையோ இடர்கள், தசைகளுக்கு நேர்கின்றன.

நரம்புகள் தசைகளின் முக்கிய துணை. தசைகளின் ஆரோக்கியம் நரம்பு ஆரோக்கியத்தைப் பொறுத்திருக்கிறது. நரம்பு இழுப்பு போன்றவை தசையைப் பாதிக்கும். முதுகுத் தண்டு நரம்பிலே ஏதேனும் அடிபட்டுச் சேதமானால், அதனால் இயங்க வேண்டிய சில தசை இயக்கங்கள் உணர்விழந்து விடுவதுண்டு. இளம் பிள்ளை வாதமும் இத்தகைய ஒன்றே : ஆனால் அது வைரஸ் கிருமிகள் நரம்பு அணுக்களைப் பாதிப்பதால் நேருகிறது.

'தசைப்பாழ்' எனத் தகும் மஸ்குலர் டிஸ்ட்ரபி என்னும் சிலவகை நோய்களால் தசைஉயிர் அணுக்கள் மெல்ல மெல்லச் சிறுகச் சிறுக வலுவிழந்து வீணாகி



தசை இயக்கத்தைப் பாதிக்கும் எத்தனையோ தீவிர நோய்கள் ஆயிரக்கணக்கான இளைஞரை வீழ்த்துகின்றன.

விடுகின்றன. கொழு கொழு என்று வளர்ந்து சுறுசுறுப்பாக இருக்க வேண்டிய குழந்தை, எழுந்திருக்க முடியாமல், நடக்க முடியாமல், விளையாட முடியாமல் போகிறான். உணவு சீரணம், அறிவாற்றல் ஆகிய பிற வளர்ச்சிகள் சீராக இருக்க, தசை இயக்கத்தில் மட்டும் பின்தங்கி விடுவது என்ன சோகமான நிலை! இப்படிப் பல குழந்தைகள் தமிழ்

'மஸ்குலர் டிஸ்ட்ரபி' எனப்படும் தசை நோயால் வாடும் குழந்தைகளை ஒன்றுகூட்டி உற்சாகமூட்டி உதவ மேநாடுகளில் சங்கங்கள் உள்ளன. அமெரிக்காவில் அத்தகைய சங்கம் ஒன்றுக்கு நடிகர் ஜெர்ரி லூயி தலைவர்.



நாட்டிலேயே இருக்கின்றனர்.

தசையைப் பாதித்துப் பிறகு இதயத்தையே பாதிக்கும் ஒரு வகை டிஸ்ட்ரபியும் உண்டு.

வேறு பல தசை நோய்களும் உள்ளன. நரம்புக் குறையாலோ, ரத்தத்தின் குறையாலோ சில வகை நோய்கள் நேர்கின்றன. குழந்தைகளைப் பாதிக்கும் நோய்கள் வேறு; இருபது வயதுக்கு மேற்பட்டவரை பாதிப்பவை வேறு; போஷாக்குச் சத்துக் குறைகளால் வருபவை வேறு.

எனவே தசை பற்றிய ஏதோ கோளாறு என்ற சந்தேகம் வந்தால் தகுந்த நிபுணரை அணுகி ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை செய்து கொள்வது விவேகம்.

மருத்துவத்திலும் சிகிச்சை முறைகளிலும் நவீன ஆராய்ச்சிகள் நிறைந்துள்ள இன்று, நரம்புகளையும் தசைகளையும் இணைத்துப் பார்த்துப் பரிசீலனை செய்யும் பிரிவு மேநாடுகளில் வளர்ந்து வருகிறது.

தென்னிந்தியாவிலே இத்தகைய நோயாளிகளுக்குக் குறைவில்லை. எனவே அடையாற்றில் வாலண்டரி ஹெல்த் சென்டர் தன்னிடமுள்ள குறைந்த எண்ணிக்கை ஊழியர்களையும் எளிய சாதனங்களையும் கொண்டு உயர்தரமான சோதனைகளையும் சிகிச்சை முறைகளையும் சாதித்திருப்பதைப் பெருமையாகக் குறிப்பிட வேண்டும். இங்கு காணும் ஆர்வத்தையும் அக்கறையையும் உணர்ந்த பிரிட்டிஷ் மருத்துவ நிபுணர் பேராசிரியர் ஜான் வால்ட்டன், இந்த நிலையத்துக்கு—நோய்



விளையாட்டு வீரர்களுக்கு, வீராங்கனைகளுக்குத் தொடர்ந்த பயிற்சியால் சில தசைகள் உறுதியாகவும் பெரிதாகவும் உருவாகும். தசை களைத்துப் போகும்போது கையோ காலோ திடீரென்று இழுத்துப் பிடித்துக்கொள்ளும். கடைசி நிமிஷத் தசை இழுப்பால் எத்தனையோ ஒலிம்பிக் ஆட்டக்காரர்கள் பரிசை இழந்திருக்கின்றனர்.


ஆராய்ச்சி சோதனைகளுக்கு முக்கியமான கருவி ஒன்று கிடைக்க உதவியிருக்கிறார்.

சதை நோய் அறிகுறி பற்றிய ஆராய்ச்சியின் போது மூன்று சோதனைகள் முக்கியமானவை: ரத்தத்தில் உள்ள 'என்ஸைம்' அம்சங்களின் அமைப்பு பற்றிய பரிசோதனை ஒன்று; தசைத் துணுக்கு ஒன்றை எடுத்து நுண் நோக்கியின் உதவியுடன் ஆராய்வது இரண்டாவது; தசையிலே ஒரு நுண் ஊசியைச் செருகி, தசையின் நுட்ப அசைவுகளை மின் கருவியின் உதவியால் ஒலியாகவும் வரிவடிவமாகவும் காணும் இ.எம்.ஜி. சோதனை மூன்றாவது. சாதாரண முறையில் பத்து நாட்கள் பிடிக்கும் சோதனை முடிவுகளை நவீன கருவிகளைக் கொண்டு, ஒரே நாளில் அறியலாம். நோய்க் காரணங்களையும் இப்பரிசோதனைகளால் அறிய முடிகிறது; சில சமயம் சந்தேகப்பட்ட அளவு மோசமல்ல என்ற ஆறுதலும் பெற முடிகிறது.

நோய்கள் குறைந்து மருத்துவம் வளர்ந்து மனித இனம் வாழ உதவும் முயற்சி இடைவிடாத நீண்ட முயற்சி என்பதையே இந்த ஆராய்ச்சிகள் உணர்த்துகின்றன. மருத்துவரின் ஆராய்ச்சியும் அனுபவமும் ஒருபுறம் உதவினால், பொது மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் இன்னொரு புறம் மிகவும் தேவை.

கட்டுரை: தம்பி சீனிவாசன்

ஆலோசனை: அடையாறு வாலண்டரி ஹெல்த் ஸர்விஸஸ் நியூராலஜி பிரிவு.



இப்போது ஹைறமா எப்படி யிருப்பாள்? என்னை மறந்திருப்பாளோ? நினைவில் வைத்துக்கொண் டிருப்பாளோ? எப்படி யிருந்தாலும் இப்போது அதனால் என்ன பயன்? அவள் என்னை மறந்திருந்தாலும் அவளைக் குற்றம் கூற எனக்கு என்ன நியாயம் இருக்கிறது?

முப்பது வருடங்களுக்குப் பிறகு சொந்த ஊருக்குத் திரும்பும் உள்ளக் கிளர்ச்சியுடன் ரயிலை விட்டிறங்கி என் மனைவியையும் பெட்டி படுக்கையையும் ஒரு குதிரை வண்டியில் ஏற்றிக் கொண்டு உட்காருகிறேன். தேக்கிவிட்ட நினைவுகளின் வழிந்தோடலில் மனம், சென்று போன வருடங்களின் மேடு பள்ளங்களில் பாய்ந்தோடுகிறது.

அன்று மாமா ஏதோ கோபத்தில் இருந்தார். நான் இரவுச் சாப்பாட்டுக்கு நேரம் கழித்து வீட்டுக்கு வந்தேன். ''ஏண்டா, உன் மனசில் நீ என்னதான் நினைச்சுக்கிட்டிருக்கே? பொழுதுக்கும் அந்த ஹைறமாக் குட்டியைச் சுத்திச் சுத்தி வந்து அவ வீட்டு வேலையெல்லாம் பார்த்து'கிட்டு, சோத்துக்கு மட்டும் இங்கே வந்துடறியே, இங்க என்ன உங்க அப்பனு சம்பாரிச்சு வைச்சிருக்கான்? அந்தக் குட்டிக்கும் ஒனக்கும்...'' அதற்கு மேல் என்ன நடந்ததென்று எனக்கே நிச்சயமான நினைவில்லை. எல்லாம் கோடழித்த மாதிரி தான் இருக்கிறது — நான் பேச, அவர் ஏச— வாய் மிஞ்சி, கை மிஞ்சி — ஏக அமர்க்களம், ஆரவாரம்!

அப்படியே பிய்த்துக் கொண்டு ரயிலேறியவன்தான் நான். ஹைறமா வீட்டில் சொல்லிக்கொள்ளாமலே கிளம்பி விட்டேன்.

சென்னை சென்ற ஒரு வாரத்தில் இவள்— என் மனைவியின் தந்தையைச் சந்தித்தேன். அவர் வியாபாரத்தில் நான் பாட்டாளியாயிருந்து, கூட்டாளியாக உயர்ந்து, அவருக்கு மாப்பிள்ளையாகவும் ஆன என் அதிர்ஷ்டம் எனக்கே பிரமிப்பா யிருக்கிறது. நான் காண்பதாக நினைத்துக்கொள்ளும் கனவேதான் நான் கண் விழித்த பின்னும் நனவாக நடக்கிறது!

பணக்கார முதலாளி மகளை மணந்ததில் எனக்கு எங்கோ, ஏதோ என் நாணயம் பறிபோன உணர்வு.

இவளுக்கு — என் மனைவி பாகிக்கு இப்போது வலது பொட்டில் நரை தோய்ந்திருந்தாலும் அவள் அழகுதான். எடுப்பான மூக்கின் கீழ் உதடுகள் சிற்பச் செதுக்கலில் அமைதியாக உறங்குகின்றன. நடு வகிட்டிலிருந்து கூந்தல் வங்கி வங்கியாய் நீர் வீழ்ச்சி போல் இரு மருங்கிலும் இறங்குகிறது. மோவாய்க்கடியில் இலேசாய் உருப் படரும் இன்னொரு மோவாய். ரோஜாவின் கன்னக் சதுப்புகள். தனித் தனியாகக் கண்ணைக் கரிக்கும் அங்கத் திரட்சிகள். இன்னும் எனக்கு விட்டுச் சொல்ல இயலாத ஏதோ வனப்பு, வாளிப்பு.

நான் மட்டுமென்ன?

''இந்தப் புருவம் மட்டும் நரைக்காமல் இருந்தால் இன்னும் நல்லா இருப்பீங்க...

கொஞ்சம் ஜ புரோ பெண்சிலைப் பயன்படுத்தட்டுமா?' என்று கொஞ்சுகிறாளே பாகி. வெளியில் தெரியாமல் சிரித்துக் கொள்கிறேன்.

பாகி என்மேல் உயிரையே வைத்திருந்தும் எங்கள் உறவில் பிடிபடாத கசப்பும் புரியாத கோபமும், இனம் தெரியா ஏக்கமும் காரணம் காட்டாது ஏய்க்கிறதே?

இதற்கெல்லாம் காரணம் ஹைமா தானோ? நான் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போன பிறகு என் முகத்தைப் பார்க்க முடியாமல் போய்விட்ட ஏக்கத்தில் அவள் என்னமாய்த் தவித்திருப்பாள்? எப்படியும் நான் வந்துவிடுவேன் என்று இன்னமும் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாளோ?

இப்போது ஹைமா எப்படி இருப்பாள்?

வண்டியில் இன்னும் இரண்டு மைலுக்குக் குறையாமல் போக வேண்டும். நான் வண்டியில் இலேசாகத் தலை சாய்க்கிறேன்.

மனம் ஓடுகிறது.

ஹைமா, உனக்கு நினைவிருக்கா?

அப்போது நம் ஊர்ப் பெரிய கோவிலில் சித்திரைத் திருவிழா. நீயும் நானும் கோயிலுக்குப் போயிருந்தோம். உனக்கும் எனக்கும் இடையே பத்து வயது இருக்குமா? அப்போ நீ பெரியவளாகல்லே. பாவாடை சட்டை தான் போட்டிருப்பாய். சந்நிதியில் என் பக்கத்தில் நின்றவள் சட்டென்று கீழே விழுந்து சுவாமிக்கு நமஸ்கரித்து எழுந்து நின்றாய்.

''என்ன நினைச்சுக்கிட்டுத் திடீர்னு வேண்டிக்கிறே? வேணுங்கிற வரத்தைக் கேள், தருகிறேன்!'' என்று கேலியாக அபயஹஸ்தம் பிடித்தேன்.

''நான் என்ன வேண்டிக்கிட்டேன்னு தெரியாத மக்குச்சாமியா நீ?'' என்று பரிகசித்துச் சிரித்தாய்.

''நீ என்ன வேண்டிக் கொண்டிருப்பாய் என்று எனக்குத் தெரியும்'' உள்ளூற உணர்ந்தும் ஒருவருக்கொருவர் வெளியிட்டுக் கொள்ள வெட்கப்பட்டு இருவரும் சிரித்துக் கொண்டு வெளிப் பிராகார நிலா வெளிச்சத்தில் உட்கார்ந்து நெடு நேரம் இளமையின் இனிமையான கனவுகளில் நீந்திக் கொண்டிருந்தோம். ஹைமா, நேரம் அந்த வேளையிலேயே நின்று விட்டிருக்கக் கூடாதா?

"ராஜா, உனக்கு நினைவிருக்கா?


''அன்னிக்கு ஒரு நாள் அம்மா உன்னிடம் என்னை ஒரு பாடத்தைக் கத்துக்கச் சொன்னா. நீ கத்துக் கொடுத்தே. ராஜா, நீ ரொம்பப் புத்திசாலி! என்னதான் நீ தொண்டைத் தண்ணி வத்தச் சொல்லிக் கொடுத்தாலும் எனக்குப் பாடம் ஏறலே. அதுக்குன்னு என் தொடையிலே 'பட்'டுன்னு ஒண்ணு வச்சியே!

ஹைமா, நீ கீழுதடு பிதுங்க, வலது கன்னத்து நரம்பு 'பட்பட்' என அடித்துக் கொள்ளப் பொங்கி அழுதே! நான் என் நெஞ்சில் ரத்தம் வழிவது மாதிரி உணர்ந்தேன்.

ராஜா, நீ அப்புறம் 'அழாதேடி, அழாதேடி'ன்னு சமாதானம் பண்ணினே. எனக்குச் செட்டுக் கடை சோன்பப்டி வாங்கிக் கொடுத்தே. 'அம்மா கிட்டே சொல்லாதே'ன்னு கெஞ்சினே! நான் சொல்லுவேனா ராஜா! ஆனா அடி வலிச்சா அழாமல் இருக்க முடியுமா?

ஹைமா, அடுத்தாப் போலவே நீ பெரியவளாயிட்டே.

ராஜா நீ நாலு நாளைக்கு ஊமைக் காயம் பட்ட மாதிரி வாயடைச்சுப் போய்க் கண்ணாலே என்னைத் தேடித் தேடித் தவிச்சுப் போனாயே! எனக்குக் கட்டியிருந்த மறைப்புக்குப் பின்னாலிருந்து பார்த்தேன். உன்னைப் பார்க்க ஒரு பக்கம் சிரிப்பா வந்தது. ஒரு பக்கம் பரிதாபமா யிருந்தது. ஆனா அதுக்கப்புறம் எனக்கே ஏக்கம் பிடிச்சுப் போச்சு! ராஜா! அம்மா சட்ட திட்டம் பண்ணிப்



பிட்டா. 'நீ இனிமே யாரோடும் இஷ்டப்படி பேசிக்கிட்டுக் கூத்தடிக்கக் கூடாது'ன்னு. அப்புறம் அப்பா, 'இதென்ன? ராஜா நம்ம பிள்ளை. உன் கட்டுத்திட்டத்தைக் கொஞ்சம் கொறைச்சுக்கோ'ன்னு ஒரு நாள் சத்தம் போட்டப்புறம்தான் அம்மா சித்த அடங்கினா. அப்புறம் என்னை 'உனக்கு நீதான் காவல்'னு சொல்லியே விட்டுட்டா.

அப்புறம் ஹைறமா உனக்கு நினைவிருக்கா? சின்ன வயதில் உன்னைத் தொட்டபோது ஏற்படாத மெய்சிலிர்ப்பை இப்போது நான் உணர்ந்தேன். தொடல்... அது உடைமையின் முத்திரையோ? உறவின் வழித்துணையோ? ஹைறமா! என் கைகள் உன் கழுத்தை வளைக்கையிலும் உன் கன்னித் தூய்மைக்குப் பங்கம் ஏற்படாமல் நம்மைக் காத்தது எது?

ராஜா! உனக்கு நினைவிருக்கா?

ஹைறமா! உனக்கு நினைவிருக்கா?

மாறி மாறி நானே ராஜா நானே ஹைறமா.

வண்டி ஊரை நெருங்குகிறது.

'இப்போ ஹைறமா எப்படி இருப்பாள்?'

இதோ ஹைறமாவின் வீடு.

வண்டியை இங்கேதான் நிற்கச் சொல்லியிருந்தேன். ஆனால் இப்போது மனம் ஏன் இப்படி மிரள்கிறது? அதற்குத் தகுந்தாற் போல் அவள் வீட்டுக் கதவும் சாத்தியிருக்கிறதே!

அவனை மாமா வீட்டுக்கு ஓட்டச் சொன்னேன்.

இப்போ ஹைறமா எப்படி இருப்பாள்?

கேள்விக் கொக்கிகள் என் முகத்தைப் பிராண்ட எழும்பிக் குதிக்கின்றன. முகத்தைக் கைத் துண்டால் மூடிக் கொள்கிறேன்.

வண்டி மாமாவின் வீட்டை நோக்கிப் போகிறது.

மனம் ஓடுகிறது.

நான் இந்த மண்ணை விட்டுப் போன சமயம் என் ஹைறமாதான் எப்படியிருந்தாள்!

சந்தனமும் வெளிச்சமும் சரிபாதி கலந்த நிறம். நாகப் பழ விழிகள் கறுகறுவென்று உள்ளத்தைத் துருவும்.

பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு, வாலைச் சுழற்றிக் கொண்டு தரையில் கால் பாவாமல் பரபரத்துக் கொண்டு மொழுமொழுவெனப் புத்தம் புதிதாய், கடிவாளம் இன்னும் விழாத கன்னி வாயோடு துள்ளிடும் வெள்ளைக் குதிரைக் குட்டி அவள்.

வண்டி மாமா வீட்டு வாசலில் நிற்கிறது.

எங்களை அடையாளம் கண்டு கொண்டு வரவேற்பு அமர்க்களப்படுகிறது.

இப்போது மாமா இல்லை. பிள்ளைகளும் பெண்களுமாகக் குடும்பம் பெருகி விட்டது.

வீட்டை விட்டுத் துரத்தினாலும் அது துரத்தப்பட்டவனின் நன்மைக்கே என்ற ரீதியில் மாமி பாகியோடு இழைந்து இழைந்து பேசுகிறாள்.

என் மனம் அங்கு ஒட்டவில்லை. என்னை எனக்கு இல்லாமல் எல்லாம் தனக்காக்கிக் கொண்ட ஹைறமாவின் நினைவுகளே என்னை வலை பின்னின.

மாமியிடம் ஊரைப் பற்றி விசாரிக்கிறேன். அவள் ஹைறமாவைப் பற்றிச் சொல்லுகிறாள். நானும் அதைத்தானே எதிர்பார்த்தேன்.

உள்ளம் கவர் கள்வன்!®

உள்ளம் கவர் கள்வன்!

இவருக்குக் கவலையில்லை...
இவருக்குக் கிடைத்துவிட்டன

விமல்

தரும் துணிகள்

விமல், உங்களுக்கு எப்போதுமே புத்தம்புதிய துணிகளை வழங்குகின்றனர். இணையற்ற புடவைகள்— மனதைக் கொள்ளை கொள்ளும் இலேசான, குளுமை தரும் மென்மையான புடவைகள்.

பாஷன் உலகில் பிரபலமான உடுப்புத் துணிகளும் உள்ளன, அற்புதமானவை! மனங் கவருபவை. கவர்ச்சியான தோற்றத்துக்கு உயிரானவை. ஜக்கார்டு மற்றும் ப்ளெயின் ஷர்ட்டிங்—டெக்ஸ்லீன் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த சூட்டிங்குகள் உங்கள் அமைதியான எடுப்பான தனித்தன்மைக்கு அழகூட்டுகின்றன. ஊவன் மற்றும் நிட்டெட் ஸ்டரெச் சூட்டிங்குகள் 100% டெக்ஸ்சரைஸ்டு பாலியெஸ்டர்.

எப்போதும் கவர்ச்சியான துணிகளுக்காக...



VIMAL®
A RELIANCE PRODUCT

Texlene

100% டெக்ஸ்சரைஸ்டு
பாலியெஸ்டர் சூட்டிங்குகள்
ஊவன் மற்றும் நிட்டெட்
(ஸ்ட்ரெச்)

C.P.AdS-VF

'Vimal' is registered trademark of Reliance Textile Industries Pvt. Ltd. Ahmedabad.



பேரெழில் கொஞ்சும் முகம்...
...ஃப்ரெஸ்கா தரித்த முகம்
Beauty Talc
fresca
மேல் மினுக்கற்ற மேனிவண்ண
மெல்லழகை உமக்கு
சொந்தமாக்குவதற்கென்றே
உருப்பெற்ற ஒரே ஒரு வதன
டால்கம் : ஃப்ரெஸ்கா.
மணம் கமழும் ஃப்ரெஸ்கா. மென்மை-
யிலும் மென்மையான டால்கம்,
இலேசாக முகத்தோடு இழைந்து,
என்றுமில்லா எழில் பரப்பும்.
fresca
ப்யூட்டி டால்க் கோத்ரெஜ் தயாரிப்பு
முகத்திற்குரிய முதன்மைப் பவுடர்: ஃப்ரெஸ்கா
Interpub/GSF/10/73 Tam

'' ஹைறமாவோட அம்மா அப்பால்லாம் அப்பவே செத்துப் போயிட்டா. அவள் புருஷனுக்கு உள்ளூர்ப் பஞ்சாயத்து போர்டில் வேலை. குடும்பக் கஷ்டம், ஏதோ தீராத மனக்குறை எல்லாமாகச் சேர்ந்து அவளை உருக்கிடுச்சு. பாவம், அவள் கண்ணீரிலேயே கறைஞ்சு போயிருக்கா! இப்போகூட நாலு நாட்களாப் படுத்த படுக்கையாத்தான் கிடக்கிறா...'' மாமியின் இந்த வார்த்தைகளில் என் நெஞ்சு பறந்து தவிக்கிறது.

'என் ஹைறமா... என் ஹைறமா' என்று மௌனமாய் உதிரும் மனத்தோடு மாமியிடமும் பாகியிடமும் சொல்லிக் கொள்ளாமல் கூட அவளது வீட்டை நோக்கி வேகமாக நடக்கிறேன்.

பாகியிடம் என் ஹைறமாவைப் பற்றி மாமி சொல்வாள். சொல்லட்டும். அவள் என் நிறை குறை இரண்டையுமே அறிந்தவள். இதையும் தெரிந்து கொள்ளட்டும்.

என் ஹைறமா, நான் உன்னைக் கைவிட்டு விட்டு ஓடி விட்டேனே, அதற்காகத்தான் உன் கண்ணீரால் என்னை மௌனமாகப் பழி தீர்த்துக் கொள்கிறாயா?

ஹைறமா, நான் உன்னோடு களித்திருந்த நேரங்களின் நினைவுகள் என் நெஞ்சில் ஓயவில்லையே!

அதிகாலையில் குளித்து முழுகி, அழகுத் தோள்களிலும், அலையும் கூந்தலிலும் முத்து நீர் துளிதுளிக்க, முகம் கைகால்களில் மஞ்சள் பளபளக்க, உடலை ஒட்டிய ஒற்றைத் துணியுடன் நீ நிற்கும் கோலத்தில் நான் என்னை இழந்திருந்ததும், என் விரல்களின் மேல் உன் பனிமலர் உதடுகள் பதிந்து ஆசையாய் மீட்டியதும், கவிதை நிரம்பிய என் கரத்தை மெல்ல எடுத்து அதனிடம் நீ எதையோ கேட்டு எதிர்பார்த்திருந்ததும் மெய்யான . அன்பிலா, வெட்கம் கெட்ட இளமை வெறியிலா? ஆழ்ந்த காதலிலா, அல்லது அப்பட்டமான சுயநலத்திலா?

ஹைறமா! நீதான் என் ஆத்ம ராகம்; என் எலும்பின் ரசம்! நீ என் நெஞ்சின் மூச்சு; என் இதயத்தின் அடிவேர்! உன் ஸ்தூல உடலைத்தான் என்னிடமிருந்து பிரிக்க முடியும்!

பித்தனைப் போல் எதிரே வருபவர் கூடத் தெரியாமல் எண்ணங்களின் போர்வையில் தள்ளாடிக் கொண்டு நடக்கிறேன்.



'' ராஜா! ஹைறமா செத்துட்டாளாண்டா!'' என்று சொல்லிக் கொண்டே மாமி ஹைறமா வீட்டை நோக்கி ஓட்டம் நடையுமாக என்னை முந்திக் கொண்டு போகிறாள். நான் அப்படியே நின்று விடுகிறேன்.

அடி என் ஹைறமா!... நானும்பாகியும் சென்னையை விட்டுக் கிளம்பு முன் இடமாற்றமாய் எங்கு செல்வது என்று யோசித்தோம். அவள்தான் என் பிறந்த ஊரைச் சொல்லி ஆசை மூட்டி இங்கு அழைத்து வந்தாள். சென்று போனதால், நான் செத்துப்போனதென்று நினைத்ததை யெல்லாம் உன் நினைவுகளால் நீ உயிர்ப்பித்து விட்டாய், ஹைறமா எந்த நினைவும் எனக்குச் செத்துப் போகவில்லையடி!

நான் மறுபடியும் மாமாவின் வீட்டுக்கே திரும்பி நடக்கிறேன்.

அவள் காரியமெல்லாம் ஆனபிறகு, பாகியும் நானும் அவள் கணவனை அவன் வீட்டுக்குப் போய்ப் பார்க்கிறோம்.

ஹைறமாவின் பெண் தாவணியின் நுனியை விரல்களால் திருகிக் கொண்டு நிற்கிறாள்.

அவள் பெயர் சுபாவாம்.


நான் ஹைறமாவை எப்படி விட்டுப் போனேனோ அப்படியே இருந்தாள் சுபா. அவளையே ஒற்றி எடுத்த அச்சுத்தான் இவள். அவளைக் காட்டிலும் இவள் முகத்தின் செதுக்கல் இன்னும் தெளிவு. வகிட்டிலிருந்து இரண்டு மூன்று பிரிகள் கலைந்து காதோரம் சுருச் சுருளாய்ச் சுழல்கின்றன. எடுப்பான புருவத்தின் கீழ் இமையடியில் வெள்ளை விழி மேட்டில் கரு விழிகள் சுழல்கின்றன. அந்தக் கரு மணி வளைவுக்குள் என் ஹைறமா எனக்குத் தோன்றி, ''என்னைக் கொன்னுச்சு, இவளை என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டு மறைகிறாள். எனக்குப் புல்லரிக்கிறது.

நான் ஒரு தீர்மானத்தோடு அவள் கணவனிடம் சொல்கிறேன்: ''இந்த நிமிஷத்திலிருந்து சுபா என் மகள். பிள்ளையில்லாத நாங்கள் இவளைத் தத்து எடுத்துக்கறோம். இவளை இப்பவே சென்னைக்கு அழைச்சுக் கிட்டுப் போறோம். நீங்க எப்ப வேணுமானாலும் வந்து பார்த்துக்கலாம். இனி இவளைக் கவனித்துக் காப்பதைத் தவிர எனக்கு வேறு இலட்சியமில்லை. இதுதான் ஹைறமாவுக்கு நாம் செய்கிற ஆத்ம சாந்தி!''

நேற்றிரவு நீங்கள் கொசுக்கடியால் துன்பப்பட்டீர்களா?

இன்றே வாங்குவீர் ரிப்லெக்ஸ் க்ரீம் இன்றிரவு விரட்டுவீர் கொசுக்களை!








இன்பமணம் கொண்ட ரிப்லெக்ஸ் க்ரீம் கொசுக்களை விரட்டுவதில் உன்னதமானது. முற்றிலும் தீங்கற்றது; சருமத்துக்குஎரிச்சலூட்டாது. குழந்தையின் மென்மையான சருமத்தின் மீது இதைப் பத்திரமாகத் தடவலாம்.

உங்கள் முகம், கை, கால்களின் திறந்த பகுதிகளின் மீது இரவில் ரிப்லெக்ஸ் தடவுங்கள். கொசுக்களின் தொந்தரவின்றி இரவில் நிம்மதியாகத் தூங்கலாம்.

ரிப்லெக்ஸ் க்ரீம் வெண்மையாக இருப்பதால், உங்கள் சருமத்தில் எளிதில் மறைந்து விடுகிறது. அது துணிகளின் மீது கறை உண்டு பண்ணாது; சருமத்தின் மீது எண்ணெய் படிய விடாது.



நறுமணமுள்ள

ரிப்லெக்ஸ்

கொசுக்களை விரட்டியடிக்கிறது

டாடா ஃபைசன் தயாரிப்பு

கண்மணி ராஜா

ஒரே ஒரு ஊர்ல ஒரு பணக்கார விதவை இருந்தாளாம்; அவளுக்கு ஒரே ஒரு மகனாம்; அவனைத் தாய் சொல்லைத் தட்டாத தனயனாக, இல்லை, இல்லை, 'அம்மாக் கோதண்டராம'னாக அவள் வளர்த்து ஆளாக்கிவிட்டாளாம்; அவன் ஓர் ஏழைப் பெண்ணைக் காதலித்தானாம்; அந்தப் பெண்ணையே, சற்றும் எதிர்ப்புக் கூறாமல் தாய் அவனுக்கு மணம் முடித்து வைத்தாளாம்; மருமகள் வீட்டுக்கு வந்ததும் மகனைத் தன்னிடமிருந்து பிரிக்க முயல்வதாகக் குற்றம் சாட்டி அவளை வீட்டைவிட்டே வெளியே துரத்திவிட்டாளாம்! அதுவும் அவள் தாய்மை அடைந்திருந்த நிலையில்.....! மகன் தாய் சொல்லையும் தட்ட முடியாமல், கட்டின மனைவியையும் கைவிட முடியாமல் திண்டாடித் தெருவில் நின்றானாம். கடைசியில் அவனுக்கு மகன் பிறந்ததும் பாட்டிக்குப் புத்தி கற்பித்துத் திருத்தி எல்லோரையும் ஒன்று சேர்த்து வைத்தானாம் !!!

சிவகுமார் தாய் சொல்லைத் தட்டாத தனயன். நல்ல நடிப்பாற்றல் அவரிடம் இருந்தும் அவர் ஏற்ற பாத்திரம் அவரைக் கையைக் காலைக் கட்டிப் போட்டுவிட்டது. அவர் என்ன செய்வார், ஐயோ பாவம் !

வீட்டுக்கு வந்த மருமகள் லக்ஷ்மி. நமக்கு மன நிறைவைத் தருபவர் அவர்தான். உருக வேண்டிய இடங்களில் உருகி, மனம் மறுக வேண்டிய இடங்களில் மறுகி, கண்ணீர் பெருக்க வேண்டிய இடங்களில் கண்ணீர் பெருக்கி, சீற வேண்டிய இடங்களில் சீறிச் சிறப்பாக நடித்திருக்கிறார்.

மனோரமா மட்டும் இல்லை யென்றால் 'எண்டர்டெய்ன்மெண்ட்' இல்லாமல் போயிருந்திருக்கும். தம் பெண்ணைப் பணக்கார வீட்டு மருமகளாக ஆக்க வேண்டும் என்று அரும்பாடுபடும் தாயாக நடிக்கிறார்.

எம். என். ராஜம் மகனை மடியிலிருந்து இறக்க விரும்பாத தாய். நடிப்பிலும் அவர் கீழே இறங்கி விடவில்லை. எம்.என். ராஜத்துக்கு வில்லியாக நடிக்கச் சொல்லியா தெரிய வேண்டும் ? அநுபவம் பேசுகிறது.

சிறுவன் மாஸ்டர் ரகுராமனின் நடிப்பு ஒன்றுதான் படத்தில் சற்றுப் புதுமையான அம்சமாயிருக்கிறது. அவனை வைத்துத்தான் கதை பின்னப்பட்டிருக்கிறது.

பல சுவையான நிகழ்ச்சிகளைச் சேர்த்துச் சுவை கூட்ட வேண்டியதுதான். அதற்காகக் கண்டவற்றை யெல்லாம் சேர்த்துக் கதம்பமாக்கி எதையுமே ரசிக்க முடியாமல் செய்து விட்டார்களே !

டைரக்ஷன், தேவராஜ் — மோகன். நன்றாகவே இருக்கிறது. கதை, வசனம்—பாலமுருகன்; நம்மையெல்லாம் விசனப்படவே வைத்துவிட்டார். கண்மணி ராஜா தலைப்பு நன்றாயிருக்கிறது. பாராட்டுவோம்.—**கார்த்தன்**



துணைக் காப்டனின் துணைவி



ஸ்ரீமதி ரஞ்சனி வேங்கடராகவன்

பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர் திரு எஸ். வேங்கடராகவனின் வாழ்க்கைத்துணைவியாகியுள்ள ஸ்ரீமதி ரஞ்சனி பி. எஸ். ஸி. பாட்மிண்டன் விளையாட்டில் புலி. நன்றாக நீந்தவும் தெரிந்தவர். கல்லூரி பாட்மிண்டன் போட்டிகளில் வெற்றி பெற்றுப் பல பரிசுகள் வாங்கியுள்ளார். கல்கத்தாவில் உள்ள 'ஜோகமாயா' கலைக் கல்லூரியில் பயின்ற ஸ்ரீமதி ரஞ்சனி ஓவியம் தீட்டுவதிலும் வல்லுநர். இவரது 'ஆயில் பெயிண்டிங்' ஓவியங்கள் சென்னை விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஹிந்துஸ்தானி சங்கீதம் அழகாகப் பாடக் கூடியவர். தாயாரிடமே பரத நாட்டியக் கலையும் பயின்றுள்ளார். இவ்வளவிருந்தும், 'கிரிக்கெட் தெரியும், ஆனால் அதன் நுணுக்கங்கள் தெரியாது' என்கிறார்!

''வேறு என்ன என்ன கலைகள் பயின்றிருக்கிறீர்கள்?''

''மலர் அலங்காரம் — அதாவது ஜப்பானிய 'இகபானா' கலையில் நான் பயிற்சி பெற்றிருக்கிறேன். இக்கலையில் கல்கத்தாவில் பலருக்கு நான் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்திப் பயிற்சி அளித்திருக்கிறேன். இது தவிர, சமையல் கலையும் எனக்கு நன்றாகத் தெரியும்'' என்கிறார் 'ஹோம் சயன்ஸ்' துறையில் பட்டம் பெற்ற ஸ்ரீமதி வேங்கடராகவன்.

''உங்கள் கணவருக்குப் பிடித்தமான உணவு வகைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டு விட்டீர்களா?''

''அவருக்குத் தமிழ் நாட்டு உணவு வகைகள்தாம் மிகவும் பிடிக்கும். சப்பாத்தி, பூரி முதலிய வடநாட்டு உணவு வகைகளில் அவ்வளவாக நாட்டமில்லை.''

''உங்கள் கணவர் இந்தியக் கிரிக்கெட் அணியில் ஒருவராக இங்கிலாந்து செல்லும் போது நீங்களும் உடன் செல்வீர்களா?''

''இம்முறை நான் அவருடன் இங்கிலாந்து செல்வதற்கில்லை. நான் பி. எட். (பள்ளி ஆசிரியைப் பட்டம்) படித்துக் கொண்டிருக்கிறேன். மே மாதம் நான் இறுதி ஆண்டுப் பரீட்சை எழுத வேண்டும்.''

வடநாட்டிலேயே வசித்ததால் ஆங்கிலம், மராத்தி, ஹிந்தி, வங்காளி ஆகியவை நன்கு அறிந்த ரஞ்சனிக்குத் தமிழ் ஓரளவு போதித்தவை கல்வியும், ஆனந்தவிகடனும்! இப்போது பிரெஞ்சு மொழியும் கற்று வருகிறார்!

''உங்களுக்குத் திருமணம் ஆகி இரண்டே நாட்கள்தான் ஆகின்றன. என்றாலும் ஓரளவு உங்கள் கணவருடன் பேசிப் பழகியிருப்பீர்களே. அவரைப்பற்றி உங்கள் கருத்தினைச் சொல்ல முடியுமா?''

''அவர் சில உறுதியான கொள்கைகள் உடையவர். 'வழவழ'ப் பேச்சு அவருக்குப் பிடிக்காது. அடிக்கடி அயல் நாடுகளுக்குக் கிரிக்கெட் நிமித்தம் சென்றாலும் இந்தியாவிலேயே நிரந்தரமாக வசிப்பதைத்தான் அவர் விரும்புகிறார். வருங்காலத்தில் அவருடன் மேலைநாடுகளுக்குச் சென்று வர ஆவல் கொண்டிருக்கிறேன். ஆயினும் கிரிக்கெட் ஆட்டத்துக்காக அவர் அடிக்கடி தனியே அயல் நாடுகளுக்குச் செல்லும்படி நேரிடும். அத்துறையில் அவரது வளர்ச்சிக்கு நான் குந்தகமாக இருக்கவே மாட்டேன்'' என்கிறார் ஸ்ரீமதி ரஞ்சனி.

சம்பிரதாய முறைப்படி பெரியோர்கள் நிச்சயித்து மார்ச் மாதம் 13ந் தேதி ரஞ்சனியின் பிறந்த நாளன்று அவரது திருமணத்துக்கான 'நிச்சய தாம்பூல' விழா நடைபெற்றது என்கிறார் ரஞ்சனியின் அன்னை. ''சனிக்கிழமை என்றால் அவள் கோயிலுக்குப் போகத் தவறுவதே யில்லை. வியாழன், சனி இரு தினங்களிலும் ஒருவேளைதான் சாப்பிடுவாள். பகல் ஒன்றரை மணிக்குப் பிறகு இவ்விரு நாட்களிலும் அவள் எதுவுமே சாப்பிட மாட்டாள். மிகுந்த தெய்வ பக்தியுள்ளவள்'' என்கிறார் ரஞ்சனியின் தாயார். பல்கலையும் பயின்று தேர்ந்து பக்தி நெறியையும் கடைப்பிடித்து வரும் புது மணப் பெண் ரஞ்சனியின் இல்வாழ்க்கை சிறப்பெய்த 'கல்கி' நேயர்கள் சார்பாக, வாழ்த்துக் கூறி விடைபெற்றேன்.

பேட்டி: **ருக்மிணி பாலகிருஷ்ணன்**

நிச்சயதார்த்தம் - நாற்காலியில் அமர்ந்திருப்பவர் வேங்கடராகவனின் தாத்தா ஸ்ரீ தேவராஜ அய்யங்கார்



மூன்று நாள் கலியாணம்



காரியதரிசி அழகப்பன்

வசதி படைத்த செல்வந்தர்கள்கூடச் சிக்கனமாகத் தங்கள் வீட்டுத் திருமணங்களை அரை நாளில் முடிக்கும் இந்த நாளில் சில நண்பர்கள் கூடிக் கொஞ்சம்கூடத் தள ராமல், மூன்று நாட்கள் கோலாகலமாக, விழா நடத்தினார்கள்.

சென்னை ஆபட்ஸ்பரி மண்டபத்தில் சென்னையில் உள்ள நண்பர்கள் கலாசார மன்றம் தன்னுடைய இரண்டாவது கலை, இலக்கிய மகாநாட்டை அமர்க்களமாக மூன்று நாட்கள் கொண்டாடி மகிழ்ந்ததை ஒரு கலை — இலக்கிய திருமண விழா என்றே கூறலாம்! மன்றத்தின் தலைவர் கண. ராமநாதனும், காரியதரிசி அழகப்பனும் வந்து நிறைந்த ஆயிரக்கணக்கான உறுப்பினர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் நண்பர்களையும் சம்பந்திகளாகவே நின்று வரவேற்று மகிழ்ந்தார்கள். மூன்று நாட்களிலும் காலை எட்டு மணியிலிருந்து இரவு பத்தரை மணி வரை இடைவிடாது இன்னிசை, இலக்கியம், நடனம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ததோடு அல்லாமல் வேளாவேளைக்குக் காப்பி, டிபன், உணவு வழங்கியும், வந்திருந்தவர்கள் களைப்படையாமல் கவனித்துக் கொண்டார்கள்.

உணவு இலாக்காவை நிர்வகித்த ஜம்புலிங்கமும் அர்த்தநாரியும், ஜாங்கிரியும் லட்டுமாகப் போட்டுத் திணற அடித்து விட்டார்கள்.

முதல் நாள் காலை கவியரங்கம். திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர், பாரதியார், பாரதிதாசன், தேசிக விநாயகம்பிள்ளை ஆகியவர்கள் தலைமை தாங்கும் யோகி சுத்தானந்த பாரதியைச் சுற்றி வருவதாக ஏற்பாடு. பாரதியார் லேட்டாக வந்தாலும் முதலிலேயே மேடை ஏறிவிட்டு முன்னதாகக் கிளம்பிப் போய்விட்டார். கம்பர் வரவேயில்லை! பாரதியாரைப் பற்றிக் கவி பாட வந்த திருச்சிற்றம்பலக் கவிராயரையும், கம்பர் புகழ் பாட ஒப்புக் கொண்ட கண்ணதாசனையும்தான் குறிப்பிடுகிறேன். திருவள்ளுவரின் பிரதிநிதியாக வந்த தஞ்சை வாணன், 'திருக்குவளை ஆண்டாலும் ஆட்சி மாறி திருச்சூரே ஆண்டாலும்' என்ற வகையிலெல்லாம் தம் கவிதைப் பாதையில் திசை மாறிப் போய்ச் சிலரின் கை தட்டல்களைப் பெற்றார்! கூடவே பலரின் முகச் சுளிப்பையும் கண்டார். அழ. வள்ளியப்பா தேசிக விநாயகம்பிள்ளை பற்றியும், மணசை ப. கீரன் இளங்கோவடிகள் பற்றியும், பொன்னடியான் பாரதிதாசன் பற்றியும் தங்கள் கவிதைகளை அரங்கேற்றினார்கள்.

பிற்பகலில் மன்ற உறுப்பினர்களின் குழந்தைகள் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சிகள் சுறுசுறுப்பாகவும் சுவாரசியமாகவும் இருந்தன. அதைத் தொடர்ந்து மாஸ்டர் சுகுமார் பிரசாத் கிட்டார் வாத்தியத்தில் கர்நாடக இசையை எழுப்பிக் காண்பித்தான். கர்நாடக இசைக்கான வாத்தியங்களைக் கிட்டார் போலக் கையாள்கிற இந்த நாளில் இதுவும் வேண்டியதுதான்!

மாலையில் தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் தலைமையில் ஓய்வுபெற்ற பிரதம நீதிபதி திரு எம். அனந்த நாராயணன் விழாவை முறைப்படி தொடங்கி வைத்தார்.

தலைவர் கண. ராமநாதனும் மன்ற நிர்வாகிகளும் ஆளுநருடன்.



தொடர்ந்து அன்று இரவு பத்தரை மணி வரை, பல்வேறு ரசிகைகளுக்கு ஈடு கொடுக்கும் விதமாக செல்வி மீனாட்சி சபாநாயகத்தின் பரத நாட்டியமும் காவல் படையினரின் கரக ஆட்டமும் 'வெர்சடைல்ஸ்' குழுவினரின் 'பாப்' சங்கீத நிகழ்ச்சியும் அரங்கத்தில் மாறி மாறி நடந்தன.

இரண்டாம் நாட் காலை அரங்கத்தில், 'காதல்' கரை புரண்டு ஓடியது! சங்க, பக்தி, நாட்டுப்புற, புதுமை இலக்கியங்களில் வரும் காதல் காட்சிகளைப் பற்றி நீதிபதி மகராஜன் தலைமையில் நால்வர் பேசினர்.

மதுரைக்கு வந்து காதலில் சிக்கிய கிராமத்தான் கதையைக் கவிதை நயம் சொட்டப் பரம ரசிகர் மகராஜன் சொன்ன போது அரங்கத்திலே ஒரே கலகலப்பு!

மேற்கத்திய இசையும் கிழக்கத்திய நாட்டுப் பாடலும் பக்கத்தில் பக்கத்தில் மாறி மாறி ஒலிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஐஸ்கிரீம் ஒரு வாயும் இளநீர் ஒரு வாயுமாக மாறி மாறிச் சுவைப்பது போலிருந்தது. பிற்பகல் வானொலி இயக்குனர் கோபால் அவர்கள் தலைமையில் நடந்த கருத்தரங்கம் காரசாரமாக இருந்தது.

தொடர்ந்து பல்கலை நிகழ்ச்சிகள். மதுரை சோமுவின் இசை!.... ஒரே அமர்க்களம்......

கடைசி நாள் காலையில் இரண்டு கருத்தரங்க நிகழ்ச்சிகள்! பிரயாண அனுபவங்கள் பேச்சு அரங்கத்துக்கு வி. எஸ். சுப்பையாவும் 'நகைச்சுவை' பேச்சரங்குக்கு ஏ. பி. நாகராஜனும் தலைமை தாங்கினார்கள். நகைச்சுவைப் பகுதியில் பங்கேற்ற 'சோ' என்னவோ ரொம்ப சீரியஸாகப் பேசி முடித்தார்!

விதம் விதமான வெவ்வேறு ரக நிகழ்ச்சிகளைக் கொஞ்சம்கூடச் சுணக்கமில்லாமல், நடத்திக் கொடுக்கும் பொறுப்பை ஜெயம் கொண்டானும் 'நாயர்' ராமனும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். தங்கள் பொறுப்பைத் திறம்பட நிறைவேற்றினார்கள். நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு உறுதுணையாக நின்றார்.

மூன்றும் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை திரைப்பட நட்சத்திரங்களின் இன்னிசை! ஆபட்ஸ்பரிப் பூங்கா ஜனத் திரளால் பொங்கி வழியக் கேட்பானேன்! அந்த நிகழ்ச்சிக்கு முன்பாகப் பட்டி மன்றம் ஒன்று நடந்து முடிந்தது. 'குடும்பப் பாரத்தை மிகுதியும் தாங்குவது ஆணா? பெண்ணா?' என்பது தலைப்பு. தலைவர் குன்றக்குடி அடிகளார் கெட்டிக்காரர். அடுத்த நிகழ்ச்சிக்காகக் காத்திருக்கும் திரளான ரசிகர்களைத் தம் நீண்ட முடிவுரையைக் கேட்கப் பயன்படுத்திக் கொண்டார்! இரு சாராரின் வாதங்களையும் எலிமெண்டரிப் பள்ளி கணித உபாத்தியாயர் போல் கூட்டிக் கழித்துப் பெருக்கி மதிப்பிட்டார்!

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தினர்களைக் கொண்ட நண்பர்கள் கலாசார மன்றம், தங்கள் உறுப்பினர்களின் ஒத்துழைப்பை எடுத்துக்காட்டுவது போல் இந்த விழாவை நடத்தி வெற்றி கண்டு விட்டது!

— **கோமதி சுவாமிநாதன்**


படித்துப் பாருங்கள்

லிஃப்கோவின் திருத்தொண்டு


புத்தக வெளியீட்டு நிறுவனமான லிஃப்கோ எனும் லிட்டில் ஃப்ளவர் கம்பெனியார் பல ஆண்டுகளாகவே ஆஸ்திகப் பணியிலும் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். தற்போது வைதிகர்களுக்கும், சிறுவர்களுக்கும் சமயப் பற்றும், அநுஷ்டானங்களில் ஈடுபாடும் உண்டாகும் பொருட்டுப் பல சிறு சிறு வெளியீடுகளை இலவசமாகப் பரப்பி வருகிறார்கள். குறிப்பாக ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரங்களை வளர்க்கும்பொருட்டு ஸ்ரீ நம்மாழ்வார், ஸ்ரீ வேதாந்த தேசிகர், ஸ்ரீ மணவாள மாமுனிகள் ஆகியோரது அவதார தினங்களில் நூற்றுக்கணக்கான சமய நிலையங்களுக்கு இந்தப் பதிப்புக்களையும், நாமக் கட்டி, ஸ்ரீசூர்ணம் ஆகியவற்றையும் அனுப்பியிருக்கிறார்கள். இவ்விதமே திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் உபந்நியாஸம் நடக்கிற இடத்தில் சைவ சம்பந்தமான பதிப்புக்களையும், திருநீற்றையும் விநியோகித்திருக்கிறார்கள்.

தற்போது தேசத்தில் உணவுப் பண்டங்களில் பஞ்சம், அல்லது விலை உயர்வு, அல்லது இரண்டும் சேர்ந்த துர்பிட்ச நிலை ஓங்கியிருப்பதை முன்னிட்டு சுபிட்ச சாதனங்களாக இரு அரிய நூல்களை லிஃப்கோ நிறுவனத்தார் வெளியிட்டுள்ளனர். ஒன்று, ஸ்ரீ அன்னபூரணி சகஸ்ரநாமம். மற்றது, ஸ்ரீ சாகம்பரீ சகஸ்ரநாமம். துர்கமன் என்ற அசுரனின் ஆட்சியில் பயிர்ப் பச்சைகள் அடியோடு அழிந்து போனபோது, துர்கமனைச் சம்ஹாரம் செய்த துர்காதேவி, 'சாகம்பரீ' என்ற திருநாமம் தாங்கிப் பயிர்ப் பச்சைகளையும் காய்கறிகளையும் செழித்துத் தழைக்கச் செய்தாள். அவளைக் குறித்த இந்த சகஸ்ரநாமத்தை — இருநூறு வருஷங்களாக வழக்கிலில்லாமல் அக்ஞாதவாசம் செய்த அபூர்வ நூலைத் — தேடிப் பிடித்து மறுபடியும் வெளிக்கொணர்ந்திருக்கிறார் பண்டிதோத்தமராகிய பிரம்மஸ்ரீ மாயூரம் எம். ராமநாத தீக்ஷிதரவர்கள். தமிழ் லிபியில் அமைந்த இவ்விரு நூல்களையும் தனிப்பட்ட ஆஸ்திகர்களும், ஆஸ்திக சங்கங்களும் வாங்கி, கூட்டு வழிபாட்டு முறையில் சேர்ந்து ஓதினால் நாட்டிலும் வீட்டிலும் செழிப்பு ஏற்படும் எனப் பதிப்பகத்தார் நம்புகிறார்கள். நாமும் நம்பி நல்லாதரவு தருகிறோம்.

கிடைக்குமிடம்: தி லிட்டில் ஃப்ளவர் கம்பெனி, 8, ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை — 600017. ஒவ்வொன்றும் விலை: ரூபாய் ஒன்று.



Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam



உங்கள்
உலைக்குத் தேவைப்படுவது
பிரத்தியேக ரி:ப்ரேக்டரி சிமெண்டு
அக்கோசெட்-50

ஏசிசி யின் அதிவெப்பம் தாங்கும் :பயர்-சிமெண்டு

உறுதியான ஃபயர்பிரிக் வரிசைகள் மற்றும் இணைப்புகளுக்கு ஏசிசி
அக்கோசெட்-50 அதிவெப்ப ரி:ப்ரேக்டரி சிமெண்டு தயாரிக்கிறது
அதிக இணைப்புச்சக்தி தர அதிமென்மையாக பொடியாக்கப்பட்ட
பிளாஸ்டிக் களிமண், அலுமினா ரி:ப்ரேக்டரி கற்கள், பிரத்தியேக
இரசாயனங்கள் கலவையிலுள் அக்கோசெட்-50 தயாரிக்கப்படுகிறது

இணைப்புவேலை, பழுதுபார்த்தல் மற்றும் ஒட்டு வேலைகள்,
ஃபயர்பிரிக்குகளை இணைப்பு மற்றும் நிர்மாண வேலைகளுக்கு
உபயோகித்தல், உலைகளின் சுவர்கள் மற்றும் தரைகளுக்கு பாது
காப்புபூச்சு, ஒற்றைக்கல் இணைப்பு மற்றும் இறுக்கப்பட்ட
வரிசைகள் இவற்றிற்கு அக்கோசெட்-50 உகந்தது

ஏசிசி அக்கோசெட் தூய அதிவெப்ப இறுகும்
பொருள்களுக்கு தயாரிக்கிறது

தேவைப்பட்டால் தொழில்
நுணுக்க விவரங்கள் இலவசமாக அனுப்பப்படும்

தாராளமாக கிடைக்கும் இடம் : தி சிமெண்ட் மார்க்கெட்டிங் டிவிஷன் ஆஃப்
தி அஸோசியேடட் சிமெண்ட் கம்பெனீஸ் லிட்., மற்றும் அவர்களுடைய விநியோகஸ்தர்கள்,

தி அஸோசியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிட்.

ACC

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)